பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 17ஞாயிற்றுக்கிழமை (02.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 339

# நாகர்கோயிலில் கடும் கடற் சமர்!

# டோறா, ஹூவர் மூழ்கடிப்பு!!

## வழிமறித்துத் தாக்கி கடற்புலிகளின் 6 கலங்களை அழித்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 2

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில், நாகர்கோயில் பகுதியில் நேற்று அதிகாலை வேளை, சுமார் ஒரு மணி நேரம் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடுமையான கடற்சமர் நடைபெற்றது.

இந்தச் சமரில் கடற்படையினரின் டோறோ பீரங்கிப் படகையும், ஹூவர் மிதக்கும் கடற்கலத்தையும் தாங்கள் தாக்கி மூழ்கடித்ததாக கடற்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் விடுதலைப்புலிகளின் கடற்கலங்களின் அணியை வழிமறித்துத் தாக்கியும், விமானத்தாக்குதல் நடத்தியும் அவர்களின் ஆறு படகுகளை அழித்ததாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.



ஹூவர் மிதக்கும் கடற்கலம்

நேற்றைய கடற்சமர் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது:-

வடமராட்சி கிழக்கு, குடத்தனை முதல் நாகர் கோயில் வரையான கடற்பரப்பில் சிறிலங்கா கடற் படையினரின் 20 டோறா பீரங்கிப் படகுகளுடன் ஹூவர்கிராப்ட் கலம் நிலைகொண்டிருந்த போது அந்த அணி மீது சனிக்கிழமை அதிகாலை 5.15 நிமிடங்களுக்கு கடற்புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர். இதில் கடற்படையினரின் டோறா பீரங்கிப்படகு ஒன்றும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நேற்றுக்காலை அதிர்ந்தது; கடல், வான் தாக்குதல்களால் பதற்றம்

கரவெட்டி, நவ. 2

வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில் கடற்பகுதியில் நேற்று அதிகாலை 5 மணிக்கு திடீரெனக் கேட்ட பாரிய வெடிச் சத்தங்களை அடுத்து இடம்பெற்ற மோதலால் வடமராட்சி முழுவதும் அதிர்ந்தது. மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

பெரும் சத்தங்களை அடுத்து வடமராட்சி நோக்கி ஷெல் தாக்குதல்களும், காங்கேசன்துறையில் இருந்து சென்ற கடற்படை கப்பல்களில் இருந்து பீரங்கி தாக்குதல்களும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இந்தியா எந்தவித அழுத்தமும் தரவில்லை

### படையினர் ஓர் அங்குலமேனும் பின்வாங்கமாட்டார்கள்



கொழும்பு, நவ.2

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இந்தியா எந்தவித அழுத்தத்தையும் இலங்கைக்கு தரவில்லை. திட்டமிட்டபடி எந்தவித தளர்வும் இன்றி எமது தரப்பில் தாக்குதல் நடிவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் நடிகர்கள் உண்ணாவிரதப் போர்

### உணர்வுபூர்வமான நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் நோன்பு

சென்னை, நவ. 2

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் தென்னிந்திய நடிகர்கள் நேற்றுச் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.




சென்னை நடிகர் சங்க வளாகத்தில் இடம்பெற்ற இந்த

**2 ஆம் பக்கம் முழுவதிலும் படங்கள்**

உணர்வு பூர்வமான நிகழ்வில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## உரிமைகளுக்கு உத்தரவாதம் இல்லையேல் சமூகத்தில் தீவிரவாதம் பிறந்தே தீரும்!

### உண்ணாவிரதத்தில் கமலஹாசன் பேச்சு



சென்னை, நவ. 2

ஒரு சமூகத்தில் உரிமைகளுக்கு உத்தரவாதம் இல்லாதபோது அங்கு தீவிரவாதம்பிறந்தே தீரும். நாளை சுதந்திரம் மலரும்போது தீவிரவாதிகள் தியாகிகள் ஆவார்கள்.

சென்னையில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நடிகர் கமலஹாசன் இவ்வாறு கூறினார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தா இந்தமாத மத்தியில் இந்தியாவுக்கு

சென்னை, நவ. 2

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ''பிம்ஸ்ரெக்'' எனப்படும் வங்காள விரிகுடா (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயித்தியமலையில் கிளைமோர்த் தாக்குதல்

வவுனியா, நவ.2

மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியில் நேற்று முற்பகல் 8.30 மணியளவில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறப்பு அதிரடிப்படையினர் மீது புலிகள் கிளைமோர் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் படையினருக்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(அ-2)

## மேஜர் ஜெனரல் சந்திர சிறி புதிய பதவிக்கு உயர்வு

யாழ்ப்பணம், நவ.2

இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பதவியேற்கவுள்ளார்.

யாழ்.மாவட்ட தளபதியாக கடந்த சில வருடங்களாக பதவி வகித்து வந்த இவர், இவ்வாரம் புதிய பதவியை ஏற்பார் என்று நம்பகரமாக அறியவந்துள்ளது.

தற்போது பிரதம (20 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. விடுதியில் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ.2

யாழ். பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதிப் பகுதியில் நேற்று மாலை படையினர் திடீர் தேடுதல் நடத்தினர்.

அரியாலை, முள்ளிப் பகுதியில் யாழ்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் நேற்று இளைஞர்கள் இருவர் மரணம்; ஒருவர் 'சயனைட்' அருந்தினாராம்; மற்றவர் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், நவ.2

அரியாலை, முள்ளிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெற்ற சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் 'சயனைட்' உட்கொண்டு மரணமானார். மற்றொரு இளைஞன் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இச்சம்பவம் தொடர்பாக யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் நேற்று மாலை விசாரணைகளை மேற் கொண்டார்.

குறிப்பிட்ட பகுதியில் படையினர் ரோந்து சென்றனர். அந்தப்பகுதியில் உள்ள பற்றைக்குள் பதுங்கியிருந்த நால் வரைக் கண்ட படையினர் அவர்களை விசா ரணை செய்ய முற்பட்டனர்.(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துடிக்கும் தொப்புழ்கொடி உறவுகளுக்காக தமிழக நடிகர்கள் உண்ணாவிரதம்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று சென்னையில் தென்னிந்திய நடிகர் சங்கத்தினர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த தமிழக நடிகர்களில் சிறு பகுதியினர் மேலே. சென்னை நடிகர் சங்க வளாகத்தில் போரினால் உயிரிழந்த ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டு நேற்றுக்காலை உண்ணாவிரதம் ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவரின் சுயசிந்தனைக்குப் பெற்றோர் களம் அமைப்பது அவசியம்

இலங்கையில் மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் மற்றெல்லாப் பரீட்சைகளையும் விட, அதிக சர்ச்சைகளையும், சலசலப்புகளையும் ஏற்படுத்துவதாகத் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை காணப்படுகின்றது. இப் பரீட்சை ஆரம்பப் பிரிவு மாணவர்களை மாத்திர மல்லாது, அம் மாணவர்களின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்போரையும் கலங்கடித்து வருகின்றது. வழமையாகவே ஒவ்வொரு வருடமும் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக சலசலப்புகள் எழுவது வழமைதானென்றாலும், இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள், சங்கம் அமைத்தல், பரீட்சை முடிவுகளின் மீளாய்வை வலியுறுத்தி சட்ட நடவடிக்கை எடுத்தல் எனப் புது வடிவங்கள் எடுத்து நிற்கின்றன.

இந்நிலையில் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான பன்முகத் தன்மையான வெளிப்பாடுகளையும், பார்வைகளையும் "கருத்துக்களம்" என்ற இந்தப் பகுதியின் ஊடாக உதயன் வெளிப்படுத்தவுள்ளான். கருத்துக்களம் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் தகுதி கண்டு பிரசுரிக்கப்படும். அவை சுருக்கமாகவும், காத்திரமாகவும், எவரையும் தனிப்பட்ட முறையில் நோகடிக்காதவையாகவும் எழுதப்படுவது அத்தியாவசியம்.

- ஆசிரியர்.

✱புலமைப்பரிசில் பரீட்சை, மாணவர்களுக்கு மட்டுமன்றி பெற்றோருக்கும் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தும் ஒரு வழிமுறையாக இருக்கின்றது. 10 வயதிற்கு உட்பட்ட பிஞ்சுக் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு ஒவ்வாத ஒரு செயற்பாடாகக் கொள்ளப்படுகின்றது. ஆனாலும் அரச கல்விக் கொள்கை களின்படி வறிய மாணவர்களுக்கு ஊக்குவிப்பை வழங்கி, அவர்களது கல்வியை மேம்படுத்துவதற்கும், மீத்திறனுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான பாடசாலைகளை வழங்குவதற்கும்

**புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை வழிகாட்டும் துறையில் நீண்டகால அனுபவம் நிறைந்தவரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளருமான சரா.புவனேஸ்வரன் புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக வெளிப் படுத்திய கருத்துக்கள் இவ்வாரம் பிரசுரமாகின்றன.**

இப்பரீட்சை நடத்தப்படுகின்றது.

● முன்னைய காலங்களிலும் இதுபோன்ற பரீட்சைகள் நடத்தப்பட்ட போதும் இப்போதுள்ள நெருக்கடியான நிலை தோன்றியதில்லை. காரணம் சித்திபெறும் மாணவர்களுக்கேற்ற பாடசாலைகள் அந்தந்தப் பிரதேசங்களிலேயே இருந்ததோடு வளம்மிக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய ஆசிரியர்களும் இருந்தார்கள். ஆனால் இன்று மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, அதனால் போட்டி ஏற்பட்டு, பல மாணவர்கள் வாய்ப்பை இழந்து உயர்கல்வியைச் சரியான முறையில் தொடர முடியாமல் அல்லற்படுகின்றனர். இப்போது கொண்டுவரப்படுகின்ற எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை இடம்மாற்றும் திட்டம் நல்ல பலனைத் தரும் என எதிர்பார்க்கலாம். இவற்றில் செல்வாக்குப் பிரயோகிக்கப் படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

✱ புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களில் குறைந்த வீதத் தினரே பல்கலைக்கழகம் செல்வதாகக் கல்வியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

● 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கும் பல்கலைக்கழகம் செல்வதற்கும் இடையில் 8 வருடங்கள் இடைவெளிகள் இருக்கின்றன. இதற்குள் தரம் 5 முதல் தரம் 11 வரை 6 வருடங்களும், உயர்தரத்தில் 2 வருடங்களும் அடங்குகின்றன. இந்த 8 வருட கால இடைவெளிகளை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்து கின்றனரா? இக்காலப்பகுதிக் கல்விமுறைகள் தரம் 5 பரீட்சையின் வேகத்தொடர்ச்சியைக் கொண்டு செல்லக்கூடியதா? என்பதனை நாம் நோக்க வேண்டும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பாடத்திட்டத்தில் தரம் 1,2,3,4,5 வகுப்புகளுக்கான சகல பாடங்களையும் உள்ளடக்கிய 14 அம்சங்களைக் கொண்ட முழுமைப்படுத்தப் பட்ட அதிஉயர்வான மதிப்பீட்டிற்காகவே இப்பரீட்சை நடத்தப்படுகின்றது. அதற்காகவே மாணவர்கள் தயார்ப்படுத்தப்படுகின்றனர். அதிலும் சுற்றாடல் சார்ந்த விடயங்களுக்கு ஆசிரியர் கைநூல் மட்டுமே அரசால் வழங்கப்படுகின்றது. இது மாணவர்களின் சுற்றாடல் சார்ந்த எல்லையற்ற சுயகற்றலை விருத்தி செய்வதற்காகவே. ஆனால் அச்சுய கற்றலுக்கான சரியான வாய்ப்பு இல்லாதவர்கள் கல்விப்புலம் சார்ந்த தனிநபர் வெளியீட்டாளர்களால் அச்சிடப்படுகின்ற சுற்றாடல் என்னும் நூலின் துணை கொண்டே வழிப்படுகின்றனர். ஆக உள்ளதைக் கற்கும் 10 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் இல்லாதவற்றைத் தேடிக் கற்கும் ஆற்ற

லைப் பெறுகின்றனர். மாறாக தரம் 06 முதல் அடுத்தடுத்த வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்கும், பாடநூல்கள் வழங்கப்பட்டு அதிலே பாடங்களுக்குரிய வினாவிடைகளும் வழங்கப்படுகின்றன. இது மாணவர்களின் சுய

கற்றலை மந்தமாக்கி, தேடலை இல்லாமல் செய்து, அவர்களின் உத்வேகத்தை படிப்படியாகக் குறைத்து, பல்கலைக்

வீடு திரும்புகின்றார்கள். இதில் எங்கு தவறிருக் கின்றது என்பதனை இன்னும் தான் எவரும் கண்டு கொள்ளவில்லை. பாடசாலைகளில் வருகின்ற பெறுபேறுகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டிய பாடசாலையின் ஆசிரியர்கள்

படிப் படியாக அந்த உரிமையை இழந்து வருகின்றார்கள். (இது எல்லாப் பாடசாலைகளுக்கும் பொருத்தமானதல்ல).

நிலை உள்ள ஒரு மாணவனால்/ மாணவியால் எதிர்கொள்ளப்படுவது. அவ்வேளை அம் மாணவனோ, மாணவியோ இருக்கும் மனோ நிலையைப் பொறுத்தே பெறுபேறுகள் அமையும்.

இப் பரீட்சையில் வினாத்தாள் I இல் கேட்கப்படும் அநேக வினாக்களுக்கு விடைகள் கொடுக்கப்படுவதால் தெரியாத வினாக்களுக்கான சரியான விடைகளும் வருவதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றன. அவையும் புள்ளிகளை அதிகரிக்கச் செய்யும். இந்த வினாத்தாள் I இல் 40 வினாக்களுக்கும் 100 புள்ளிகள். ஒவ்வொரு சரியான விடைக்கும் 2 1/2 புள்ளிகள். 40 வினாக்களில் தற்செயலாக.5 சரியான விடையாக இருந்தால் 12 1/2 புள்ளிகள் மேலதிகமாகக் கிடைக்க வாய்ப் பிருக்கின்றது. எனவே கூடிய புள்ளிகள் எடுப்பது, குறைந்த புள்ளிகள் எடுப்பது என்று நோக்குவது ஏற்புடையதாகாது.

அதேவேளை மிகத் திறமையான பிள்ளை மிகக் குறைவான புள்ளி




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை மேம்பாடும் தாக்கமும் ஒரு நோக்கு

02

கழகம் செல்லும்போது அவர்களின் வேகம் பழக்கப்பட்ட படிமுறைகளுக்கு ஊடாகவே பரீட்சை முடிவுகளாக வெளி வருகின்றன. இதுவே யதார்த்தம்.

**ஒரு முறை மட்டுமே தோற்றக்கூடிய பரீட்சை**

✱புலமைப்பரிசில் பரீட்சைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நாடாளாவிய ரீதியில் எல்லோராலும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

● ஏனைய பாடசாலைப் படிமுறைப் பரீட்சைகளைப்போல் அல்லாது இப்

✱ இம்முறை (2008) நடைபெற்ற பரீட் சையில் வினாப்பத்திர முறையில் மாற்றம், மதிப்பீட்டில் தவறு ஏற்பட்டுள்ளதென்று ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது.

● காலத்துக்குக்காலம் சித்திபெறாத பிள்ளைகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மத்தியில் இது போன்ற கருத்து வெளியாவது வழமை. அது தவறும் இல்லை. ஆனால் பரீட்சைத் திணைக்களம் வெளியிடும் வினாத்தாள் பற்றி விமர்சனம் செய்வது தவறு. ஏனெனில் பரீட்சைத் திணைக்களத்தில் கல்விப் புலம் சார்ந்த பலர் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் பலகோணங்களில், பலமுறை நடைபெற்ற பரீட்சைகளைப்

பெறுவதற்கும், மிக மந்தமான பிள்ளை மிகக் கூடுதலான புள்ளி எடுப்பதற்குமான வாய்ப்புக்கள் குறைவு என்றே கூறலாம்.

✱ எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காத மாணவர்கள் மீளாய்வு செய்யும் போது, பாடசாலை அதிபருக்கூடாக, வலயக் கல்விப் பணிப் பாளருக்கூடாக, மாணவரின் பாடசாலை சார்ந்த பதிவேடுகள், தவணைப் பரீட் சைப் பெறுபேறுகள், அதிபரின் சிபாரிசு என்பவற்றோடு மீளாய்விற்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் பாடசாலைப் புள்ளிகளோ, சிபாரிசுகளோ, புள்ளியிடுவதற்கு உதவமாட்டாது. அதேவேளை அவை

## நல்ல பெறுபேறுகளுக்குச் சொந்தக்காரராக இருக்க வேண்டிய ஆசிரியர்கள் தமது உரிமையை இழந்து வருகிறார்கள்!

புலமைப்பரிசில் பரீட்சைக்குக் குறித்த வயதில் ஒருமுறை மட்டுமே தோற்ற முடியும். மறுமுறை தோற்ற முடியாது. ஆனால் க.பொ.த.(சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை என்பவற்றை அடுத்தடுத்த முறைகளும் தோற்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஏன் உயர் கல்வி முறைகளில் ஒரு பரீட்சையில் சித்திபெறாவிட்டாலும், அடுத்த படி முறைப் பரீட்சை (Semister) எழுதும் போது முன்னர் சித்திபெறாத பாடங்களுக்கும் தோற்றி சித்திபெறலாம் என்று உள்ளது.

எனவே ஒருமுறை, குறித்த வயதில், அரச கொடுப்பனவு அல்லது பாடசாலைத் தேர்வு என்பவற்றுக்காக தரம் 5 இல் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பொருத்தமானதா இல்லையா என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

இவற்றுக்குமேலாக பெற்றோர் மத்தியில் தங்களுடைய பிள்ளை மீத்திறன் உள்ள மாணவர்களோடு சேர்ந்து கற்கின்றபோது கல்வியில் உயர்வடையும் என்ற கருத்தும் இருக்கின்றது.

இன்னுமொரு பக்கத்தில் நல்ல பாடசாலை என்பதைவிட நல்ல நண்பர்களை தங்களுடைய பிள்ளை கொண்டிருக்க வேண்டும் என நினைப்பதும் உண்டு. ஏனெனில் பிரபலமான பாடசாலைகளில் கற்கும் அநேக மாணவர்களிடையே போட்டி அதிகரிக்க, தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களும் அதிகமாகின்றனர். இவர்கள் பாடசாலை முடிந்ததும் பாடசாலைச் சீருடையுடனேயே தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்றுவிட்டு

பகுப்பாய்வு செய்தே இதனை வெளியிடுகின்றார்கள். எல்லோருக்கும் அதனைக் காட்டி 'இது சரியானதா?' என்று அபிப்பிராயம் கேட்க வேண்டிய தேவை அவர்களுக்கில்லை.

ஆனாலும் இம்முறை நடைபெற்ற பரீட்சையில் வினாத்தாள் I இல் தெரிவு செய்யப்படும் விடைகளுள் வழமைக்கு மாறாக மூன்றிற்குப் பதிலாக நான்கு விடைகள் தொகுக்கப்பட்டிருந்தன. மாணவர்களுடைய தேடும் நேரத்தை அதிகரித்திருந்தது. இதுவொரு சிறிய மாற்றம். இம் மாற்றம் தொடர்பாக ஏற்கனவே பாடசாலைகளுக்குத் தெரியப் படுத்தப்பட்டதா? என்ற வினாவிற்குச் சம்பந்தப்பட்டவர்கள் பதில்தேட வேண்டும்.

அடுத்தது, மதிப்பீட்டில் குளறுபடி என்ற கருத்து. மதிப்பீட்டைப் பொறுத்தவரையில் குளறுபடிகள் நடப்பதற்கு வாய்ப்புக் குறைவு. ஏனெனில் வினாத்தாள் I திருத்தும் பணியை ஒரு குழுவும், வினாத்தாள் II திருத்தும் பணியை இன்னொரு குழுவுமே செய்கின்றது. திருத்தப்படும் வினாத்தாள் முதலாவது பரீட்சகரால் திருத்தப்பட்டு, இரண்டாவது பரீட்சகரால் செவ்வை பார்க்கப்பட்டு, 3ஆவது பரீட்சகரால் முழுமையாக்கப்பட்டிருப்பின் தவறு நடப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே கூறலாம்.

✱ திறமையுள்ள பிள்ளைகள் சிலர் சித்தி பெறத் தவறியிருக்கிறார்கள். திறமையில்லாத சிலர் கூடிய புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

● பரீட்சை என்பது குறித்த ஓர் இடத்தில், குறித்த நேரத்தில், குறித்த மன

இது மீளாய்வு செய்யக் கூடியது என்பதனை உறுதிசெய்யும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒன்றுதான் வாழ்க்கையை முழுக்க முழுக்க தீர்மானிக்கும் சக்தி கொண்டதல்ல. வாழ்க்கையில் கடந்துசெல்ல வேண்டிய படிகள் பலவுள்ளன. ஐந்தாம் வகுப்பில் ஏற்பட்ட ஏமாற்றத்தை மனதில் கொண்டு, தீவிரமாக முயற்சித்து ஏனைய பரீட்சைகளை வென்று உயர் வடைய முடியும் என்பதனை பலர் எடுத்துக் காட்டியுள்ளனர். அதன்படி இவர்கள் நடந்தால் வாய்ப்புக்கள் அதிகம் உண்டாகும். அதேவேளை சித்திபெற்ற இறுமாப்போடு எங்களுக்கெல்லாம் தெரியும் எனச் சித்தி பெற்ற பிள்ளைகள் நடந்தால் அது அவர்களுக்குத் தோல்விகளையே தொடர்ச்சியாகக் கொடுக்கும்.

பிள்ளைகளின் செயற்பாடுகளில் பெற்றோர் ஆரோக்கியமான முறையில் பங்கெடுப்பது அவசியம். இனிவரும் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் சுய சிந்தனைக்குக் களம் அமைத்துக் கொடுக்க பெற்றோர் முன்வர வேண்டும். திணிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மிகமுக்கியமாக அதிபர், ஆசிரியர்களோடு நல்லுறவைப் பேணி அவர்களோடு அடிக்கடி தொடர்பு கொண்டு பிள்ளைகளின் மனவளர்ச்சிப் படியை அவதானித்துக் கொள்ளுங்கள். எவை பொருத்தமான பயிற்சிகள் என்று கேட்டு அதற்கேற்ப வழிப்படுத்துங்கள். ஏனெனில் 10 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளிடம் காணப்படும் சுயவழி நடத்தைகளை அது பாதிக்காதவாறு இருத்தல் வேண்டும். இதுவே பிள்ளைகளின் எதிர்காலத்தை மேம்படுத்துவதற்கான சிறந்த அணுகுமுறையாக அமையும். ✱✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

ELECTRICALS, ELECTRONICS வியாபார நிலையத்திற்கு தினசரி வரவு, செலவுக் கணக்கு எழுதுவதில் அனுபவமுள்ள Accounts படித்த இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நேரில் வரவும்.

**JAFFNA ELECTRICALS**

141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/555171)

## STUDY IN SINGAPORE

**மாணவர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு**



- கணனித்துறை, சட்டத்துறைகளில் பட்டதாரியாகலாம்.
- ஒருவருடக் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் U.K, கனடா, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கல்வியைத் தொடர வாய்ப்புண்டு.
- படிப்புடன் பகுதிநேர வேலைவாய்ப்பு
- 100% உத்தரவாதத்துடன் VISA
- பாதுகாப்பான தங்குமிட வசதிகள்
- மேலும் உங்களுக்குத் தேவையான சகல கற்கை நெறிகளையும் எம்மால் பெற்றுத்தரப்படும்.

**மாணவர்களே உங்கள் விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்.**

தொடர்புகளுக்கு: 131/1, HILL STREET, DEHIWALA.

யாழ்.தொடர்புகளுக்கு: 0777179150

(Send SMS Monday - Friday. 8.00a.m - 6 p.m or Call after 6 p.m)

சிங்கப்பூர் தொடர்புகளுக்கு:-

006590595217

E-mail:-shakthi31@rocketmail.Com

பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்தை E-mail செய்யவும்.

இலங்கையில் எந்தப் பட்டங்களைப் பெற்றிருப்பினும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முடியும். (சி/555688)

## கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை

இளவாலைப் பகுதியில் தோட்ட நிலங்களில் கட்டாக்காலி கால்நடைகள் மற்றும் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

கட்டாக்காலி கால்நடைகள் அப்பகுதி விவசாயிகளால் பிடிக்கப்பட்டு விவசாய சம்மேளத்திடம் ஒப்படைக்கப்படுவதாகவும், பன்றிகளைக் கட்டுப்படுத்த முடியாதநிலை காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். பன்றித் தொல்லையைக் கட்டுப்படுத்த முள்வேலிகளை அமைத்துத் தருமாறு அப்பகுதி விவசாய சம்மேளனம் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களைக் கோரிய போதும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லையென சங்கத் தலைவர் தெரிவித்தார். (202-38)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




ஜேர்மனியில் வசிக்கும்
திரு.திருமதி சுந்தரராஜா - தேவிகா
தம்பதியரின் செல்வப்புதல்வன் சுஷாந்
தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை ஜேர்மனியில் வசிக்கும் அப்பா, அம்மா, இலங்கையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அத்தை, மாமா, மச்சான்மார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், சுவிஸில் உள்ள சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்கா, ஜேர்மனியில் உள்ள சித்தப்பா, சித்தி, அக்கா, தம்பி, U.K. இல் உள்ள மாமா அனைவரும் நயினாதீவு, சுதுமலை, கலட்டி அம்மன் அருள் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழவேண்டுமென்று வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
மாமா - வி.மோகனதாஸ்.
9, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(79602)

## விற்பனைக்கு

5 தொன் ஏற்றக்கூடிய புத்தம் புதிய (டாட்டா) லொறி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 6944 (79801)

## காணவில்லை

கடந்த 24.10.2008 தொடக்கம் கறுப்பு, சிவப்பு நிறமுடைய கட்டைக் கொம்புடன் R.S என்னும் குறியீட்டைக் கொண்ட பசு மாட்டைக் காணவில்லை. தயவுசெய்து கண்டவர்கள் ஆ.மணியம், 15/25, 3ஆம் ஒழுங்கை, அரசடி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் அல்லது 0776949770 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## விற்பனைக்கு

நீர் இறைக்கும் இயந்திரங்கள் றொபின் Ey-20, றொபின் Ey-15 ஆகிய மொடல்களும், வில்லியஸ் Mark-12 மற்றும் Mark-25 போன்ற இயந்திரங்கள் உடன் விற்பனைக்கு.

தொடர்பு:
103, கோயில் வீதி,
(ICRC இற்கு அருகில்), யாழ்ப்பாணம். (79803)

## 10 ஆவது பிறந்ததின வாழ்த்தும் பாராட்டி வாழ்த்தும்



2008 ஆம் ஆண்டு தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 124 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாசாலை மாணவன்

**செல்வன் க.தேவதேவன்**

அவர்களின் பிறந்த தினமான இன்று (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை கல்வியில் மேலும் சாதனைகள் பெற்று கைதடி வீரகத்திப் பிள்ளையார் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா - சி.கணேசமூர்த்தி, அம்மா- சந்தானலட்சுமி,
தங்கை - கஜனா மற்றும் அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா,
பெரியப்பா, சித்தப்பா, அத்தை மற்றும் குடும்பத்தினர்.
கைதடி கிழக்கு, கைதடி.
(79569)

## திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள் (03-11-2008) திங்கட்கிழமை முற்பகல் 09.45மணி தொடக்கம் 10.40 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

**சிறி நதியா டிஜிற்றல் கலர் லாப் & ஸ்ரூடியோ**

எனும் புதிய ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு திறக்க இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
சிறி நதியா ஸ்தாபனத்தினர்.

இல.108A ஏக்சன் பிளாஸா கட்டடம்
நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே 0212228412.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் புலிகள் செய்த மாயம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வான் புலிகள் கடந்த செவ்வாய் இரவு மன்னார் மாவட்டம் தள்ளாடி இராணுவ முகாம் மீதும்,



*சீனத் தயாரிப்பு ஜே.வை - 11 ரக ராடர் JY - 11 LOW ALTITUDE 3D AIR SURVEILLANCE RADAR*

தலைநகர் கொழும்பின் களனி திஸ்ஸ அனல்மின் நிலையத்தின் மீதும் திடீர் தாக்குதல்களை நடத்தி விட்டுப் பாதுகாப்பாகத் தமது தளத்துக்குத் திரும்பியிருக்கின்றமை தென்னிலங்கையில் - குறிப்பாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் இடையே - பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

தலைநகர் கொழும்பில் தாக்குதல் நடத்திய புலிகளின் விமானம் இத்தாக்குதலுக்காக சுமார் ஒரு மணி நேரத்துக்கும் கூடுதலாக இலங்கைக்கு மேல் வானத்தில் பறப்பில் ஈடுபட்டிருந்தும் கூட, மிகையொலி ('சுப்பர்சொனிக்') ஜெற் விமானங்களை வைத்திருக்கும் இலங்கையினால் அதனைத் தேடிக் கண்டு பிடித்து இலக்கு வைத்து அழிக்க முடியாமல் போனமை எங்ஙனம் என்ற கேள்வி தங்களுக்குள் குடைய இப்பிரச்சினைக்கு - அல்லது இயலாமைக்கு - காரணம் என்ன என்பதைத் தேடி அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றார்கள் கொழும்பின் உயர்பாதுகாப்பு அதிகாரிகள்.

வன்னியில் - பெரும்பாலும் இரணைமடுவில் உள்ள புலிகளின் விமான ஓடுபாதையிலிருந்து அன்றிரவு 10.20 மணியை அடுத்து முன், பின்னாக புறப்பட்டு பறக்க ஆரம்பித்த புலிகளின் இரண்டு விமானங்களில் ஒன்று 10.30 மணியளவில் தள்ளாடி மீது குண்டு வீச்சை நடத்தி விட்டு வெற்றிகரமாக இரணைமடு ஓடுபாதைக்குத் திரும்பி விட்டது என்றும் -

மற்றைய விமானம் இலங்கையின் மேற்குக் கரையோரத்தை அண்டி நீண்ட நேரம் பயணித்து களனி ஆற்றுக்கு மேலாகக் கொழும்புக்குள் பிரவேசித்து, களனிதிஸ்ஸ அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மீது குண்டுகளை வீசி விட்டுப் பாதுகாப்பாக வந்த அதே வழியே திரும்பியிருக்கிறது என்றும் - கூறப்படுகின்றது.

ஆனால், இந்த இரண்டாவது விமானம் திரும்பிப் போய் இறங்கும்போது கிளிநொச்சிக்குப் பதிலாக முல்லைத்தீவில் ஓரிடத்தில் தரை இறங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது வான் புலிகளின் ஒன்பதாவது வெற்றிகரத் தாக்குதல்.

புலிகளின் விமானங்கள் தாக்குதலுக்குத் தயாராக வானில் பறக்கத் தொடங்கி விட்டன என்று தகவல் கிடைத்ததுமே அவற்றைத் தாக்கி அழிக்கும் வேகத்துடன் இலங்கை விமானப் படையின் F-7 ரகத் தாக்குதல் விமானங்கள், எம்.ஐ - 24 ஹெலிகள், பி.ரி - 6 ரக விமானங்கள் போன்றவை கொழும்பிலிருந்து புறப்பட்டு வானில் சீறிப் பறக்கத் தொடங்கிவிட்டன.

கொழும்பு நோக்கி வந்த வான் புலிகளின் விமானங்கள் கொழும்பை எட்ட முன்னரே அதனை வழிமறித்துத் தாக்கி அழிக்கும் வீச்சுடன் புறப்பட்ட 'எவ்.7' ஜெற் விமானங்கள் வன்னி வான் பரப்புக்குள் நுழைந்து விட்டன. ஆனாலும் அவற்றின் கண்ணுக்கு மண்ணைத் தூவி விட்டு, புலிகளின் விமானம் தலைநகரில் தன் கைவரிசையைக் காட்டியபின் பாதுகாப்பாகத் தன் தளம் திரும்பியிருக்கின்றது.

இது எங்ஙனம் சாத்தியமாயிற்று? இலங்கைப் பாதுகாப்புத் தரப்பின் வான் கண்காணிப்புப் பொறி முறைக்கு புலிகளின் விமானம் 'டிமிக்கி' கொடுத்தது எவ்வாறு? சுமார் ஒரு மணி நேரம் வான் பரப்பில் பறந்த புலிகளின் விமானத்தை வழிமறித்துத் தாக்கி அழிக்கமுடியாத செயற்திறனின்மை பாதுகாப்புத் தரப்புக்கு நேர்ந்தது எப்படி? - என்றெல்லாம் தலையைப் பிய்த்துக் கொள்கின்றார்கள் அதிகாரிகள்.

இவ்வளவு துணிச்சலாக - படையினரின் வான் பாதுகாப்புப் பொறி முறைக்கு கயிறு கொடுத்துவிட்டுத் தலைநகரில் குண்டு வீச்சை நடத்தித் தப்பி வரலாம் என்ற தைரியத்துடன் - வான் புலிகள் இத்தாக்குதலை நடத்தியிருப்பதால் அதற்கு இரண்டு காரணங்கள் இருந்திருக்கக் கூடும் எனப் பாதுகாப்பு வட்டாரங்களில் ஊகிக்கப்படுகின்றது.

ஒன்று - அரச பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதலுக்குத் தயாராக முன்னர் தமது கைவரிசையை முடித்து விடக்கூடிய அதிரடியாக, மின்னல் வேகத்தில் இந்த விடயத்தை ஒப்பேற்றி முடிக்கலாம் என்ற தந்திரோபாயத் திட்டம் புலிகளிடம் இருந்திருக்கலாம்.


இரண்டு - படையினரின் வான் பாதுகாப்புப் பொறிமுறைக்கு 'டிமிக்கி' கொடுக்கக்கூடிய தொழில்நுட்பம் அல்லது திட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு தங்களிடம் இருக்கின்றது என்ற நம்பிக்கையில் இந்தத் துணிகர நடவடிக்கைகளில் புலிகள் குதித்திருக்கலாம்.

இதில் எது சரி என்பதே கேள்வியாகும்.




அதனை நோக்க முன்னர் இந்தத் தாக்குதலை ஒட்டிக் கட்டவிழ்ந்த சில அவதானிப்புகளை நாம் கருத்தில் எடுப்பது முக்கியம்.

இலங்கை வான் பாதுகாப்புப் பொறிமுறையில் முக்கியமாக இந்தியா வழங்கிய 'இந்திரா' ரக ராடர்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. இந்த ராடர்கள் இரு பரிமாண வசதிகளையே கொண்டவை. விமானம் ஒன்றின் பறப்பு திசையையும், இடத்தையுமே அவை அவதானித்துக் கண்டுபிடிக்குமே தவிர, அந்த விமானம் எந்த உயரத்தில் பறக்கிறது என்பதை அவற்றில் துல்லியமாகக் கணக்கிட்டு வெளிப்படுத்த முடியாது.



*இந்தியத் தரப்பு 'இந்திரா - 11' ரக ராடர்; பொருத்தப்பட்ட நிலையில்*

## சீனாவின் ராடர் கோட்டை விட்டதை இந்திய ராடர் காட்டிக் கொடுத்தது

**- வி.சிவராம் -**

இதேசமயம் தனது பாதுகாப்புக்காக இலங்கைத் தரப்பு கொழும்புக்கு அருகே மீரிகம பிரதேசத்தில் சீனத் தயாரிப்பு முப்பரிமாண 'ராடர்' ஒன்றையும் பேணுகின்றது. 'ஜே.வை - 11' (JY - 11) என்ற இந்த ராடர் குறைந்த உயரத்தில் பறக்கும் வான் கலங் களையும் துல்லியமாகக் கண்டறிந்து எச்சரிக்கக் கூடியது என்பது அதன் விசேட அம்சமாகும். China Electronics Technology Group Corporation (CETC) என்ற நிறுவனத் தினால் வடிவமைக்கப்பட்டது இந்தக் கருவி. இந்த ராடர் தனது வீச்செல்லைப் பிரதேசத்துக்குள் பறக்கும் ஒரு விமானத்தின் உயரம், திசை; அதன் பறப்பு இடம் ஆகிய முப்பரிமாணத் தகவல்களையும் வழங்கக் கூடிய உயர் ரகத்தைச் சேர்ந்தது.

பெரிய ஆரவாரமோ, சத்தம் சந்தடியோ இன்றி சீனாவிடமிருந்து இந்த ராடரைத் தருவித்து அதனைக் கொழும்புக்கு அண்மையில் பொருத்தி, செயற்திறனில் வைத்துக் கொண்டுதான் வான் புலிகளின் விமானத்தை இம்முறையும் கோட்டை விட்டிருக்கின்றது இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு.

இதை விடவும் கட்டுநாயக்காவிலும் அதியுயர் தொழில்நுட்பத் தரத்துடன் கூடிய ராடர் வசதிகள் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

இத்தனை ஏற்பாடுகள் இருந்தும் புலிகளின் விமானம் தலைநகர் வரை வந்து பாதுகாப்பாக மீண்டது எப்படி?

வழமையாகப் புலிகள் தமது 'ஸின் இஸட் 143' (Zin Z 143) என்ற விமானம் மூலமே குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளனர். இம்முறை வேகமாக வந்து தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் செல்வதற்காக வேறு விமான ரகத்தைப் புலிகள் பயன் படுத்தியிருக்கலாமா என்ற சந்தேகத்தைப் பாதுகாப்புத் தரப்பினர் அடியோடு நிராகரிக்கின்றனர். கொழும்பு வரை வந்து தாக்குதல் நடத்தி விட்டுத் திரும்புவதற்கும் புலிகளுக்கு சுமார் ஒரு மணித்தியாலத்துக்கும் அதிகமான நேரம் எடுத்திருக்கின்றது. எனவே, புலிகள் வேறு புதிய - வேகத்திறன் கொண்ட - ரக விமானங்களுடன் முன்னையதை விட வேகமாகத் தாக்குதலை நடத்தி முடிக்கலாம் என்ற தைரியத்தில் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்ற கருத்து அடியோடு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்தது - படையினரின் வான் பாதுகாப்புப் பொறிமுறைக்கு - அல்லது வான் கண்காணிப்பு ஏற்பாடுகளுக்கு - 'டிமிக்கி' கொடுக்கக்கூடிய புதிய தந்திரோபாயம் எதையாவது புலிகள் பயன்படுத்தினார்களா என்ற விடயம்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது இறுதிப் போர்...!





''புலிகளின் மைய நகரமாகவும் தற்போதைய தளமாகவும் இருக்கும் கிளிநொச்சியை நான்கு மாதங்களில் கைப்பற்றிவிடுவோம்!'' - அமைச்சகச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

''இது சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமான தேசம் என்பதை இன்னும் சில மாதங்களில் அறிவிப்போம்!'' - அரசியல் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ.

''புலிகள் ஆதிக்கம் செலுத்திய கிழக்குப் பகுதி இப்போது எங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது!'' இலங்கை இராணுவச் செய்தித் தொடர்பாளர்.

உண்மையோ, பொய்யோ இவைதான் இலங்கையில் இருந்துவரும் தகவல்கள். ஆனால், கிளிநொச்சியில் வாழ்ந்து கொண்டு இருந்த 2 லட்சம் தமிழ்மக்கள் முல்லைத்தீவுப பகுதிக்கு இடம்பெயர்ந்த சோகச் செய்தி மேற்கண்ட கொக்கரிப்புகளை உண்மையாக்கிவிடுமோ என்ற பீதியைக் கிளப்பியிருக்கிறது.

மகா கொடுமையான யுத்தசமயங்களில் கூட இரண்டு பிரிவினரைக் கட்டாயமாக போர்நடக்கும் பகுதிகளுக்குள் அனுமதிப்பார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் ஒரு பிரிவினர். நடுநிலைமையோடு உள்ள நிலைமையை உலகுக்குச் சொல்லும் செய்தி நிறுவனங்களின் நிருபர்கள் இரண்டாவது பிரிவினர். ஆனால், இரண்டு மாதங்களுக்கு முன்னரே சர்வதேசத்தொண்டு நிறுவனங்களை வெளியேற்றியது இலங்கை இராணுவம். செய்தி நிறுவனங்களின் இராணுவ நிருபர்கள் வேவுபார்க்கமுடியாத அளவுக்கு இரும்புக் கதவுகளால் இறுக்கிக்கொண்டுவிட்டது.

''புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களைக் கைப்பற்ற இலங்கை இராணுவம் தனது மிகப்பெரிய தாக்குதலைத் தொடங்கிவிட்டது. ஒருவிடியலில் நான் பார்த்தபோது மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறிக்கொண்டு இருந்தார்கள். திடும் திடும் என தூரத்தில் குண்டுகள் வெடிக்கும் சத்தம். இதனால் எங்கள் அலுவலகம், பதுங்குகுழிகள் கடகடவென அதிர்ந்து அடங்கியபடி இருந்தன. போர் எவ்வளவு உக்கிரமாக இருந்தாலும் தொண்டு நிறுவன ஊழியன் என்ற முறையில் கெடுபிடிகளைத் தாண்டிச்செல்ல எனக்கு அனுமதி உண்டு. ஆனால், அவை அன்று செல்லுபடியாகவில்லை. காட்டுக்குள் ஒதுங்கிப் பதுங்கி வாழும் மக்களின் தண்ணீர் தாகத்தைச் சமாளிப்பதே எங்களுக்கு உலக சாதனையாக இருந்தது. தூரத்தில் கேட்ட ஷெல் சத்தம் அருகே அருகே நெருங்கியது. எங்களது சொந்தப் பாதுகாப்பே சிக்கலுக்கு உள்ளானது. 'உங்களுக்குப் பாதுகாப்புத் தரமுடியாது. நாட்டைவிட்டு வெளியேறுங்கள்!' என்று இராணுவம் இறுக்கமாகச் சொல்லிவிட்டது. அலுவலகத்தைப் பூட்டினோம். பயத்தில் அழுதுகொண்டு இருந்த சிறுவர்களை விட்டும், அவர்களுக்கு நடுங்கியபடியே ஆறுதல் சொல்லிக்கொண்டும் இருந்த பெண்களை விட்டும் குற்ற உணர்வுடன் விலகினோம். நாங்கள் வெளியேறுவதைப் பார்த்த அந்த மக்கள் சோகத்திலும் எங்களுக்கு நல்வாழ்த்துக்கள் சொன்னது என்னை இந்த ஆயுள் முழுக்க நிம்மதி இழக்கச் செய்துவிட்டது!'' இப்படி - ஒரு தொண்டு நிறுவன ஊழியர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றது முதல் இலங்கைத் தமிழர்கள் மீதான தாக்குதலின் உக்கிரத்தை தினமும் சில டிகிரிகளாவது அதிகப்படுத்திக் கொண்டேதான் இருந்தார். அடுத்த தேர்தலுக்கு முன்னதாக புலிகள் அமைப்பை அடியோடு அழித்தால்தான், தேர்தலை ஏற்றத்துடன் எதிர்கொள்ள முடியும் என்பதே அவர் எண்ணம்.

'எனக்கு வாக்களித்தால் இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவேன்' என்று பிரசாரம் செய்து வெற்றிபெற்றார் சந்திரிகா. அவரும் அவரால் அழைத்துவரப்பட்ட ராஜபக்ஷவும் இணைந்து 14 வருடங்கள் ஆண்ட பிறகும் இலங்கையில் அமைதி ஏற்படவில்லை. இராணுவத்தின் கையை அவிழ்த்துவிட்டு, 'சீக்கிரம் நல்ல செய்தி சொல்லுங்கள்' என்கிறார் ராஜபக்ஷ.



இலங்கையில் பொருளாதாரம் நாளுக்கு நாள் நசிந்துகொண்டே வருகிறது. காரணம், ஆண்டுதோறும் இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் தொகையின் அளவு அதிகரித்து வருகிறது. நவம்பரில் இலங்கை நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கலாகும் சமயம், அதைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் முழு முனைப்புடன் செயல்படுகின்றன. அதற்காகவே போர் [illegible] போன்ற தோற்றத்தை உண்டாக்கவேண்டிய நெருக்கடி இருக்கிறது ராஜபக்ஷவுக்கு.

அடுத்ததாக, ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீதுள்ள மலையளவு ஊழல் குற்றச்சாட்டுகள். அரசாங்க நிறுவனங்களைக் கண்காணிக்கும் நாடாளுமன்றச் செயலாளரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம்.பியுமான விஜயதாச ராஜபக்ஷே, 20 அரசாங்க நிறுவனங்களில் நடந்துள்ள ஊழல்களைப் பட்டியலாக வெளியிட்டு பரபரப்பு கிளப்பியிருக்கிறார். இந்த இரண்டு சிக்கல்களையும் எதிர்கொள்ள ராஜபக்ஷ கையில் இருக்கும் ஒரே அஸ்திரம் போர்!

ஜனாதிபதியின் இந்த ஊக்கத்தால் உற்சாகமாக உதிரம் குடிக்கத் தொடங்கியிருக்கிறது இலங்கை இராணுவம். ''புலிகளின் தனித் தமிழீழக் கனவை நாங்கள் கூடிய விரைவில் கலைப்போம்!'' என்று கொக்கரிக்கிறார்கள் இராணுவத்தினர். உண்மையில் புலிகளின் சுதந்திரத் தமிழீழக் கனவு கலைகிறதா...! கிளிநொச்சியில் இருந்து மக்களை விரட்டியடித்தால் மட்டுமே அப்படி ஒரு முடிவுக்கு வரமுடியுமா...? உண்மையில் அங்கு என்னதான் நிலைமை?

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை இலங்கையில் இருந்து பிரித்து தமிழீழம் அமைக்கவே புலிகள் அமைப்பு போராடுகிறது. இந்தப் பகுதிகளின் பரப்பளவு சுமார் 19,000 சதுர கி.மீ. நிலப்பகுதியை தமிழர்கள் அதிகம்

## உச்சக்கட்டத் தகிப்பில் கொதிக்கிறது ஈழம்!

வாழ்ந்த இந்தப் பகுதிகளில் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடி யேற்றி வந்ததால், தற்போது அவர்கள் சுமார் 7,500 சதுர கி.மீ. ஆக்கிரமித்துக் கொண்டார்கள். புலிகளின் தமிழீழ வரையறைக்குள் வரும் யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகியவை இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரின் சில பகுதிகள், வவுனியா ஆகிய பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இங்கு எல்லாம் புலிகளின் அரசாங்கம்தான். முழுமையான ஓர் அரசாங்க அமைப்பினையே அவர்கள் உண்டாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள்.

ஆரம்ப காலத்தில் புலிகள் தங்களது மையமாக நினைத்தது யாழ்ப்பாணத்தை. சந்திரிகா அதை ஈடேறாமல் தடுத்தார். ஆனால், 'ஓயாத அலைகள்' என்று பெயரில் அரங்கேறிய மூன்று தொடர் யுத்தங்களில் இராணுவத்தின் வசமிருந்த முல்லைத்தீவு, ஆனையிறவு போன்ற இடங்களை மீட்டு எடுத்தார்கள் புலிகள். பதிலுக்கு திருகோணமலையை இவர்களிடமிருந்து இராணுவம் பறித்தது. இப்படி மாறிமாறி நடந்த சண்டைகளின் காரணமாக இருவரிடமும் இருந்த பகுதிகள் இடம்மாறின.

கிழக்கு இலங்கை முழுவதுமாக எங்கள் வசத்துக்கு வந்துவிட்டது என்று கடந்த ஆண்டு ஜூன் மாதம் இராணுவம் அறிவித்தது. 'பூகோள நிலைமையைக் கருத்தில்கொண்டு பின்வாங்கினோம்!' என்று புலிகள் சொன்னார்கள். புலிகள் தங்கள் படை, பரிவாரங்களை விலக்கிக்கொண்டாலும் அந்தப் பகுதிகளில் கெரில்லாத் தாக்குதலைத் தொடர்ந்து வருகிறார்கள்.

கிழக்கு மாகாணம் வசமானதும் வடக்கைக் குறிவைத்தார் ராஜபக்ஷ. இப்போது நடப்பது இதற்கான போர்தான். முகமாலை, மன்னார், வவுனியா, மணலாறு ஆகியவை புலிகளின் முக்கியமான தளங்கள். முதலில் முகமாலை வழியாக இராணுவம் நுழைந்தது. ஆனையிறவைக் கைப்பற்றவே இந்த முயற்சி. ஆனால், இதில் ஏராளமான இராணுவ வீரர்கள் பலியானார்கள். மொத்தமாக முன்னேறுவதை விட, திடீர்த்தாக்குதலை நடத்தலாம் என்று இராணுவம் திட்டமிட்டு அப்படிப்பட்ட தாக்குதல்களை மட்டும் நடத்தி வருகிறது. இவர்கள் தாக்க நினைக்கும் முக்கிய இடம் பூநகரி. இங்குதான் புலிகளின் பீரங்கித்தளம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அடுத்த இலக்கு கிளிநொச்சி!

புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த நகருக்கு 5 கி.மீ. தொலைவில்தான் இராணுவம் உள்ளது. அக்கராயன் என்பது இந்த இடத்தின் பெயர். அங்கிருந்து இராணுவம் முன்னேறப் போகின்றது என்ற தகவல் கிடைத்ததும்தான் பொதுமக்களைக் காப்பாற்ற அவர்களை இடம்மாற்ற புலிகள் உத்தரவிட்டார்கள். ''இராணுவம் கிளிநொச்சிக்குள் நுழையவே முடியாது. புலிகளின் மூன்று அடுக்குகளை இராணுவம் தாண்டியாக வேண்டும். முதலில் கண்ணிவயல்கள். ஓர் அடிக்கு ஓர் அடி கண்ணிவெடிகள் வைக்கப்பட்டுள்ளன. அதை அடுத்து பத்துக்கு பத்து பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு உள்ளன. எந்த டாங்கியும் உள்ளே வந்தால் குழிக்குள் இறங்கிவிடும். இதையடுத்து புலிகளின் படை இருக்கிறது. விடுதலைப் புலிகளின் வசம் 25 விதமான படையணிகள் உள்ளன. அவை இன்னும் களத்தில் இறக்கப்படவே இல்லை. எனவே, கிளிநொச்சிக்குள் இராணுவம் நுழைவதும் சாத்தியமல்ல: கைப்பற்றுவதும் சாத்தியமல்ல'' என்று புலிகள் ஆதரவுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் புலிகளின் படை பலம் மற்றும் படையணிகள் குறித்த மொத்த தகவல்களையும் கருணா தரப்பு இராணுவத்துக்குக் கொடுத்துள்ளது. இதனால்தான் இராணுவம் தைரியமாகப் பல காரியங்களைப் பார்க்கிறது என்கிறார்கள். பிரபாகரனால் கிழக்கு மாகாணத் தளபதியாக நியமிக்கப்பட்ட கருணா, நான்கு ஆண்டுகளுக்கு முன் அவரை விட்டுப் பிரிந்தார். கருணாவுடன் இன்னும் சிலரும் போனார்கள். இலங்கை அரசாங்கத்தின் உதவியால் லண்டன் அனுப்பப்பட்டார் கருணா. அவர் வைத்திருந்தது போலி பாஸ்போர்ட் என்று கண்டுபிடிக்கப்பட்டு 17 மாதங்கள் லண்டனில் சிறைவைக்கப்பட்டார். உடனே அவருக்குப் பதிலாக பிள்ளையான் என்பவரை இராணுவம் தேர்ந்தெடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சராக்கியது. இது கருணாவுக்குப் பிடிக்கவில்லை.

இங்கிலாந்து அரசாங்கம் கருணாவை நாடு கடத்தியது. இலங்கை வந்த கருணாவுக்கும் பிள்ளையானுக்கும் பிரச்சினை ஆரம்பமானது. பிள்ளையானைச் சுற்றி இருந்த 13 முக்கிய தளபதிகளை கருணா ஆட்கள் கடத்திவிட்டனர் என்று செய்திகள் வருகின்றன. ஆனால், கருணாவின் இந்தச் செயல்களை இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. புலிகள் அமைப்புக் குறித்தும் முக்கிய ஆயுத தளங்கள் குறித்தும் இராணுவத்துக்கு கருணா தந்துள்ள தகவல்கள்தான் இதற்குக் காரணம்.

ஈழப்போராட்டம் இப்போது இறுதிக்கட்டத்தை அடைந்து வருவதாகவே செய்திகள் சொல்கின்றன. போர் செய்தி நிருபர்களில் முக்கியமானவராக கருதப்படும் இக்பால் அத்தாஸ், ''இது பிரிவினைப் போராட்டத்தின் மிகப் பயங்கரமான கட்டம்!'' என்று எச்சரிக்கிறார்.

புத்தம் பேசும் நாட்டில் யுத்தம் நடக்கிறது. அதன் சத்தம் கேட்டு இங்கே இரத்தம் கொதிக்கிறது. ✱ (நன்றி: விகடன்)

- ப.திருமாவேலன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அங்கையன்' என்ற புனைபெயரில் இலங்கைச் சிறு கதைத் துறைக்குப் பங்களிப்பு வழங்கிய அ.கைலாசநாதன் மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தேர்ந்த பட்டதாரி. அவர் சிறுகதைத் துறையில் மட்டுமன்றி கவிதைத் துறையிலும் தடம் பதித்துப் பெயரெடுத்தவர்.

சுவடு, நெஞ்சுக்கு ஒரு நிறைவு, கவிப், நிலவு இருந்த வானம் என்பன அவரது சிறுகதைகளில் சிறப்பாகப் பேசப் பட்டவையாகும். 'வைகறை நிலவு' என்ற பெயரில் அவரது கவிதைகள் நூலுருவில் வெளியாகியுள்ளன. கடல்காற்று, செந்தணல் ஆகிய அவரது நாவல்களும் நூலுருவில் வெளியாகி வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை.

இலங்கை வானொலியில் பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்த அவர், இலங்கையில் உள்ள பிரித்தானியத் தூதுவராலயத்தில் தகவல் பிரிவில் பணிபுரிந்தார். பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்த பின்னர் 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியர்பீடத்தில் சில காலம் கடமையாற்றினார். கொழும்பில் விபத்து ஒன்றின் அகால மரணமானார். தமது இருபதாவது வயதில் அவரால் எழுதப்பட்டு 1962 ஆம் ஆண்டில் சுதந்திரனில் வெளியான 'கலங்காத கண்கள்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# கலங்காத கண்கள்

அந்தக் காட்சியைக் கண்டதும் அப்துல்காதர் திகைத்தே போனார்.

அவருடைய எண்ணங்கள் யாவும் ஒன்றாய்த் திரண்டு, பஞ்சுக்கூட்டம் போல் எங்கையோ மெதுவாக மிதந்து, மிதந்து சென்று கொண்டிருந்தன.

உணர்ச்சிகள் எதுவுமற்ற மரக்குற்றி போல அப்படியே ஆடாமல் அசையாமல், பேசாமல் நின்றார் அவர்.

காசிம்!.........''

அவரையும் அறியாமல் அதரங்கள் மெல்ல அசைந்து இந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்தன. நினைவுத்திரையில் அவனுடைய அழகு நிறைதோற்றம் வந்து நிழலாடியது.

'மயக்கும் கண்கள்....... சுருண்ட கேசம்....... இராச நெற்றி........ வட்ட வடிவமான முகம்....... செவ்வானச் சாயை........'

அப்துல்காதருடைய உடல் மெல்ல, மெல்ல வெலவெலுப்பைக் குறைத்துக் கொண்டது. சிலிர்த்த உரோமங்கள் படமெடுத்த பாம்புபோல ஒடுங்கித் தோலுடன் சாய்ந்து கொண்டன. உள்ளமும் குமுறலைத் தணித்தது.......

தமது காலடியில் மூச்சற்றுப் பேச்சற்றுக் கிடந்த காசீமை ஒருமுறை பார்த்தார் அப்துல்காதர். அவருடைய மார்பு ஒரு தடவைக்கிருதடவைகளாக விம்மிப் புடைத்தது.

'இந்தக் காசிமா?........ இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டான்.......... சே! நேர்மை, நியாயம், நீதி எதுவுமே அற்ற உலகம்!........ முரட்டுச் சாதிங்களட்டை இருந்தால் எவனுக்கும் இந்தக்கதிதான் ஏற்படும்!......' நினைவு தடுமாறியது!

அப்துல்காதர் அரசியலைப்பற்றி நினைத்துக் கொண்டதும் அவருடைய உள்ளம், உடல் எல்லாம் நடுங்கின. அந்த நேரத்தில் அப்படியே நின்றால்....... யாராவது தன்னைப் பார்த்துவிட்டால்.........

காசிமுக்கு நடந்த அதேநிலைதான் தமக்கும் ஏற்படலாமென்றும் எண்ணினார்.

பழையபடி அவருடைய நிலை மிகப் பரிதாபமாக இருந்தது.

''இதென்ன?........காலெல்லாம் கசியுது........''

தம்மையே கேட்டுக்கொண்டு குனிந்து பார்த்தார். வீதிநீளம் நாட்டப் பெற்றிருந்த தெரு விளக்குகளில் ஒன்று அவருக்கு உதவியது.

ஒளியின் உதவியுடன் கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு பார்த்தார் அப்துல்காதர்.

''ஐ.....ய்......யோ!......ஹல்லா!.........''

அவருடைய வாய் அலறிவிட்டது!

அங்கே -

'தார்' வீதியிற் செங்குருதி பாய்ந்து கொண்டிருந்தது. குண்டுகள் பாய்ந்து காசீமின் உடலைக் கிழித்திருந்தன.

இரத்த ஆறு ஓடியது!

நெருப்பை மிதித்தவர்போல் துள்ளி மறுபுறம் வந்து காசிமைத் தூக்க முயன்றார்.

அவரால் முடியவில்லை!

முதுமையின் வீட்டு வாசலைத் தட்டிக் கொண்டிருந்த அப்துல்காதரால் கட்டிளங் காளையான காசிமைத் தூக்கமுடியவில்லை.

அந்த ஐந்து சந்தியில் எந்த வீதியில் மனித மிருகங்களுடைய வண்டி வந்து கொண்டிருக்கும் என்று அவரால் சரியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த இடத்தைவிட்டு ஓடி தம்முடைய உயிரைக் காப்பாற்றலாமே? என்றாலும் மனம் ஒப்பவில்லை.

'வாழ வேண்டிய பொடியன் இந்தா பாயிட்டான்...... நெறிகெட்ட அந்த நீசங்களாலை....... இனிமேல் நமக்கெதுக்கு வாழ்வு?...... கொஞ்சம் முந்தி என்னோட என்னமாதிரியெல்லாம் கதைச்சான்?:....... இப்போ........'

அப்துல்காதரால் மேற்கொண்டு எதையும் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. நினைவுத்திரையில் அவை மறைந்து கொண்டிருந்தன.

பதிலாக -

அடுத்த திரை விழுந்தது! தமிழர்கள் தம்முடைய உரிமைக்காக அகிம்சாவழிப் போராட்டம் நடத்திய வேளையில்........ அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச் சட்டமும் ஒன்றாக நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிரகடனப் படுத்தப்பட்ட அதேநாளில்.......

மத்தியான வேளை!

அப்துல்காதர் காசிமைக் கண்டார். அவன் அவருடைய இனத்தவன் தான்...... இருந்தாலும் இதற்கு முன் அவர் அவனுடன் முகம் கொடுத்துக் கதைத்திருக்கவும் மாட்டார். ஐந்து சந்தி என அழைக்கப்படும் அந்த சோனக தெருவின் ஒரு மூலையில் அவர் இரும்புக்கடை வைத்திருக்கின்றார்.

அந்த வழியாற் போய்க்கொண்டிருந்த காசிமைக் கண்டதும் அவருக்குப் புதிய பிரச்சினை தோன்றியது. என்றும் இல்லாத வாறு அவனுடன் கதைக்க வேண்டும் போன்ற ஆசையும் அடிமனதைக் கிளறியது.

''தம்பி....... காசிம்!....... எங்கேப்பா போறா?''

''எனக்கு எங்கே போகக்கிடக்கிறது காக்கா? சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருக்கிறார்களே!........ அந்தப் பெரு மக்களுக்குச் சாப்பாடு எடுத்துக் கொடுக்க வேண்டும். அதுதான் போகிறேன்...... நேரமில்லை!.......'' என்றவண்ணம் தொடர்ந்து நடந்தான் காசிம்.

'வயதில் முதிர்ந்தவர் வழியிலே கதை கேட்கிறாரே!..... நின்று பதில் கூறிவிட்டுப் போவோம்!' என்று எதுவித எண்ணமும் காசிமிடம் குடிகொள்ளவில்லை.

'கடமை அங்கே காத்திருக்கிறது..... பொழுதுபோக்க என்னை மறித்து அழுது கொண்டிருக்கும் இவருடன் எமக்கென்ன கதை?........' இப்படியும் காசிம் நினைக்கவில்லை.

நேரத்தைப் பார்த்தான் காசிம்!

ஒரு மணி!

'ஐ.......ய்......யோ! ஆண்டவனே! அங்கே அவர்கள் என்ன கஷ்ரப்படுகிறார்களோ? நான் இங்கே நின்று வீணாக நேரத்தைப் போக்காட்டுகிறேன்........' என்ற ஒரே எண்ணந்தான் அவனிடம் வந்து போகிறது.

மனத்தையும்முந்திக்கொண்டு அவனுடைய கால்கள் கச்சேரி வாசலை நோக்கி வந்துவிட்டன.

மக்கள் வெள்ளமே கச்சேரியின் வாசலிலும் - மதிலிலும் வந்து முட்டி நின்றது. வீதி நிரம்பி வழிந்தது. அந்த வெள்ளத்தினிடையே காட்டு மரங்கள் சிலவற்றைப்போல வைத்த வழி வாங்காமல் சில இராணுவவீரர்கள் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களைக்காண காசிமுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பற்கள் ஒன்றுடனொன்று உராய்ந்தன. கண்கள் அகல விரிந்து ..... படர்ந்தன.

இராணுவத்தினுடைய உருவத்திலே அநீதியின் பிறப்பிடமான அரசியல் தலைமைப்பீடமே அவன்முன் க்காட்சி தருவதுபோன்ற பிரமை.......

'இந்த அறப்போர் தொடங்கப்பட்ட நாளில் மண்டை உடைபட்ட தலைவர்கள் எத்தனைபேர். மானம், மரியாதை எதுவுமின்றி மாடு, ஆடுகள்ளப்போல் அடிபட்டவர்கள் எத்தனை?.......... உடை பட்டவர்கள் எத்தனை?...... எத்தனை?'

காசிமின் தலையே சுழல்வது போன்ற நினைப்பு!..... ஒரு மூச்சு அடிவயிற்றில் பொங்கி வெளியே வழிந்தோடியது. கவலையில் பாதி.......


காசிம் எல்லா வேலைகளையும் முடித்து வீடு திரும்ப நன்றாக இருட்டிவிட்டது.

அதன் ஐந்து சந்தியையும் அடையும் பொழுது ஒன்பது மணியாகிவிட்டது.

வழமைபோல் அப்துல்காதர் தம்முடைய கடையைப்பூட்டிக்கொண்டு உள்ளே சென்றார். காசிமைக் கண்டதும் அவருடைய மனம் ஒருவித கிளுகிளுப்பை உணர்ந்தது. அகத்திலே ஒருவித மலர்ச்சி!...

''வாப்பா! வா! எல்லாம் முடிஞ்சு போய்ச்சா....... இப்ப என்னதான் நடக்கப் போகுது?...... அவர்கள் உங்கடை உரிமையைக் கொடுக்கத்தான் போறாங்கள் என்ன?''

(14 ஆம் பக்கம் பார்க்க)




# கல்விரல் அடித்த வலியை விட சொல்விரல் அடித்து வலி உறவைக் கெடுக்கும்



ஜெயமோகன் தமிழிலும் மலையாளத்திலும் எழுதும் முக்கிய படைப்பாளி. சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம் எனப் பல தளங்களில் இயங்கும் ஜெயமோகன் ஈழத்து இலக்கியம் தொடர்பான ஆழ்ந்த அக்கறை யுடையவர். இது கேரள இஸ்லாமிய இதழான 'மாத்யமம்' இதழ்களில் மலையாள மொழியில் தொடராக எழுதப்பட்டு, பின்னர் ஆனந்த விகடனில் தமிழில் எழுதப்பட்டவற்றுள் ஒன்றாகும். பின்னர் சங்கச் சித்திரங்கள் என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. அவரது விஷ்ணுபுரம் நாவல்போல அதிக கவனிப்புக்கு உட்பட்ட சங்கச்சித்திரங்கள் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இக்கட்டுரை இன்றைய 'இலக்கியப் பொழில்' பகுதியை அலங்கரிக்கிறது.

''துகில்விரித் தன்ன வெயில்அவிர் உருப்பின்
என்றூழ நீடிய குன்றத்துக் கவாஅன்
ஐப்பசிச் செந்து உயங்குமரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு
அருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி ஆகும்
வெம்மை ஆரிடை இறத்தல் நுமக்கே
மெய்ம்மலி உவகை ஆகின்று இவட்கே
அஞ்சல் என்ற இறைகை விட்டெனப்
பைங்கண் யானை வேந்துபுறத்து இறுக்கலின்
களையுநர்க் காணாது கலங்கிய உடைமதில்
ஓரெயில் மன்னன் போல
அழிவுவந் தன்றால் ஒழிதல் கேட்டே.''(நற்றிணை)

இது அம்மா அடிக்கடி சொல்லும் பழைய நினைவு. அப்போது நாங்கள் கன்யாகு மரிப் பாதையில் கொட்டாரம் என்ற சிற்றூரில் இருந்தோம். நேர் எதிர்வீட்டில் வடிவம்மாள் என்ற ஒரு நடுவயதுப் பெண் குடியிருந்தாள். வீட்டு முன் திண்ணையில் காலையில் இட்லி செய்து விற்பது அவள் தொழில். அங்கே சாப்பிட முடியாது. அப்பகுதியில் அப்போது நெசவாளிகள் அதிகம். ஆகவே வீட்டுச் சமையலுக்குப் பதில் வாங்கித் தின்பது சகஜம். சாயங் காலம் முழுக்க ஆட்டுக்கல்லில் மாவரைப்பாள், தனியாகத்தான். இட்லி பருத்திப்பூ போல இருக்கும்.

வடிவம்மை விசித்திரமானவள். அக்கால வழக்கப்படி அவள் ரவிக்கை அணிவதில்லை. திரண்ட தோள்களிலும் ரத்தக்குழாய் புடைத்த புறங்கைகளிலும் பாம்புகளும் கோலங்களும் பச்சை குத்தப்பட்டிருக்கும். சற்று எடுப்பான பற்கள் என்றாலும், அருள் உள்ள முகம். ஆனால், அவள் புன்னகைப்பதே இல்லை. மிக அவசியமான ஒரு சில சொற்களைத் தவிரப் பேசுவதுமில்லை. எல்லா வாசல்களும் ஜன்னல்களும் மூடிப்போடப்பட்ட ஒரு வீடு போன்றவள் அவள் என்பாள் அம்மா. கண்கள் காற்றுக்கெனப் போடப்பட்ட சாளரத் துளைகள். ஆனால், அதன் வழியாகக்கூட உள்ளேயுள்ள இருள் மட்டுமே தெரியும். அவளுடன் பேசப் பல வழிகளிலும் பலர் முயன்றதுண்டு. அவளை இதற்காகச் சீண்டியதுமுண்டு. எதுவும் பலிக்கவில்லை.

இரண்டு வருடங்களாக அம்மாவுக்கு அவளைத் தெரியுமென்றாலும் அதிகபட்சம் நூறு வார்த்தைகள்கூட அவள் அம்மா விடம் பேசியதில்லை. இத்தனைக்கும் கைக்குழந்தைக்காரியான அம்மா அவளிடம் வாங்கும் உபரி சாம்பாரைத்தான் மத்தி யானமும் உபயோகிப்பது. அவளது கதையை ஊரில் இருந்து அம்மா தெரிந்து கொண்டிருந்தாள்.

தேங்காய் மொத்தக் கொள்முதலுக்காக வந்த கேசவன் நாயரோடு வடிவம்மைக்கு காதல் ஏற்பட்டது. நாயர், கோயிலுக்குச் சொந்தமான வீட்டில் தற்காலிகமாகத் தேங்காய்களுடன் சேர்ந்து தங்கினாலும், சாப்பாடு வடிவம்மையின் கடையிலிருந்து போய்க் கொண்டிருந்தது. குனிந்த தலை நிமிராதவளும், சுமாரான அழகியும், முக்கிய மாக ஏழையுமான வடிவம்மைமேல் ஊரில் பலருக்கும் கண் இருந்தது. எதிர்ப்புகளைத் தாங்கி அவர்கள் மணமுடித்து வடிவம்மை யின் வீட்டிலேயே சவால்விடும் பாவனையில் குடித்தனம் நடத்தினர். எட்டு மாதம் கழிந்ததும் நாயர் திடீரென்று அவளைப் பிரிந்து சென்று விட்டார். பிறகு திரும்பி வரவேயில்லை. ஊர்க்காரர்கள் பலர் தலையிட்டுச் சமாதானம் பேசிப் பார்த்தனர். ஒன்றும் நடக்கவில்லை. வடிவம்மை தனியளும் மௌனியும் ஆனாள்.

அந்த நாள்களில் ஒருமுறை என் அம்மா இட்லி வாங்கப் போனபோது கைக்குழந்தையாக இருந்த என் தங்கையை, வடி வம்மை கையில் தந்தாள். வாழாவெட்டி கையில் குழந்தையைத்தர வேறு எந்தப் பெண்ணும் துணியும் ஊர் அல்ல அது. என் அம்மா கம்யூனிஸ்ட் பாரம்பரியம் [illegible] முதலில் அதை ந[illegible] முடியவில்லை. பிறகு அடிவயிற்றில் இருந்து ஆவேசம் கிளம்பியது. குழந்தையை மார்போடு அணைத்து வெறிகொண்டு முத்தமிட ஆரம்பித்தாள். என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு கிள்ளு இட்லி எடுத்து அதன் வாயில் வைத்தாள். அதன் பின் தங்கை எந்த நேரமும் அவள் கையில்தான் இருப்பாள். இலக்கிய தாகம் கொண்ட அம்மாவுக்கு அது பெரிய உதவியாகவும் இருந்தது. தங்கைக்கு பதினேழு வயது இருந்தபோதுதான் வடிவம்மை இறந்தாள். அப்போது நாங்கள் மூன்று ஊர் மாறிவந்து கொண்டிருந்தோம். ஆனாலும், வடிவம்மை தங்கையைத் தேடி, கையில் ஏதாவது தின்பண்டத்துடன் வருவதுண்டு.

என்ன நடந்தது என்று அம்மாவிடம் வடி

**தற்செயலாக வாயிலிருந்து வரும் தவறான சொல்லும் மனதைக் கிளறும்**

வம்மை அந்தரங்கமாகச் சொல்லியி ருந்தாள். அம்மாவால் அதை கடைசிவரை நம்பவே முடியவில்லை. ஆனால், நடந் தது அதுதான். மானுட உறவுகளில் உள்ள மர்மங்களுக்கு உதாரணமாக அம்மா அடிக்கடி அதைச் சொல்வது உண்டு.

[illegible] கணவருக்கு நன்றா கத் தமிழ் தெரியும். ஆனாலும் பேச்சு மொழி யின் ஒரு சிறு சிக்கல் காரணமாகத்தான் அந்தப் பிரிவு நேர்ந்தது. ஒருநாள் சாப்பாடு தயாராகச் சற்றுத் தாமதமானபோது நாயர் சற்றுக் கோபமாகப் பேசினாராம். அதற்கு வடிவம்மை 'எதுக்கு வள்ளு விழறீங்க?' என்று கேட்டாள். அது சாதாரணமாகப் பேசப்படும் சொல்வழக்குத்தான். ஆனால், நாயர் உடனே தன் உடைகளை எடுத்துக் கொண்டு போய்விட்டார். முதலில் வடிவம்மைக்கு ஏதும் புரியவில்லை. சிறு ஊடலாக இருக்கும் என்று சாதாரணமாக இருந்து விட்டாள். இரவும் அவர் வராத போது கவலை ஏற்பட்டது. தேடியபோது நாயர் தன் சொந்த ஊரான திற்பரப்புக்குப் போய்விட்டது தெரியவந்தது. அப்போதும் வடிவம்மைக்கு அது ஒரு பெரிய விஷய மாகத் தோன்றவில்லை. சமாதானத்துக்குப் போனவர்களிடம் நாயர், 'என்னை நாயே என்று அழைத்தவளிடம் இனி எனக்கு எந்த உறவும் இல்லை' என்றார். அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார். எந்த விளக்கமும் அவரைத் திருப்தி செய்யவில்லை. முதலில் அவளுக்கு அது ஒரு வேடிக்கை யாகத் தெரிந்தது. படிப்படியாக அதன் தீவிரம் புரிந்தபோது கடிதங்கள் போட்டாள். நேரில் போய் மன்றாடினாள். நாயரின் வேகம் ஏறித்தான் வந்தது. அவர் ஊராரும் விசை ஏற்றினார்கள். உறவு முறிந்தது. மடத்தனமான ஒரு கதையாகவே இது எனக்கு வெகுகாலம் தெரிந் தது. நாம் கேட்கும், படிக்கும் கதைகள் நம் தருக்க புத்தியைத் திருப்தி செய்கின்றன. உண்மைச் சம்பவங்களுக்கு அந்தப் பொறுப்பு இல்லை என்று சீக்கிரமே புரிந்து கொண்டேன். மனித மனம் குறித்து எதைச் சொன்னாலும் நம்பலாம் என்று, இன்று தோன்றுகிறது

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




''ரதிமஹால்'' ஏழாலை கிழக்கு,
ஏழாலையைச் சேர்ந்த
யசோதரன் - ரதிவதனி தம்பதியரின்
**செல்வப் புதல்வன்**

**ய. அபிசேக்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கடவுள் அருள் பெற்று பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**''ரதிமஹால்'',**
**ஏழாலை கிழக்கு,**
**ஏழாலை.**


# இதோ
## இடுப்பு வலிக்கு
## சிறந்த நிவாரணி!




அயொடெக்ஸ் இடுப்பு வலி மற்றும் உடல் வலிகளுக்கு உடனடி நிவாரணி.

இப்போது சகல பார்மசிகள் மற்றும் மளிகைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இடுப்பு வலிக்கான சிறந்த நிவாரணி


## இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.2

இராமநாதன் நுண்கலைக்கழக வளாகத்தில் இயங்கிவரும் சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களால் நடத்தப்பட்ட வர்ணமொழி - 2007 கண்காட்சியின் இறுவட்டு வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் இறுவட்டை வெளியிட்டு வைக்கவுள்ளார். (203)


**அமெரிக்காவிற் குடியேறுங்கள்**
**PR VISA லொத்தர் மூலம்.**
அமெரிக்காவில் வேலை செய்ய, உயர்கல்வி கற்க முடியும்.

மணமுடித்தவர்கள் விண்ணப்பிக்க Call 0775811106
மணமுடிக்காதவர் 18 வயதிற்கு மேல், க.பொ.த சாதரத்தில் பூரணசித்தி இருப்பின் **30/11/2008 முன்னர்.**
A. ஸ்ருடியோவில், புதிதாக எடுத்த ஒரு விஸா படத்துடன்,
B. அடையாள அட்டையிலுள்ளபடி பெயர் ஆங்கிலத்தில் எழுதவும்.

Last/Family Name ________
First Name ________
Middle Name (If have only) ________
Date of Birth (DD/MM/YR) ________
Birth Place ________
Gender Male ☐ Female ☐ Not Married and Don't have children ☐
G.C.E O/L Completed ☐ University Student ☐
Graduate ☐ Doctorate ☐
Telephone ________
Address ________

இதனை வெட்டி போட்டோ பிரதி செய்யலாம்

அருகிலுள்ள இலங்கை வங்கியில் ரூபா 300/- இனை BBS Netting, A/C 7244197, Bank of Ceylon, Wellawatte Branch என்ற கணக்கிலிட்டு, விபரம், படம், வங்கிரசீது என்பவற்றை பதிவுத்தபால் மூலம் அனுப்பவும். இணையத்தள மூலம் விண்ணப்பித்தபின் ரசீதும் தங்கள் படமும் கணனியகப் பதிவுத்தபால் மூலம் மீள உங்களுக்கு அனுப்பப்படும்.




Director, BBS Netting,
3/14, Pinwatta Road, Dehiwala.


## வாழ்த்துகின்றோம்



கோப்பாய் தெற்கைச் சேர்ந்த
வேல்நிதி-புவனேஸ்வரி தம்பதியரின்
செல்வப் புதல்வன் **வே.தவீஷன்**

தனது 10 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நன்நாளில், 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதுடன், கல்வியில் சிறந்து, வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பல்லாண்டு காலம் பார்போற்ற வாழ எமது பிறந்ததின வாழ்த்துகளையும் அகமகிழ்வுடன் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். - கனக்கான நண்பர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் போர் நெருக்கடிகள் நீங்கவேண்டும் என விரும்பும் பராக் ஒபாமா அமெ.ஜனாதிபதியாகும் சாத்தியம் உண்டா?


பராக் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒருநாள் மட்டுமே இடையில் உள்ளது. உலகின் ஏனைய நாடுகளைப் போன்று அல்லாமல் உலக நாடுகள் முழுவதுமே ஆவலுடன் எதிர்ப்பார்க்கும் தேர்தல்தான் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல். 1980களின் பிற்பகுதியில் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலகின் தலை விதியை நிர்ணயிக்கும் பலம் மிக்க நாடாக அமெரிக்கா விளங்கி வருகிறது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் உலக நாடுகளில் பல்வேறு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

**சஞ்சாரன்**

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா வெற்றி பெற்றால் ஈராக் யுத்தம் முடிவுக்கு வரும் என்று ஈராக் மக்கள் நம்புகிறார்கள். ஒபாமாவின் தேர்தல் வாக்குறுதியிலும் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

புஷ் நிர்வாகத்தின் 'சண்டித்தனமான' நடவடிக்கைகள் காரணமாக தனக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மீண்டும் ஆரம்பித்துள்ள 'பனிப்போர்' தள்வதற்கான சாத்தியம் ஒபாமா வெற்றி பெற்றால் ஏற்படும் என்பது ரஷ்யாவின் நம்பிக்கை.

அதேபோன்று புஷ் நிர்வாகத்தின் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற கோட்பாட்டின் காரணமாக பயங்கரவாதிகள் என்ற பெயரில் பல்வேறு நாடுகளில் அடக்கி ஒடுக்கப்படும் இலங்கைத் தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மை இனங்கள் ஒபாமாவின் வெற்றியை ஆவலுடன் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அடக்கி ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்கள் தமது உரிமைகளுக்காக நடத்தும் போராட்டங்களை பயங்கரவாத நடவடிக்கையாகக் கருத முடியாது என்பதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஒபாமாவும், ஜனநாயகக் கட்சி வேட்பு மனுவைப் பெறுவதற்காக ஒபாமாவுடன் பூர்வாங்க தேர்தலில் போட்டியிட்ட கில்லாரி கிளிங்டனும் மிகவும் தெளிவாகஇருக்கிறார்கள்.

இதை எழுதிக்கொண்டிருந்த சமயம் பராக் ஒபாமாவும் குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோன் மெக்கைனும் தமது இறுதி வாரத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கருத்துக்கணிப்புகளில், இதுவரை 6 சதவிகிதம் முன்னணியில் நின்ற ஒபாமாவுக்கும் குடியரசுக் கட்சி வேட்பாளர் மெக்கைனுக்கும் இடையிலான இடைவெளி குறைந்து வருவதாக செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன. ஒபாமாவுக்கு ஆதரவான வெள்ளையர்களில் கணிசமானோர், அவர் கறுப்பு இனத்தவர் என்ற ஒரே காரணத்தால் இறுதி நேரத்தில் மனம் மாறலாம் என்பதையே இந்த விகிதாசார வீழ்ச்சி கோடி காட்டுகிறது.

## இனவெறிப் பூதம் கிளம்பினால்... இரண்டு நாளில் பதில் தெரியும்

அமெரிக்கா தற்பொழுது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியும் ஈராக் யுத்தமும் இரு வேட்பாளர்களும் எதிர்நோக்கும் முக்கிய சவால்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடி தற்காலிகமானது என்பதை இரு வேட்பாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், ஈராக்கில் இருந்து படைகளை வாபஸ் பெறுவது என்பது அமெரிக்காவின் கௌரவத்துக்குப் பெரும் சவால் என்ற கருத்து வெள்ளை இன மக்கள் மத்தியில் ஓங்கி வருகிறது. குடியரசுக்கட்சி படை வாபஸை எதிர்க்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புஷ் தோற்பார் என்றே கடைசி வரை கருதப்பட்டு வந்தது. ஆனால், புஷ்ஷைத் தோற்கடிக்குமாறு அமெரிக்க மக்களுக்கு அல்ஹைதா தலைவர் பின்லேடன் கோரிக்கை விடப்போய் அது அமெரிக்கர்களின் கௌரவப் பிச்சினையாகி, இறுதிநேரத்தில் புஷ் ஷின் வெற்றிக்கு வழி வகுத்தது.

ஆனால், இம்முறை ஈராக் பிரச்சினை மற்றும் அமெரிக்க பொருளாதார நெருக்கடி கள் ஒருபுறம் இருக்க, கறுப்பு இனத்தவர் ஒருவர் ஜனாதிபதியாவதா என்ற பிரச்சினை யும் இருந்து வருகிறது. ஈராக் பிரச்சினையையும் பொருளாதார பிரச்சினையையும் இது விஞ்சிவிடும்நிலைமை ஏற்படுமானால் இறுதி நேரத்தில் ஒபாமாவின் வெற்றிவாய்ப்புகள் குறைந்து போகலாம். ஒபாமா மீதான கொலை முயற்சிக்கும் இந்த இனவெறிதான் காரணம்.


மக்கெய்ன்

குடியரசுக் கட்சி ஜனாதிபதிகளான றொனால்ட் றேகன், ரிச்சர்ட் நிக்ஸன், ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஆகியோரின் ஆட்சிக்காலம் போன்று இல்லாமல் உலகம் யுத்த நெருக்கடிக்குள் இருந்து விடுபடவேண்டும் என்று ஒபாமா கருதுகிறார். உலகின் பதற்றம் கூடிய பகுதி யாக கொரிய சூன்யப்பிரதேசம் இன்னும் இருந்து வருவதற்கும், உலக நாடுகள் பல யுத்தத்துக்குள் சிக்கி இருப்பதற்கும், உலகில் சிறுபான்மை இனங்கள் பயங்கரவாதிகள் என்ற பெயரில் ஒடுக்கப்படுவதற்கும் குடியரசுக் கட்சியின் கொள்கைகள்தான் காரணம் என்பதை மறுக்க முடியாது.

# விலங்கு இழையங்களைப் பயன்படுத்தி உலகின் முதலாவது செயற்கை இதயம்

மனிதனின் சொந்த இருதயத்தையொத்த செயற்பாடுகளைக் கொண்ட செயற்கை இருதயமொன்றை பிரான்ஸ் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.

இருதய இயக்கம் பாதிக்கப்பட்ட, இருதய மாற்று சிகிச்சையொன்று சாத்தியமற்ற நோயாளிகளுக்கு இந்த செயற்கை இருதயமானது வரப்பிரசாதமாக அமையும என மேற்படி ஆய்வுக்குத் தலைமை தாங்கிய பிரான்ஸின் பிரபல இருதய சத்திரசிகிச்சை நிபுணரான மருத்துவ கலாநிதி அலெய்ன் கார்பென்ரியர் தெரிவித்தார்.

கடந்த 15 வருட கால ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கை இருதயம் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாடு பாரிஸில் இடம்பெற்றது. "உயிரியல் இரசாயன இழையங்களைப் பயன்படுத்தி முழுமையான செயற்கை இருதயம் உருவாக்கப்படுவது உலகில் இதுவே முதற்றடவையாகும்" என மேற்படி இருதயத்தை உருவாக்கியுள்ள உயிரியல் மருத்துவக் கம்பனியான "கார்மட்"இன் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பற்றிக் கொலம்பியர் தெரிவித்தார்.

"இந்த உயிரியல் இரசாயன இழையங்களானது விலங்குகளின் இழையங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டமையால் அவற்றை மனித உடல் நிராகரிப்பதற்கான வாய்ப்புக் குறைவாகவுள்ளது" என அவர் கூறினார். கார்மட் நிறுவனமானது, பொது மற்றும் இராணுவப் பாவனைக்கான விமானங்கள், எறிகணைகள், விண்கலங்கள் என்பனவற்றை உருவாக்கிச் சந்தைப்படுத்தி வரும் விண்வெளி மற்றும் விமானப் பாதுகாப்புக் கம்பனியால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதனே உன்னை நினை

இன்று திருச்சபையிலே சிறப்பாக இறந்தோரை நினைவு கூர்கிறோம். இறந்தோர் நம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர்களுடைய வாழ்க்கை நம்மோடு தொடர்புடையது. அவர்களோடு சேர்ந்துதான் திருச்சபை முழுமை பெறுகின்றது. "புனிதர்களுடைய உறவை விசுவாசிக்கின்றேன்" என்று கூறுவதன் பொருள்தான் இது.

**இன்று இறந்தோர் நினைவு நாள்**

இறந்தோரைச் சிறப்பாக நினைவு கூரும் இந்நாளுக்கெனப் பல வாசகங்கள் தரப்படுகின்றன. பாவத்தின் கூலியே மரணம் (உரோ 6:23) என்பதும், மனிதன் வழியாகச் சாவு உண்டானது போல், மனிதன் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுதல் உண்டு (1கொரி 15:21) என்பதும், அவரோடு அவரில் மரித்தால் அவரோடு அரசு புரிவோம் என்பதும் (2 திமோத் 2:11), இறுதிநாளில் தமது உடலைப்போல எமது உடலையும் மாற்றுவார் என்பதும் (பிலி 3:21) உண்மை. இறைவனது பிரசன்னத்திற்கு தகுதியற்றவர்கள் இறக்கும் போது உத்தரிக்கின்ற தலம் செல்வர் என்பதும்இவர்களால்கழுவாய் தேடமுடியாதநிலையில், இவ்வுலகில் வாழும் விசுவாசிகள் தமது செபத்தால், தபத்தால் உதவி செய்ய முடியும் என்பதும் திருச்சபையின் போதனை, இறந்தவர் களுக்கு நாம் காட்டும் நன்றிக்கடன் அவர்களது தற்காலத் தண்டனையை நமது பரிகாரத்தால் குறைத்து அவர்களைக் கரையேற்றுவதேயாகும். இதுவே இன்றைய விழாவின் நோக்கம்.




இறைவன் நம் அனைவரிடம் இருந்து எதிர்பார்ப்பது நமது பலிகளல்ல, நமது கொண்டாட்டங்களல்ல, நமது விழாக்களும் பவனிகளுமல்ல, நமது தீப, தூப, மலர்க்காணிக்கைகளுமல்ல; மாறாக நீதியைத் தேடுதல், ஒடுக்கப்பட்டோருக்கு உறுதுணையாதல், திக்கற்றவர்களுக்கு வாழ்வு வழங்கல், கைம்பெண்களுக்கு உதவுதல் முதலியனவே (காண். இசை 1:11 - 20) ப.ஏ இல் பலமுறை அழுத்திக் கூறப்படும் இவையான அன்புச் செயல்களே (இசை 58:7; யோபு 22:6:7;31:17:19:21). இறைவன் முன் நம்மை நீதிமான்களாக்கத் தக்கன; இறைவனிடம் நமக்கு மீட்பைப் பெற்றுத் தர வல்லன. எனவே நமது அன்றாட வாழ்வு அன்பு, இரக்கம், பரிவு, நீதி ஆகிய மலர்களால் தொடுக்கப்படும் ஒரு முடிக்கப்படாத நெடிய பூமாலையாக அமையுமா? அன்பு மட்டும் செய்; வேறெதுவும் நீ செய்யலாம்" என்ற அகுஸ்தினாரின் வாக்கு நமக்கு வழிகாட்டியாக அமையுமா?

எனவே இறந்தோருக்காக நம்பிக்கையோடு வேண்டுவோம். உயிரோடிருக்கும் நம்முடைய வாழ்விலே, அருளும், இரக்கமும் கொண்ட இறைவன் பால் நம்பிக்கை வளரவும் வேண்டுவோம். அவநம்பிக்கை நம்மை அவலத்திற்கும், நம்பிக்கை நம்மை நல்வாழ்வுக்கும் நலத்திற்கும் இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து கிறிஸ்தவ நம்பிக்கையோடு வாழ்வோம்.

**- நசரேன்.**

# சிங்கப்பூர் அரசரின் குடும்ப டாக்டராக நியமனம் பெற்ற இலங்கையர்

**1920 நவம்பர் 07**

**டாக்டர் ஹண்டி காலமானார்.**

1917ஆம் ஆண்டு லண்டனுக்குச் சென்று டர்ஹாம் (Durham) பல்கலைக்கழகத்தில் எம்டி பட்டம் பெற்று நாடு திரும்பிய ஹண்டி சிறிது காலம் நாட்டில் சேவையாற்றிய பின் சிங்கப்பூருக்குச் சென்று தனியார் வைத்தியசாலையில் பணிபுரிந்தார். சிங்கப்பூரில் கடமையாற்றியவேளையில் சிங்கப்பூர் சுல்தான் (அரசர்) ஜொஹோரின் குடும்ப மருத்துவராக நியமிக்கப்பட்டார் (Sultan Johore) சிங்கப்பூரில் பிரபலம் பெற்று விளங்கிய டாக்டர் ஹண்டி 1920ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி சிங்கப்பூரில் காலமானார்.

## டாக்டர் ஹன்றி பற்றிய ஒரு குறிப்பு

சிறந்த சமூகசேவை யாளரான ஹண்டி தனது சகோதரனான சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய சார்ள்ஸ் ஹண்டியின் நினைவாக சென். ஜோன்ஸ் கல்லூரியில் நூலக மொன்றையும் ஸ்தாபித்தார். அத்துடன் தனது குருவான வணக்கத்துக்குரிய போலின் (Fall) ஞாபகார்த்தமாக விடுதி ஒன்றையும் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஸ்தாபித்தார். 1918ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஹண்டி ஆற்றிய சேவையைப் பற்றி Patriot பத்திரிகை வெகுவாகப் பாராட்டியிருந்தது.

இலங்கை வாழ் சிங்கள - தமிழ் மக்களிடையே சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முயன்ற காந்தீயவாதி ஹண்டி பேரின்பநாயகம் டாக்டர் ஹண்டியின் குடும்ப அங்கத்தவராயிருக்கலாமென நினைகின்றேன். எனது ஊகம் சரியோ தெரியாது.

**-தாண்டவன்.**



மக்கள் சேவைக்கான ஊடக விருது குடாநாட்டில் இரு ஊடகவியலாளர்களுக்கு கிடைத்துள்ளன.

'உதயனில்' கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதிய பத்திரிகையில் 'சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்குவதால் கிடைக்கப்போகும் பாதிப்புகள்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைக்காக உதயனின் எழுத்தாளர் ந.பரமேஸ்வரனுக்கு விருது வழங்கப்படுவதை முதலாவது படத்திலும்-

'யாழ்.மாவட்டத்திலுள்ள விதவைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்' என்னும் தலைப்பில் Inilanka இணையத்தளத்தில் எழுதிய கட்டுரைக்காக அ.தயாபரனுக்கு விருது வழங்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் மக்கள் சேவை ஊடக விசேட கௌரவ விருது 2008

## உதயன் சந்தித்த நெருக்கடிகள், இழப்புகள், அழுத்தங்களில் சில...

★1999 ஒகஸ்ட் 21 இல்........
உதயன் அச்சிடப்படும் இயந்திரங்களை நாசமாக்கி அதன் வெளியீட்டைத் தடுக்கும் நோக்குடன் துணை இராணுவக் குழுவினால் இரவில் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

★2001 ஜூன் மாதம் 23 இல்......
பிரதம ஆசிரியரை விபத்து என்ற போர்வையில் கொலை செய்வதற்கு யாழ். நகரின் பிரதான வீதி ஒன்றில் வைத்து முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவர் கடுங் காயங்களுடன் தப்பினார்.

★2005 ஒகஸ்ட் 23 இல்.....
கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்திருந்த உதயன் விளம்பரப் பணிமனை மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. பணிமனை அமைந்திருந்த கட்டடச் சொந்தக்காரருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற நேர்ந்தது.

★2006 மே 02 இல்.......
உலகப் பத்திரிகைச் சுதந்திர நாளுக்கு சிலமணி நேரமே இருக்கும் போது, மே மாதம் இரண்டாம் திகதி இரவு உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் கூட்டம், பணியாளர்கள் இருவரைக் கேட்டுக் கேள்வி எதுவுமின்றி சுட்டுக்கொன்றது. அவர்களின் துப்பாக்கிச் சூட்டில் மற்றும் இருவர் படுகாயமடைந்து உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பத்திரிகையை அச்சிடும் பிரதான சாதனங்களில் ஒன்றான கணினிப் பிரிவு சுட்டுப் பொசுக்கப்பட்டுப் பல லட்சம் ரூபா நஷ்டம் விளைவிக்கப்பட்டது.

★2006 ஒகஸ்ட் 15 இல்.....
உதயன் பத்திரிகையை வாகனத்தில் வடமராட்சிப் பகுதிக்கு எடுத்துச் சென்று விநியோகித்துவிட்டு (பணத்துடன்) அலுவலகம் திரும்பும் வழியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தவேளையில் பட்டப்பகலில் வாகனம் மறிக்கப்பட்டு வாகனத்துக்குள் வைத்தே பணியாளர் சுட்டுக்கொல்லப்பட்டார்.


★2006 ஒகஸ்ட் 18 இல்....
கோப்பாயில் இராசவீதியில் அமைந்திருந்த உதயனின் பிரதான களஞ்சியம் இனங்காணப்படாத ஆயுததாரிகளால், அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கப்பட்டு துரத்தப்பட்ட பின்னர், முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டது. அங்கிருந்த ஆயிரக்கணக்கான தொன் பத்திரிகை அச்சிடும் தாள் தீயில் எரிந்து முற்றாகப் பொசுங்கியது. பல லட்சம் பெறுமதியான எலோக்ரோனிக் உபகரணங்களும் எரிந்து நாசமாகின.

★ 2008 ஜனவரி 06 இல்...

அடுத்தநாள் (7 ஆம் திகதி)உதயன் பத்திரிகை வெளிவரக்கூடாது. வெளிவந்தால் நடப்பது வேறு - என்றுகூறி அநாமதேயத் தொலைபேசி அழைப்பு மூலம் மிரட்டப்பட்டது.

★ 2008 ஒக்ரோபர் 24 இல்...

அன்றைய பத்திரிகை குடாநாட்டின் பல இடங்களுக்கு விநியோகத்துக்கு எடுத்துச் செல்லவிடாது ஆயுதம் தரித்த இளைஞர்களால் திருப்பி அனுப்பப்பட்டது.




மக்கள் சேவை ஊடகம் மற்றும் சகிப்புத் தன்மைக்கான ஊடக விருது (*Public Service and Tolerance Journalism Awards*) வழங்கும் வைபவம் கடந்த 24 ஆம் திகதி கொழும்பு, ஹோல்பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றபோது, பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் மக்களுக்கு மகத்தான சேவையாற்றி வருவதற்குமான விருது 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கப்பட்டது. உதயன், சுடர்ஒளி பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், பிரபல எழுத்தாளர் ஜயதிலக கம்மலவீரவிடமிருந்து விருதை பெற்றுக்கொள்வதைப் படத்தில் காண்க.

சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனத்துடன் (*International Federation of Jour nalists*) இணைந்து இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (*Sri Lanka Working Journalists Association*), ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் (*Federation of Media Employees' Trade Unions*) இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் (*Sri Lanka Tamil Media Alliance*) ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் (*Sri Lanka Muslim media Forum*), சுதந்திர ஊடக இயக்கம் (*Free Media Movement*) ஆகியவை இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

## உதயனுக்கு மக்கள் சேவை ஊடக விசேட கௌரவ விருது

அச்சுறுத்தல், அழுத்தங்களுக்கு மத்தியிலும் இலங்கைத் தமிழ் மக்களின் இதயபூமியான யாழ்ப்பாணத்திலிருந்து அவர்களின் குரலாக ஓங்கி உரத்து ஒலிப்பவன் உதயன். அவனது கடந்த 23 வருடப் பணியில் பலவகைப்பட்ட சோதனைகள், வேதனைகள் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ்மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடிவுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் சுபீட்சத்துக்காகவும் நீக்கமற உழைத்து வருபவன் உதயன்.

ஈழத்தில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்தில், தமிழ் உறவுகள் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகளில் எல்லாம் தமிழ்மக்களின் நெஞ்சங்களிலும் இடம் பிடித்து, யாழ்ப்பாணத்தின் முகம் என்ற சிறப்பும் உதயனுக்கே உரியது.

அண்மைக்காலங்களில் உதயனின் குரலை நசுக்குவதற்குப் பல தரப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட்டும் தூண்டப்பட்டும் இடுக்கண்களையும் இழப்புக்களையும் அனுபவிக்க நேர்ந்தபோதிலும் மக்களுக்கான பணிசெய்வதனை பெரும் அறமாகக் கருதி உழைப்பவன் உதயன்.

அவனுக்கு அரணாக, பக்கத்துணையாக விளங்குபவர்கள் வாசகர் பெருமக்களே. பல் இடையூறுகளுக்கு மத்தியிலும் பத்திரிகையை வெளியிட்டு வருவதற்கான விசேடவிருது கிடைத்தமைக்கான பங்களிப்பை நல்கிய வாசகர் பெருமக்களுக்கே எல்லாப் பெருமைகளும் சேரும். அந்தப் பணியை, தார்மீகக் கடமையாக ஆற்றுவதற்குப் பேறுநல்கிய தோன்றாத் துணையான எம்பெருமானைத் துதிக்கின்றோம். அவன் அருள் என்றும் எமக்குக் கிடைப்பதாக!




## பத்திரிகையாளர் மீதான அச்சுறுத்தல்களும் மறைமுக அழுத்தங்களும்

* உதயன் அலுவலகத்தில் பணிபுரிந்த அலுவலகப் பத்திரிகையாளர்கள் பலரும் அச்சுறுத்தல் காரணமாக தொழிலில் இருந்து விலகினர்.

அவர்களில் மூத்த பத்திரிகையாளர்களே பலர்.

* உதயன் பிரதேசச் செய்தியாளர்களும் மறைமுக அழுத்தங்களால் சேவையிலிருந்து நீங்கினர்.

* உதயன் ஆசிரியரின் கொழும்பு இல்லத்துக்கு 2007 ஜூன் 21 ஆம் திகதி இரவு சென்ற ஒரு குழுவினர் அவரைத் தேடிச்சென்றனர். பாதுகாப்பு ஊழியரின் சாதுரியத்தால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

* உதயனின் இளம் செய்தியாளர் ஒருவர் (2007 ஏப்ரல் 29 ஆம் திகதியன்று) அலுவலகத்துக்கு வரும் வழியில் பட்டப்பகலில் யாழ்ப்பாணநகரத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

* ஆசிரியர்பீட உறுப்பினர்களில் ஒருவர் இரவுப் பணிமுடிந்து அலுவலகத்தில் இருந்து 2007 நவம்பர் 14 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை, யாழ். நகரில் இடையில் வழியில் வைத்துக் கடத்தப்பட்டார்.

## நேரடிப்பாதிப்புகள்...

கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பிரதான போக்குவரத்துப் பாதையாக இருந்த ஏ-9 வீதி மூடப்படுவதற்கு முன்னர் உதயனின் நாளாந்த விற்பனை சுமார் 25,000 பத்திரிகைகளாக இருந்தது.

நாளாந்தம் சராசரி 20 பக்கங்களில் வாரத்தில் இரு நாள்கள் 28 பக்கங்களில் பிரசுரமாகி வந்தது.

''மீடியா ஹபிற்றாற்'' நிறுவனம் 2005 மார்ச் மாதம் நடத்திய பத்திரிகை விற்பனைப் புள்ளி விவரமதிப்பீட்டில் இலங்கையில் பிரசுரமாகும் எட்டுத்தமிழ் நாளிதழ்களில் உதயனே முதலாவது இடத்தைப் பிடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உதயன் பிரதான களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பத்திரிகைத்தாள் முற்றாக எரிந்து நாசமாக்கப்பட்டதாலும், பத்திரிகைத் தாளைக் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாலும் -

உதயனின் பக்கங்களை 8, 6, 4 என்று படிப்படியாகவும் விற்பனை எண்ணிக்கையை 25,000 ஆயிரம் பிரதிகளில் இருந்து சிற்சில நாள் இடைவெளிகளில் 22,000, 16,000, 6500, 6000 என்ற எண்ணிக்கைக்கு குறைத்து அச்சிட்டு விநியோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உள்நாட்டிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் கொடுக்கப்பட்ட அழுத்தங்களால் 28.04.2007இல் நாளாந்தம் 6 பக்கங்களில் அச்சிட்டு இரண்டு மாதங்களுக்கு மட்டுமே விற்பனைக்கு அனுப்பக்கூடிய பத்திரிகைக் காகிதமே எடுத்துவர அனுமதிக்கப்பட்டது.

இப்போது பத்திரிகைத்தாளைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து வர அனுமதிக்கப்படுவதால் பத்திரிகை விற்பனை முன்னரைப்போன்று அதிகரித்துள்ளது.

நெருக்கடிகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு வந்தமைக்காக 1999இல் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் அவையினால் உதயனுக்கு துணிச்சலுக்கான இதழியல் விருது வழங்கப்பட்டது. இது தொடர்பான வைபவம் ஒன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் இடம்பெற்றபோது, உதயன் பிரதம ஆசிரியர் உட்பட சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் தூதுவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏகன்
## திரைவிமர்சனம்

அல்டிமேட் ஸ்ரார் அஜித், நயன்தாரா, நவ்தீப், ஜெயராம், சத்யன் என்போரின் நடிப்பில் ராஜு சுந்தரத்தின் இயக்கத்தில் தீபாவளி விருந்தாய் வெளிவந்திருக்கும் திரைப்படம் ஏகன்!

திறமையான பொலிஸ் அதிகாரியான அஜித் ஒரு இரகசிய நடவடிக்கைக்காக ஊட்டியில் உள்ள ஒரு கல்லூரியில் மாணவராகச் சேர்கிறார். அந்தக் கல்லூரியில் சேர்ந்த பிறகே தனக்கு ஒரு தம்பி இருப்பதையும், அவரும் அதே கல்லூரியில் படிப்பதையும் அஜித் அறிய அதன்பிறகு என்ன நடக்கிறது என்பதே ஏகன் படத்தின் கதை.

தம்பி மீதான பாசம் ஒரு புறம் வில்லன் கும்பலின் திட்டங்களை தவிடு பொடியாக்கும் ஆவேசம் ஒருபுறம் நயன்தாராவுடன் கொஞ்சிக் குலாவும் காதல் ஒருபுறம் என வழமையான தமிழ்ச்சினிமாப் பாணியில் செல்லும் கதையை நகைச்சுவையைக் கலந்து சொல்லியிருக்கிறார்.

வழமையில் இறுகிய முகத்துடன் வலம் வருகின்ற அஜித் இதில் கலகலப்பான நாயகனாக வந்து ஆச்சரியம் தருகின்றார்.

நயன்தாரா கவர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்.

அஜித்தின் தம்பியாக வரும் நவ்தீப்பின் நடிப்பில் நல்ல முன்னேற்றம் தெரிகின்றது.

ஜெயராம், சத்யன், ஹனீயா ஆகியோருடன் அஜித் நடத்தும் நகைச்சுவை ரகளையால் திரையரங்குகள் அதிர்கின்றன.

யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை சிறப்பாக இருந்தாலும் பாடல்களில் அவரது உழைப்புத் தெரியவில்லை.

ஏகன் படத்தில் இயக்குநராக அவதாரமெடுத்த ராஜுசுந்தரம் மிகச்சிறப்பாகத் தன்னுடைய கைவரிசையைக் காட்டியிருக்கிறார். எனினும் படத்தின் இறுதிக் காட்சியில் கொஞ்சம் சொதப்பி விட்டார். மற்றப்படி இம்முறை தீபாவளிக்கு 'தல' ரசிகர்களுக்கு ஏகன் தலைவாழை விருந்து படைத்திருக்கின்றது!

# வேட்டைக்காரி தயார்



ஒரு வழியாக வேட்டைக்காரனுக்கு ஏற்ற வேட்டைக் காரியைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

இளைய தளபதி விஜய் இனி நடிக்க இருக்கும் படம் "வேட்டைக்காரன்". இந்தப் படத்திற்கு நாயகியாக எந்த நடிகையைத் தேர்வு செய்வது என படத்தின் இயக்குநர் குழம்பிக் கொண்டிருந்தார். ஸ்ரேயா அல்லது அசின் இந்தப் படத்தில் தன்னுடன் ஜோடி சேர்ந்தால் நன்றாக இருக்குமென்று விஜய் எண்ணினார். ஆனால் ஸ்ரேயா ஏகப்பட்ட தமிழ்ப் படங்களில் மூச்சு விடக்கூட நேரமில்லாது நடித்து வருவதால், வேட்டைக்காரனோடு சேர்ந்து வேட்டையாட முடியவில்லை.

அசின் தற்போது ஹிந்திப் படங்களிலேயே நாட்டங்கொண்டு நடித்து வருவதால் தமிழ்ப்படங்களில் நடிக்க வரமாட்டார் என்றே பலரும் எண்ணினர். ஆனால் விஜய் படம் என்றதும் மறு பேச்சில்லாமல் வேட்டைக் காரியாவதற்கு சம்மதித்துள்ளார் அசின்.

சிவகாசி, போக்கிரி படங்களில் கலக்கிய இந்த ஜோடி 'ஹட்ரிக்' வெற்றியைப் பெறுமா? என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.




நல்ல கதையம்சமும், சிறந்த கலைத்துவமும் உடைய படங்களை மக்கள் விரும்பி வரவேற்பார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறது 'சுப்பிரமணியபுரம்' திரைப்படம்.

## வெற்றியில் சுப்பிரமணியபுரம்

மிகப்பெரிய பொருள்செலவில் எடுக்கப்படுகின்ற , புகழ் பூத்த நடிகர்களின் படங்களே 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று வந்த வேகத்திலேயே திரையரங்குகளை விட்டு ஓட்டமெடுக்கின்ற இக்காலத்தில், குறைந்த பொருட்செலவில் வெளிவந்த 'சுப்பிரமணியபுரம்', நூறு நாள்களைக் கடந்து, இன்னமும் ஓடிக்கொண்டிருக்கின்றது.

# ஒஸ்கார் நம்பிக்கையில் அமீர்கான்



ஹிந்திப் படவுலகின் முன்னணி நாயகனான அமீர்கானுக்கு ஒஸ்கார் விருது மீது நீண்ட நாள்களாகவே ஒரு கண். ஏற்கனவே அவரது 'லகான்' திரைப்படம் ஒஸ்கார் விருதினை மயிரிழையில் தவறவிட்டது.

எனினும் எப்படியும் ஒஸ்கார் விருதை வென்றே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு, அதற்கேற்ப படங்களைத் தேர்வு செய்து வருகிறார் அமீர்கான். அண்மையில் அமீர்கான் இயக்கி, நடித்திருந்த 'தாரே ஜாமீன் பார்' என்ற – குழந்தைகளின் உலகியலைப் பேசுகின்ற - திரைப்படம் வசூல் ரீதியாகவும், கலைத்துவ ரீதியாகவும் பெரு வெற்றி பெற்றுள்ளது. இத்திரைப்படம் இவ்வாண்டுக்கான ஒஸ்கார் விருதுக்குப் போட்டியிடும் படங்களில் ஒன்றாகத் தெரிவாகியுள்ளது.

'லகான்' படத்தில் கைநழுவிப்போன ஒஸ்கார் விருது இந்த முறை எப்படியும் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார் அமீர்கான். அவரின் நம்பிக்கை வெற்றி பெறட்டும்.

# மீண்டும் சிம்ரன்

திருமணத்திற்குப் பிறகு நடிப்புத்துறைக்கு முழுக்குப் போட்டிருந்த நடிகை சிம்ரன் மீண்டும் திரையுலகப் பிரவேசம் செய்திருக்கின்றார். ஆனால், இம்முறை கவர்ச்சியைக் காட்டும் கதாநாயகியாக அல்லாமல் நடிப்பினை வெளிப்படுத்தும் குணச்சித்திர வேடங்களினூடாக சிம்ரனின் மீள் பிரவேசம் நிகழ்ந்திருக்கின்றது.

வாரணம் ஆயிரம், சேவல் போன்ற படங்களில் சிம்ரனின் நடிப்பைப் பார்த்த பல இயக்குநர்கள் தம்முடைய படங்களிலும் நடிக்கச் சொல்லி சிம்ரனிடம் ஒற்றைக்காலில் நிற்கின் றார்கள். ஆனால், சிம்ரனோ 'நல்ல கதையம் சமும், என் நடிப்புத் திறமையை வெளிப்ப டுத்தும் கதாபாத்திரமும் அமைந்த திரைப் படங்களில் மட்டுமே நடிப்பேன்' என அவர்க ளிடம் கூறி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயது குறைந்த விதவைகளுக்கு மறுமணம் செய்துவைத்து புதுமையான 'சுயம்வரம்' செய்துவைக்க முன்வாரீர்



நல்லூரில் இயங்கும் தியாகி அறக்கொடை நிலையத்தின் கண்காட்சி மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதான உரையாற்றினார்.

அவர் தமது பேச்சில் இன்றைய சமுதாயத்தைத் தொட்டுக் காட்டி, சில புதிய - சீர்திருத்தக் - கருத்துக்களை - பயன்தரவல்ல, எமது சமூகத்தை நேர்நிறுத்தக் கூடிய புதுமையான எண்ணங்களை - வெளிப்படுத்தினார். அவரது நீண்ட பேச்சை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

**இன்று** வெளிநாட்டு நல்ல உள்ளங்களும் உள்நாட்டு உத்தமரும், நலிந்து போன மக்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய முற்பட்டாலும், எதைச் செய்யலாம்? எப்படிச் செய்யலாம் என்ற தெளிவின்றி, ஒன்றையே பலரும் செய்யும் ஒரு பரிதாப நிலை தென்படுகின்றது. இன்றைய போர்ச்சூழலில் வறுமை, பசிப்பிணி, சமுதாயச்சீரழிவு ஆகியவற்றைப் போக்க முன் முயற்சிகளை எடுப்பாரைக் காணோம்.

ஊருக்கு ஒரு திருமண மண்டபம் என்று தொடங்கி, போட்டியாக ஊருக்குப் பல திருமண மண்டபங்கள் ஏட்டிக்குப் போட்டியாக அமைவதையும் காண்கின்றோம். ஒரு மண்டபத்தில் மாப்பிளை புறப்பட்டு மறுமண்டபத்தில் பெண்ணைக் கைப்பிடிக்கும் காலமும் வரும்போலத் தோன்றுகின்றது!

இங்கே தான் மிக வறிய ஓலைக் குடிசை, அதுவும் மழைகாலம் நீர் ஊறும் நிலையிலேயே உள்ள கொட்டிலிலே வறுமைக் கோட்டின்கீழ் வாழ்பவர்கள், தமது உறவுகளின் அந்திமக் கிரியைகளைத் தெருவிலே, படலையருகே வைத்துக் கிரியை செய்யும் பரிதாப நிலையையும் காண முடிகின்றது.

### வேண்டும் அந்திமக் கிரியை மண்டபம்

இது பற்றிச் சிந்தித்து ஒரு பெரிய வீட்டினை விலைக்குப் பெற்றோ, அல்லது ஒரு மண்டபத்தை அமைத்தோ வீடு வசதியற்றவர்கள் தம் உறவுகளின், இறுதிக் கிரியைகளை இடவசதியாக நடத்தி இடுகாட்டுக்கு அனுப்பி வைக்க ஏதுவாக, ஏன் ஊருக்கு ஒரு மண்டபம் அமைக்கக் கூடாது?

கலியாண வீடு, செத்த வீடு என்று சொன்ன காலம் போய் கலியாணம் என்றால் மண்டபம், பூப்புனித நீராடல் கொண்டாட்ட மண்டபம், என அமைக்கும் நாம் ஏன் 'அந்திமக்கிரியை மண்டபம்' என்று காலத்துக்கேற்றவாறு, மாற்றிக் கொள்ளக் கூடாது? ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில கால வரையதனாலே'' என இடம் தந்து நிற்கிறதே எமது தமிழ். இது குறித்துச் சிந்திக்கக் கூடாதா?

அடுத்து ஒரு, புதியதோர் திட்டத்தை ஏன் நிறைவு செய்யக்கூடாது, என்று எண்ணி அதனையும் உங்கள் முன்வைக்கின்றேன்.

பழமைவாதிகள், சமயப்பெரியார்கள், சான்றோர்கள், முதியவர்கள் ஆகியோர் ஒருசமயம் இதனை முட்டாள்தனம் என்று கூறி, பஞ்சாங்கத்தைத் தமது கவசமாக பாவித்துக் கண்டிக்கவும் முற்படலாம். காலத்தின் கட்டாயத்தை இக்கனவான்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இது 'விதவைகள்' திருமணம் பற்றிய எனது கருத்து. புள்ளிவிவரங்களைப் புரட்டிப் பார்த்தால், 30 வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகளே இன்று எம்மத்தியில் அதிகரித்து வருகின்றனர். குழந்தை ஒன்றோ இரண்டோ அல்லது குழந்தையே இல்லாத விதவைகள் ஏராளம். காலத்தின் கொடுமை இவர்களைக் கண்ணீரை வடிக்க வைத்து நிற்கின்றது. இதே போன்று மறுபுறத்தில் மனைவியை இழந்து மணாளர்கள், மனது நொந்து வாடுவதைக் காண்கின்றோம். இதைவிட இன்று நாட்டுக்குத் தம்மை தியாகம் செய்யும் நல்ல மனம் படைத்த, தாரம் இழக்காத தன்மானத் தமிழ் வாலிபரும் வாழ்கின்றார்கள்.

முப்பத்தைந்து வயதைக் கடந்த பெண்களுக்கு அதிக சீதனத்தோடு சீர்வரிசையோடு, சிறப்பாக, டாக்டர், எஞ்ஜினியர் என விமரிசையாக மேள தாளத்தோடு திருமண விழாக்கள் நடக்கும் இப் ''புண்ணிய பூமி'' யிலே, நாற்பதைத் தாண்டிய நங்கையரும் திருமணத்தில் திளைக்க, இருபத்தைந்தே வயதான மாதரசி, கண்ணீரும் கம்பலையுமாக இறந்த தன்கணவனை எண்ணி இரவு பகலாகக் கண்ணீர் விட்டே தன்எஞ்சிய ஐம்பது ஆண்டுகளையும் செலவிட வேண்டுமென்று கற்றவர் சமூகம் கருதக் கூடாது. இனி ஒரு விதி செய்வோம் என்றான் பாரதி. புரட்சிகரமாக இப்பேற்பட்ட மாதரசிகளையும், மறுமணம் செய்ய மறவர்கள் இருப்பின் ஏன் இதனைச் ''சுயம்வரம்'' என்று பேரிட்டு ஆரம்பித்து வைக்கக் கூடாது.

### மாணவரைப் பாராட்டுதலுக்கு வரையறை வேண்டாமோ?

ஐந்தாம் வகுப்பில் படித்த மாணவர் கள் கட்டாயம் நூறுக்கு 75% புள்ளிகள் பெறத்தான் வேண்டும். இதனை நவயுகத்தின் சாதனையாகக் கருதி நாளெல்லாம், பள்ளிக்கூடங்கள் எல்லாம், மன்றங்கள், சங்கங்கள் எல்லாம் ஊர்வலங்கள் மலர் மாலைகள் போட்டு, சான்றோர்கள் மேடையேறி மணிக்கணக்காக முழக்கமிட, சித்தியடையாத 80 வீதமான சிறார்கள் உள்ளம் சிதைந்து, வருந்தும் கொடுமையையும் கண்ணாரக் காண்கிறோம். பாராட்டுதலுக்கும் ஒரு வரையறை வேண்டாமோ...? சித்தியெய்தாத சிறார்களை பெற்றோரைக் கூட்டி வைத்து விழாவெடுத்து, ஊக்கம் தரும் உத்தமரை இதுவரை கண்டிலேன்; கேட்டிலேன். காரணத்தையும் நான் அறியேன். விளம்பரம்தானே எமக்கென்ன என்று நினைத்துப்போலும் நூற்றுக்கும் அதிகமான படங்கள் பிரசுரமாகிவிட்ட பின்னரும் கற்றவர் சமுதாயம் இதனைக் கருத்தில் கொள்ளவில்லை!

நான் வாலிபனாகப் படிக்கும் காலம் புகைவண்டி ஓடியகாலம். தெருவோரங்களில் ஊரின் பெயர் பொறித்த பலகைகள் பெரிதாக நடப்பட்டிருக்கும். சாவகச்சேரி முதலாக பளை வரை ஊரின் பெயர் பெரிதாக தெருவோரம் துலங்கி நிற்கும். இன்று பிற நாட்டவர் ஒருவரை பருத்தித்துறை வரை பின் மாவிட்டபுரம் வரை, அடுத்து காரை நகர் வரை பெருந்தெருக்களால் கூட்டிச் சென்றேன். இது எந்த ஊர் என்று அவர் வழிப்போக்கரைக் கேட்டே குறிப் பெடுத்தார். தான் எழுதப்போகும் கட்டு ரைக்கு ஊர்பேர் தெரியவில்லையே என்று தனக்குள்ளே முனங்கினார். யாழ்ப்பாணம் முழுமையுமே ஒரே ஊர் என்று கொள்வதும் பரந்த மனப்பண்பாடு என்றார் அவர்.

முன்பொரு காலத்தில் சமூகசேவை அமைப்பு ஒன்றில் அங்கத்தவராக இருந்து புதிய யோசனைகளை பேசினேன். எவரும் கருத்தில் எடுத்தாரில்லை. பின்னரும் கண்டித்து - கடிதமும் எழுதி என்னையும் துரத்திவிட்டது அந்த அமைப்பு.

உருக்கு நல்லவை செய்வோரை இன்று காண்பது அரிதாகிவிட பேருக்குச் சேவை செய்யும் பெரியோர்கள் நிறைந்த நாடாகி விட்டது நமது நாடு. இன்று தியாகி அறக்கொடை ஆற்றும் சேவை ஒரு புதுமையை புலப்படுத்தி நிற்பது கண்டு பூரிக்காமல் இருக்க முடியவில்லை-

''நன்றும் தீதும் பிறர் தர வாரா'' என்ற தமிழர் தம் தாரா மந்திரத்தை நவயுக வாலிபர்களே நன்குணர்ந்து செயற்படுவீர் நாளை நமதாகட்டும்!

இந்தப் போர்க்கால சூழ்நிலையில், மூத்தவர்கள் மேடைகளிலே பேசிப்பேசி தமது காலத்தை வீணடிக்காது- சமூகசீர் திருத்தப் பேரவை என ஒன்றை நிறுவி, அப்பேரவை, நாட்டின் நலனுக்காக நல்ல பல திட்டங்களை திட்டமிட்டு வகுத்து சீர்தூக்கி ஆராய்ந்து - புதுமைகள் விளைக்கும் செயற்பாட்டை புகுத்தும் ஒரு நவயுக பேரவையை அமைத்து கலாசாரச் சீரழிவைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கலாம். நல்ல திட்டத்தை மனதில் கொள்வார்களா எமது 'சேவை'ப் பெருமக்கள்!

**பேசிப் பேசிக் காலத்தை வீணடிக்கும் எமது மூத்தவர்கள் புதுமைகள் விளைக்கும் நவயுகப் பேரவை நிறுவலாமே!**

**மு.திருநாவுக்கரசு**

# சாந்தைக் கிராம கடற்றொழிலாளருக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

தொழில்வாய்ப்பு இழந்து நிற்கும் பண்டத்தரிப்பு சாந்தைக் கிராமக் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற் கொண் டுள்ளார்.

பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதி மக்கள் அப்பகுதிப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மூலம் அமைச்சருடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகளைத் தெரிவித்திருந்தனர்.

இதன்போது, உலக வங்கியின் வீட்டுத் திட்டத்தில் சாந்தைப் பகுதியையும் இணைத்தல், தொழில் வாய்ப்பை இழந்து நிற்கும் 308 கடற் றொழிலாளர்களுக்கு நிவாரண உதவி களைப் பெற்றுக் கொடுத்தல், ஜே/148, ஜே/149 ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளையும் இணைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

கோரிக்கைகளைக் கேட்ட அமைச்சர் அனைத்துக் குறைபாடுகளும் கட்டம் கட்டமாகத் தீர்த்துவைக்கப்படுமென்றுதெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பாலசிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு, விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது முத்தையன் கட்டில் வசித்து வந்தவருமாகிய வேலுப்பிள்ளை பாலசிங்கம் நேற்று முன்தினம் (31.10.2008) வெள்ளிக்கிழமை முத்தையன் கட்டில் காலமானார்.

அன்னார் கமலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சியாமளன் மற்றும் ராகுலன் (கனடா), அஜந்தா, தயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேந்திரா, மதுரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிஷ்ராகவின்அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1A, நேதாஜி தெரு,
இந்திரா நகர்,
திருச்சி - 21
இந்தியா.
தொ.பே: 00914314051712
email: ajeraa@gmail.com

(78947)

தகவல்:
குடும்பத்தினர்.

**நாகம்ஸ் சினிமாவில்**

தற்போது விஷால் - நயன்தார நடித்த

''சத்யம்''

காலை 10.30
பி.ப. 2.30
இரண்டு காட்சிகள்

**REPAIRING**

Computer, Television, Monitor, DVD, CDPlayer, UPS, Printer, Woofer என்பன உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
திருத்திய பின்னர் உத்தரவாதம் வழங்கப்படும்.

உங்கள் கணனிகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கோ, அலுவலகத்திற்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

**STR Computer System**
380, Navalar Road, Nallur, Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலடிக்கு அருகில்)
T.P: 021 4590775, 077 4192275

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை ஞானச்சந்திரன்



ஆனந்தா வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை ஞானச்சந்திரன் நேற்று (01.11.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்துரை - தங்கேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், சந்திரகலா, சந்திரகரன், சசிகலா, சசிகரன் (டோகா), சர்மிளா (மாணவி, இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேந்திரன், கஜந்தனா, ரனிதா ஆகியோரின் மைத்துனரும், செல்லம்மாவின் மருமகனும், ஜீவகரன், ஜீவிதா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

(79514)

தகவல்:
ஐ.சந்திரகரன் (சகோதரன்).

### கந்தையா பரஞ்சோதி

நுணாவில் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரஞ்சோதி நேற்று (01.11.2008) சனிக்கிழமை காலமானார்

அன்னார் சோதிமதியின் அன்புக் கணவரும்காலஞ்சென்றவர்களான கந்தையா- சிவபாக்கியத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா- தங்கமுத்துவின் அன்பு மருமகனும் பாஸ்கரன் (சிறி), குமுதினி (இத்தாலி), மயூரன் (சேகர்-லண்டன்), ராஜினி (இத்தாலி), பிறேமினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமலர், உதயகுமார், கேதீஸ்வரன், ஜெயா, முரளி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

தகவல்:
பாஸ்கரன் (மகன் - சிறி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கப் புதையல்



ஓர் ஊரில் படு சோம்பேறி ஒருவன் இருந்தான். அவனுக்கு அன்றைய தினம் சாப்பாடு ஏதும் கிடைக்க வில்லை. அதனால் பக்கத்து ஊருக்குப்போய் பிச்சை எடுத்துப் பிழைத்துக்கொள்ளலாம் என்று கிளம்பினான். வழியில் ஓர் அடர்ந்த காட்டுப்பிரதேசம். அந்தக் காடு முழு வதும் உள்ள மரங்களில் ருசியான பழங்கள் இருந்தன. அவன் நினைத்தால் மரத்தில் ஏறி பழங்களைப் பறித்து உண்ணலாம். ஆனால், அவன் தான் படுசோம்பேறி ஆயிற்றே? எப்படி மரத்தில் ஏறுவான்? கீழே கிடந்த பழங்களைப் பொறுக்கி உண்டான். அதுவே, அவனுக்குப் போதுமானதாக இருந்தது. வயிறு நிரம்பியதும் அக்கம் பக்கம் பார்த்தான். அருகிலே ஒரு பெரிய கல் இருந்தது. அதில் தலையை வைத்து படுத்துக் கொண்டான். பகலில் அவன் உறங்கும் பழக்கம் உண்டு என்பதனால் படுத்தவுடன் தூங்கிவிட்டான். அவனது பரிதாப நிலையையும், சோம்பேறித்தனத்தையும் பார்த்த கடவுள் அவனது கனவில் தோன்றி ''மகனே..... நீ உனது சோம்பேறித் தனத்தினால்தால் ஏழ்மை நிலையில் இருக்கிறாய். ஆனாலும் உனக்கு உதவி செய்ய விரும்புகிறேன். நீ படுத்திருக்கும் இடத்தில் பூமிக்குள் ஒரு தங்கப்புதையல் இருக்கிறது. இலேசாக மண்ணைத் தோண்டினால் போதும். தங்கப்புதையல் தென்படும். அதை எடுத்து வீட்டுக்குப்போய் சுபீட்சமாக வாழ்ந்து கொள். ஆனால் ஒரு நிபந்தனை இப்போதிலிருந்து 2 மணி நேரத்துள் புதையலை எடுக்காவிட்டால் அது மறைந்துவிடும். ஜாக்கிரதை! 2 மணி நேரம் முடியும் தறுவாயில் ஒரு காகம் கரைந்து உனக்கு ஞாபகப்படுத்தும்'' என்று கூறி மறைந்தார். சோம்பேறி திடுக்கிட்டு எழுந்தான். அவன் படுத்த இடத்திலிருந்து ஒரு கால்தடம் சென்றிருந்தது. அருகே உள்ள மரத்தில் ஒரு கிளையில் ஒரு காகம் இருந்தது. கடவுள் கூறியது உண்மைதான் என அவன் தெரிந்து கொண்டான். ஆனாலும் சோம்பல் அவனை விடுமா? கடவுள்தான் 2 மணிநேரம் கொடுத்திருக்கிறாரே! தவிர ''மரத்தடியில் கைக்கு எட்டும் தூரத்தில் தானே புதையல் உள்ளது. அதனால் சற்று நேரம் தூங்கிவிட்டு தோண்டி எடுப்போம்'' என்று கல்மீது தலை வைத்துகுறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கினான் சோம்பேறி. தூங்கினான்....... தூங்கினான்..... தூங்கிக் கொண்டே இருந்தான். சரியாக 2 மணிநேரம் முடிந்தது. காகம் கரைய ஆரம்பித்தது. ஆனாலும் அவன் எழுந்திருக்கவில்லை. கடைசி முறையாக காகம் கரைந்து விட்டு,அவன் மீது எச்சமிட்டு விட்டு பறந்து சென்றது. அந்த உணர்வில் சோம்பேறி திடுக்கிட்டு விழித்தான். காகம் பறந்து போவதைக் கண்டு அதிர்ந்தான். தன் சோம்பேறித்தனத்தால் கைக்கு வந்த அதிஸ்டமும் கலைந்துபோய் விட்டதே என்று விழித்தான். முகத்தில் வழிந்த காக்கையின் எச்சத்தைத் துடைத்தபடி அசடுவழிய நின்றான் சோம்பேறி.

விஜயரத்தினம் கௌதமி, தரம்-7டி,
வேம்படி மகளிர் உ/த பாடசாலை.




மாயக்கிழவி அவ்வாறு சொன்னதும் ஒருகணம் காடே சுழல்வது போல நந்தி ர்மன் உணர்ந்தான்.

மறுகணம் –

அவனும், அவனது தளபதியும், படைவீரர்களும் வேட்டையாட ஆரம்பித்த இடத்தில் ஒன்றாய் நின்றனர். நந்திவர்மனைத் தவிர மற்றைய எவருக்கும் இதுவரை நடந்தது ஞாபகத்தில் இருக்கவில்லை. ஏதோ கனவு கண்டு விழித்தவர்கள் போலவே அவர்கள் இருந்தார்கள்.

ஆனால் நந்திவர்மனுக்கு மட்டும் இளவரசர்களை மந்திரக்கிழவி பலிகேட்ட விடயம் திரும்பத் திரும்ப ஞாபகத்துக்கு வந்தது. மனதில் பெரும் துயரைச் சுமந்து கொண்டு, தொடர்ந்து வேட்டையாடுவதை நிறுத்தி விட்டு அரண்மனை திரும்பினான் மன்னன்.



''இதுதான் நடந்தது மகாராணி. அன்று மந் திரக் கிழவியிடம் நான் உறுதி யளித்தபடி என் புதல்வர்களைப் பலியிட நான் அவளிடம் கொடுக்கவில்லை. அந்த ஆத்திரத்தில்தான் இப்படிச் சித்து வேலைகள் செய்து இளவரசர்களைக் கவர்ந்து விட்டாள்''

என முன்னர் நடந்த சம்பவத்தையும், இளவரசர்கள் எதற்காகக் கடத்தப்பட்டார்கள் என்பதையும் சொல்லி முடித்தான் நந்தி வர்மன்.


அவ்வாறு அவன் சொல்லி முடித்ததுதான் தாமதம்! அடுத்த நொடியே 'ஓவென்று' பெருங்குரலெடுத்து அழத்தொடங்கினாள் மகாராணி.

''மகாராணி! பயங்கொள்ள வேண்டாம். எப்படியும் நம் பிள்ளைகளை அந்த ராட்சசியின் பிடியிலிருந்து மீட்டு விடலாம்'' என்று தன் மனைவிக்கு மன்னன் ஆறுதல் கூறத் தொடங்கினான்.

அதேசமயம் –

அடர் கானகமொன்றில், கரையொதுங்கி இருந்த இளவரசர்கள் இருவரும் தாம் யாரால் இப்படி மந்திர வல்லமையால் இழுத்து வரப்பட்டோமென்று அறியாதவர்களாய், கைகளில் உருவிய வாள்களுடன் நடக்கத் தொடங்கினர். (தொடரும்)

# யானை பற்றிய சில தகவல்கள்



ஒரு நாளைக்கு 225 லீற்றர் குடிதண்ணீர் யானைக்குத் தேவைப்படுகின்றது. யானைக் குட்டி தாயின் வயிற்றில் 22 மாதங்கள் வளர்கின்றது. யானை ஒரு நிமிடத்துக்கு 10 தடவை சுவாசிக்கிறது.

மரப்பட்டைகளும் யானைக்கு மிகவும் பிடித்தவை. யானையின் பாதத்தில் கொழுப்பும், சதையும் நிறைந்து கனமாக மெத்தைபோல் உள்ளது. இதனால்தான் யானை நடக்கும் போது சத்தம் கேட்பதில்லை. சுமார் 300 கிலோகிராம் இலை,தழைகளை உணவாக எடுத்துக் கொள்கிறது. பிறந்து ஆறு மாதங்கள் வரை யானைக்குட்டிகளின் உணவு வெறும் தாய்ப்பால் தான்.

ஜெயநாதன் ஜெயவர்மன், தரம்-8ஏ,
யா/மகாஜனக் கல்லூரி.






## உயிரெழுத்து உண்மைகள்

அன்புத் தெய்வம் அறிந்திடு
ஆசைகள் குறைந்து வாழ்ந்திடு
இனிய வார்த்தைகள் பேசிடு
ஈகை எண்ணம் பேணிடு
உயிரெனக் கல்வி கற்றிடு
ஊருக்கு நன்மை செய்திடு
எறும்பு போல உழைத்திடு
ஏற்றம் வாழ்வில் பெற்றிடு
ஒற்றுமை மேலெனச் சேர்ந்திரு
ஓடும் காலத்தை மதித்திடு
ஔவை மொழிந்தவை நினைத்திடு

சு.விஜிதா,
தரம் -08,
யா/ மகாஜனக் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா?

1.வரி விதிப்பு இல்லாத நாடு.
வடகொரியா
2.காக்கை இல்லாத நாடு.
சிங்கப்பூர்
3.ஆறுகள் இல்லாத நாடு
சவூதி அரேபியா
4.பாம்புகள் இல்லாத நாடு.
அயர்லாந்து
5.வருமான வரி இல்லாத நாடு.
குவைத்
6.இராணுவம் இல்லாத நாடு.
ஹோஸ்டாரிக்
7.கரடி இல்லாத நாடுகள்
ஆபிரிக்கா,
அவுஸ்திரேலியா
8.உலகில் 2 ஆவது பெரிய நாடு.
கனடா
9.அதிக காலம் வாழும் விலங்கு
ஆமை
10.அதிக ஞாபகசக்தி உள்ள விலங்கு.
யானை

ம.மரியதிறோஜன்,
தரம் -7ஏ,
யா/ புனித சாள்ஸ் மகாவித்திலாயம்.

## சமாதானமே..!



சமாதானம் என்பது ஐந்தெழுத்து
அதுதான் வாழ்வின் உயிரெழுத்து
விலை மதிக்க முடியாத சமாதானமே
உனக்கு உருவம் உண்டோ கூறம்மா?
சமாதானம் இல்லாத ஊரினிலே
நிம்மதியாக வாழ்ந்தவன் யாரம்மா?
சமாதான அருமை தெரியாத யாரும்
உலகினிலே உண்டோ கூறம்மா?
தொட்டு விடும் தூரத்தில் சமாதானம்
இல்லை அதை பெற்று விட வழி கூறாயோ!
நாளை சமாதானத்திற்காக
இன்று அத்திவாரம் இடாயோ?
சமாதானம் எனும் கோயிலிலே
பறக்க எனக்கொரு வரம் தாராயோ!
நம் மண்ணில் யுத்தம் நின்று
சமாதானம் நிலைக்க வழி கூறாயோ?

ச.இந்துஜா, கைதடி மேற்கு, கைதடி.

## விடுகதைகள்

1. உச்சியிலே பச்சைக்கிரீடம், உடம்பெல்லாம் சுண்கள். அது என்ன?
அன்னாசிப்பழம்
2. உயரத்தில் பறப்பான். அவன் விசையோ தரையில் தான். அவன் யார்?
பட்டம்
3. உலகுக்கெல்லாம் ஒரே பரந்த பெரிய துப்பட்டி. அது என்ன?
வானம்
4. உணவுக்கு ருசியெல்லாம் ஒரே ஒரு கல்லுக்குள்ளே அது என்ன?
உப்பு
5. உலகெல்லாம் சுற்றிச் சுற்றித் திரிவான் அவனையாரும் இதுவரைக் கண்டதில்லை. அவன் யார்?
காற்று
6. உழைக்க உழைக்க உடம்பெல்லாம் முத்து முத்தாய்த் தோன்றும் அது என்ன?
வியர்வை
7. உருவத்தில் அவன் சின்னஞ் சிறியவன். உழைப்பதிலோ மிகவும் பெரியவன். அவன் யார்?
எறும்பு
8. உத்தியோகம் அவனுக்கு இல்லை, எனவே ஊரைச் சுற்றித்திரிகிறான். அவன் யார்?
நாய்
9. உலகெங்கும் படுக்கையை விரித்தும், உறங்க முடியாமல் திண்டாடுகிறான். அவன் யார்?
கடல்

## நீங்களும் எழுதலாம்



(தரம் 3 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர் :........................
தரம் :........................
பாடசாலை :........................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

........................ ........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை

| நா.மதுஷன் தரம் – 8 'D' யா/மத்திய கல்லூரி | அ.அஜந்தநாத் தரம் – 6 'B' யாழ். இந்துக் கல்லூரி | அ.தசாபதன் தரம் – 8 'A' யா/கனகரத்தினம் மத்திய ம.வி. | செ.சிறிலக்ஸன் தரம் 7 'E' யாழ்.மத்திய கல்லூரி |
|---|---|---|---|









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்காத கண்கள்......

(07 ஆம் பக்கத்தொடர்ச்சி..)

காசீமுக்கு வந்த கோபத்திற்கு அளவே யில்லை! அடக்கமுயன்றான்;முடியவில்லை.

''இந்தா காக்கா எனக்கு மட்டும் இரத்தம் துடிக்குதில்லை. இலங்கையில் ....... இந்தியாவில் ஏன்? இந்த உலகத்திலுள்ள அத்தனை தமிழருடைய இரத்தமும்தான் துடிக்கிறது. மொழிக்காகத் தன்னுடைய உயிரையே தியாகம் செய்ய எந்த மானமுள்ள தமிழனும் மறுக்கமாட்டான்! அவர்கள் எங்களுடைய உரிமைகளை எங்களிடமே விடத்தான் போகிறார்கள். இன்னும் இரண்டொரு நாளையில் அதுவும் தெரியத்தான் போகிறது!''

''தம்பி! நான் சொல்லுறன் என்று வித்தியாசமா நினைச்சுப் போடாதே!....... நாமேன் இந்த மாதிரியான சோலிகளிலை எல்லாம் தலைபோடுவான்? அவங்க தங்கட உரிமை என்று பாடுபட்டால் பாடுபட்டுட்டுப் போகட்டுமே...... யாருக்கென்ன? நீ சும்மா கிடவன்......''

அப்துல்காதர் தம்முடைய 'தொப்பி'யால் காசிமையும் மூடப்பார்த்தார். அவருடைய நீண்டநாள் நினைவு..... கனவு..... எண்ணங்கள் அத்தனையுமே உடைந்து கரையும் வண்ணம் செய்தது, காசிம் சொன்னவைகள்.

''கா.....க்.....கா.....! எது உங்கடைய தாய்மொழி? நீங்க என்னுடன் இப்ப எந்த மொழியிலே பேசுறியள்? தன்மானம் என்ற ஒன்றிருந்தா இப்படிப் பேசுவீர்களா? அன்றைக்கு முஸ்லீம்களெல்லாம் சேர்ந்து செய்த சத்தியாக்கிரகத்தில் நீங்கள் பங்குபற்றவில்லை. இதுதானா உங்களுடைய நேர்மை? நியாயம்? இது உங்களுக்குக் கண்ணியமாக இருக்கிறது. எங்களுக்குச் சரிவராது..... நாங்கள் தமிழர்கள்!........ எங்களுக்கு தன்மானம் என்ற ஒன்றுண்டு. அதுதான் பெரிது.........''

ஆவேசத்தில் வார்த்தைகள் வெளிவந்தன. அவனுடைய கைகள் நடுங்கின. கால்கள் நிலையிழந்து, அவனுடைய உடலையே மண்ணில் வீழ்த்துவனபோல முடங்கின, உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன. எதையோ எல்லாம் பேசினான் காசீம்.

அப்துல்காதருக்கு மூக்கே சிவந்துவிட்டது. ''என்னடா பயலே! ஒரு மாதிரி முறைக்கிறே!....... உன்னுடைய இரத்தம் அப்படிச் சொல்லுது....... இண்டைக்கு ஏதோ மந்திரிசபை கூடுதாம். ஆமிகள் வந்து உன்னை ஒரு கை பார்த்தப்புறம் எல்லாம் தெரிஞ்சுக்கத்தான் போறே!''

முனிவர் ஒருவர் சாபம் போட்டால் எப்படி இருக்குமோ? அப்படியிருந்தது அவருடைய நிலை..... அதே கோலம........ அதே பேச்சு....... அதேசாட்சி!

காசிம் எதையோ சொல்ல நினைத்து அதரங்களை அசைக்கப் போனான். ஏதோ ஒருவித ஓலம் வந்து தடுத்துவிட்டது!

''காக்கா!....... கா......க்......கா......! ஆமியள் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்தவங்களை எல்லாம் ...... கொல்லறாங்கள்....... எல்லாரும் திசை தெரியாமல் ஓடுறாங்கள்......''

சைக்கிளிலே ஓடிவந்த ஒருவனின் குரல் மட்டும் கேட்டது. பறை அறை பவனைப் போல மணியை அடித்துச் செய்தியையும் பரப்பியபடி ஓடிவந்தான் அவன்.

இந்த இருவரையும் கண்டு அவன் எதுவும் கூறவில்லை. முன்பு சொன்ன வார்த்தைகளையே திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டு ஓடினான்.

காசிம் ''காதர் காக்கா''விடம் எதுவும் சொல்லிக்கொள்ளாமல், கால்கள் போன போக்கில் விறு விறுவென நடந்தான்.

மனோகரா படமாளிகை வீதியில் அவன் இறங்கி நடந்ததும், அப்துல்காதர் அறைக் கதவைச் சாத்திக்கொண்டார். ஒரு நிமிடம் சென்றிருக்க முடியாது.

''டுமீல்! டுமீல்!!''

என்ற வெடிச்சத்தம் வானில் முட்டி அதிர்ந்தது. அப்துல்காதரின் காதுகள் வெடித்துவிடாத குறை.......

அதனைத் தொடர்ந்து, 'ஐ....ய்.....யோ!...... அ......ம்.....மா.....'' என்று காசிம் அழகு தமிழிலே அழைத்த அந்த இறுதி வார்த்தைகளும் அவருடைய காதுகளை குத்தி அழித்தன.

ஏதோ கொலை செய்துவிட்டவர் போல அப்துல்காதர் நடுங்கினார்.

அறைக்கதவை திறப்பதற்காக திறவு கோலைப் பற்றிய அவர்கை தானாகவே மறுத்து நின்றது. சந்தியில்........ இராணுவத்தினரின் வண்டி பறந்து கொண்டு சென்றது.

காசிம் கதறிக் கதறிச் செத்துக் கொண்டு இருந்தான். தெய்வ நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட அறப் போருக்குத் துணைநின்ற அந்தத் தமிழ் உடலைத் துப்பாக்கிக் குண்டுகள் துளை போட்டிருந்தன.

'அங்கிருந்த பெண் பிரசுகள் என்ன ஆனார்களோ?........ வயோதிபர்கள்,........ குழந்தைகள்.......... ஐ.........ய்.........யோ!'

ஒரு குமட்டல். காசிமின் கண்கள் இமைக்குள் மறைய துடிதுடித்தன.

''ஆமிகள் வந்து உன்னை ஒரு கை பாத்தப்புறம் எல்லாந் தெரிஞ்சுக்கத்தான் போறா!.......'' என்ற அப்துல்காதரின் வன் சொற்கள் அவனுடைய காதுகளில் விசம் பாய்ச்சின.

கண்கள் ஒடுங்கிவிட்டன!

சமையற் கட்டுக்குள் நுழையும் பூனையைப்போல் சுடுகாடாக உறங்கிக் கொண்டிருந்த அந்த ஐந்து சந்தியைத் தாண்டி வந்தார் அப்துல்காதர். கண்கள் புரண்டன!

காசிம் பிணமாகக் கிடந்த காட்சியை அவரால் கண்டு சகிக்க முடியவில்லை.

அந்தத் துப்பாக்கிக் குண்டுகளில் ஒன்று பட்டோ என்னவோ பக்கத்து வேலி பூவரசு மரத்தில் இருந்து காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. சாதாரண கரைவா அது? கதறல்!......... பிரிவைக் கண்டு துடிக்கும் உள்ளத்தின் குமுறல்.......

அப்துல்காதர் திரும்பிப் பார்த்தார்! வேலியின் ஓரத்திலே வேறொரு காகம் செத்துக்கிடந்தது.

ஏடு எடுத்தும் படியாமல் கேளவியால் அறியாமல்.............. ஏதோ நீதிகளை எல்லாம் புகட்டும் அந்த இரு காக்கைகளையும் மாறிமாறிப்பார்த்தார் அப்துல்காதர். பின் - காசிமின் உயிரற்ற உடலையும் பார்த்தார்..........!

அவரையும் அறியாமல் என்றுமே கலங்காத அவருடைய குழிவிழுந்த கண்களிலிருந்து, இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் மல்கி, காசிமின் உடல்மீது விழுந்து தெறித்தன!

அந்தக் கண்ணீர்த் துளிகள் உரிமைக்காகப் போராடிய அவன் உள்ளக் குமுறலை, கொந்தளிப்பை, இனிமேல்தான் தமிழைக்காக்க தியாகிகள் தோன்றப் போகிறார்கள் என்று கூறித் தணிந்தனவா?

அறத்தினால் வீழ்ந்தவர்களின் எண்ணத்திற்குச் சாவுமணி அடித்தனவா?

அப்துல்காதருடைய கண்களிலிருந்து மென்மேலும் நீர் சுரந்து கொண்டிருந்தமை எதையோ ஒன்றை உண்மையெனக் கூறியது.

*நன்றி:(சுதந்திரன் சிறுகதைகள்)*

# கல்லால் அடித்த வலியை...

(07 ஆம் பக்கத்தொடர்ச்சி..)

பிரிவு என்பது எந்தக் காலத்திலும் ஆணின் ஆயுதம் தானா என்று எண்ணிக் கொள்கிறேன். பெண்ணின் அளப்பரிய சக்தியை முழுக்க அது உறிஞ்சி விடுகிறது போலும். அதை அஞ்சி அவள் மீண்டும் மீண்டும் சரண டைகிறாள். மேலும் மேலும் பலவீனம் கொள்கிறாள். இதற்கு மறுபக்கமும் தெரிகிறது. தன் துணைவியின் மனத்தில் பேருருவம் கொள்ளும் பொருட்டு ஆண் போடும் வேடம்தானா அது? அந்த விளையாட்டின் வலியில் அவன் தன் இன்பத்தைக் கண்டு கொள்கிறானா? அம்மா சொல்வாள், நாயர் ஆரம்பத்திலேயே மித மிஞ்சிய தீவிரத்துடன் சொற்களை விட்டு விட்டதுதான் பிரச்சினை என்று. அதைத் தாண்டிவர அவரால் முடியவில்லை.

பிரிவெனும் இருகூர் வாள்முனையால் விளையாடும் கணவர்களை சங்க இலக்கியம் மீண்டும் மீண்டும் காட்டுகிறது. நால்வகை நிலமும் படிப்படியாகத் திரிந்து பாலையாகும் என்கிறது இலக்கணம். குளிர் மழைக் குறிஞ்சியே ஆனாலும் அதன் வெகு அருகே பாலை தன் வெம்மூச்சுடன் காத்து நிற்கிறது.

வெள்ளை ஆடையை விரித்தது போல
வெயில் பரவிய மலைச் சரிவில்
கோடையில் தளர்ந்த
வரையாட்டை
தின்று பசியாற்றிய ஓநாய்கள்
கிழித்துப் போட்டுப் போன
உலர்ந்த சதைத் துணுக்குகள்
தொலைதூர இலக்கிடம் தேடி
பசித்துத் தள்ளாடி நடக்கும்
பயணிகளுக்கு உணவாகும்
வெந்து பழுத்த சாலையின்
வழியாக
இவளைப் பிரிந்து பயணமாவது
ஒருவேளை உனக்கு
குளிர் தென்றல் போல
மகிழ்வூட்டலாம்
இவளுக்கோ
காக்கும் கடவுளால் கைவிடப்பட்டு
ஈரக்கண்களுள்ள
யானைப் படையுடன்
பகை மன்னன் முற்றுகையிட
துணைக்கு யாருமில்லாமல் ஆன
விரிசலிடும் ஒற்றைக் கேட்டை
உடைய
சிற்றரசனைப் போல
மரணம் நெருங்கி வருகிறது.

சங்கக் கவிதைகளைப் பொதுவாக நமக்கு அழகின் மாறுபட்ட தோற்றங்களாகவே அறிமுகம் செய்திருப்பார்கள். குறிப்பாக அகப் பாடல்கள் காதலின், காமத்தின் நுட்பமான நாடகக் காட்சிகளாகவே நமக்குச் சொல்லப் பட்டுள்ளன. துயரத்திலும் இயற்கை வர்ணிக்கப்பட்ட பாடல்கள் பல உண்டு. ஆனால், இக் கவிதையோ மிகக் குரூரமான படிமங்களால் நிரப்பப் பட்டுள்ளது. வேட்டையாடப்படும் மான் போல நிர்க்கதியாக மரணத்திடம் அகப் படுதல், கடவுளும், சுற்றமும் கைவிட்டு விட விரிசலிடும் அரண்மனைகளுடன் மண்ண திரும்கரிய பெரும்பாத ஒலிகளைச் செவி கூர்ந்து காத்திருத்தல். என் நினைவில் உள்ள வடிவம்மையின் தோற்றம் விரிசலிட்டுச் சரிவதற்குக்காத்திருக்கும் அந்தக் கோட்டை போலத் தோன்றுவதுண்டு சிலசமயம்.

''கேசவன் நாயருக்கு உண்மை தெரிந்திருக்காதா, நீ என்ன நினைக்கிறாய்?'' என்று அருண்மொழியிடம் கேட்டேன். இக்கவிதையைப் படித்தபோது, ''சில நாள் கழிந்ததுமே கட்டாயம் புரிந்திருக்கும்!'' என்றாள். ''அதற்குள் அந்த பிறரைத் துன்புறுத்தி அதன் மூலம் தன்னையும் துன்புறுத்துவதில் உள்ள உதிர ருசி அவருக்குத் தெரிந்திருந்திருக்கும். அதை அவரால் தவிர்க்கவே முடிந்திருக்காது. ஆண்களின் பிரச்சினையே அதுதான். குரூரத்துக்கும் தன்னிரக்கத்துக்கும் நடுவே ஒரு இடத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். கவிதையிலேயே இருக்கிறதே, மானைப் பிடித்துத் தின்னும் ஓநாய்........''

''எத்தனை குரூரமான படிமம் இல்லையா?'' என்றேன்.

''அதைவிட குரூரமான படிமம் அந்த வெள்ளைச் சேலைதான்'' என்றாள். ✻✻✻

## சொற்சிலம்பம் - போட்டி இல: 34

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | ■ | 8 | | ■ |
| | ■ | 9 | | | ■ | 10 | 11 |
| ■ | 12 | | | ■ | 13 | | |
| 14 | | | ■ | 15 | | ■ | |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | ■ |
| 19 | 20 | | | ■ | 21 | | 22 |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:..........

விலாசம்:..........

..........

கையொப்பம்:..........

**இடமிருந்து வலம்**

1. ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று.
7. உருவம்.
8. ஒரு தானியம்.
9. ஒரேயளவு அல்லது ஒன்றுக் கொன்று பொருந்தும் என்பதைக் குறிப்பது.
10. இர./பிச்சை எடு.
12. பொருந்தும்/ஏற்புடையது.
13. யாகம்.
14. மாறான தன்மை.
15. விடிவது இப்போது.
16. குண்டு வெடிப்பது இப்படி.
19. புலவன்.
21. அருந்தி/குடித்து .
23. திடீரென.
24. புத்தியற்றவன்.

**மேலிருந்து கீழ்**

1. கள் இறக்கும் தொழிலை இப்படி அழைப்பர்.
2. சட்டரீதியான மதுவை விட இதற்குத்தான் கிராக்கி.
3. கர்ணன் பிறந்தது இவற்றுடன்.
4. சிங்கம்.
5. செவிலி/நோயாளிக்கு உதவி செய்யும் பெண்.
6. இல்லாள்.
11. தண்டிகை
12. பெருக்கல்குறி
13. தொழில்.
14. பின் அரைவாசி அல்ல.
15. கருமை/இருள்.
17. அழகுள்ள ஒரு மிருகம்.
18. நீர்வீழ்ச்சி.
20. தழும்பு.
21. வலைஞன் தொழிலின் போது வைத்திருக்கும் பை.
22. அச்சம்/பயம்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 34**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)**
**லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (12.11.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.34இல் வெற்றிபெற்றோர் விவரம் 16.11.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 32 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) அருந்ததி (5) பதி (7) பசி (8) இறத்தல் (9) சிவன் (10) கலை (11) மிகுதல் (13) வாளி (14) தரும் (15) நடிப்பு (17) பகல் (19) புதை (20) கரம்குவி (22) உடம்பு (23) திடல்

**மேலிருந்து கீழ்**
(1) அபரிமிதம் (2) ருசி (3) தகவல் (4) திறன் (5) பதகளிப்பு (6) தில்லை (9) சிதம்பரம் (12) குரு (13) வாடி (15) நல்கு (16) புதையல் (18) கம்பு (20) கட (21) விதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 32 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**இராஜகுமாரி துரைசிங்கம்,**
*றோஸ் வனம்'*
*புக்கைப்புலோ,*
*மாதகல்.*

**2 ஆம் பரிசு**
**பொ. நமசிவாயம்,**
*'பண்டிதமணி இல்லம்'*
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு**
**செல்வி பா.பரிதா,**
*'பரிஅகம்' சாமியன் அரசடி,*
*கரவெட்டி.*

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

## பாராட்டுப் பெறுவோர்

(1) செல்வ[illegible]
இல:27, [illegible] வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(2) தெய்வேந்திரசிங் துஷிமளா,
முத்தட்டுமடலேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(3) [illegible]பாலன்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.

(4) நாகரெத்தினம் கஜரூபன்,
வேலணை மேற்கு,
வேலணை 08.

(5) ரஜிதா தியாகராஜா,
இரங்கூன் இல்லம், தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூச்சடக்கி அழும் குழந்தையும் மூச்சு நின்றுவிடும் அச்சமும்

## இலவச மருத்துவ ஆலோசனை

**கேள்வி:** எனது மகள் 3½ மாதம். ஒரு கிழமைக்கு முன்னர் குளிப்பாட்டும் போது நிறைய அழுதாள். திடீரென்று மூச்சு நின்றுவிட்டது. குழந்தையின் உடம்பு சிவந்துவிட்டது. குளிப்பாட்டிக் கொண்டிருந்த எனது தாயார் - குழந்தையின் முதுகில் தட்டிய பின்புதான் மூச்சுவந்தது. அதன்பின்னர் எதுவித பிரச்சினையுமில்லை. இப்பொழுதும் அவர் அழுதால் மூச்சு நின்றுவிடுமோ என்ற பயமாக இருக்கின்றது. இப்படி எனது மகளுக்கு ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

**பதில்:** உங்கள் குழந்தைக்கு ஏற்பட்டது Breath Holding Attack என்று மருத்துவத்தில் கூறப்படும் ஒரு நிகழ்வு. அநேகமாக இப்படியான மூச்சடைப்பு குழந்தைகளுக்கு 6 மாதத்துக்கு பின்னர் தான் ஏற்படுவதுண்டு. சிலவேளைகளில் அதற்கு முன்னரும் ஏற்படலாம். இதைத் தவிர உங்கள் குழந்தையை பொறுத்தவரையில் குளிப்பாட்டிக்கொண்டிருக்கும் போது இது நிகழ்ந்ததால் சில வேளை மூச்சுக்குழாயினுள் நீர் புகுந்து ஏற்பட்ட மூச்சுத்திணறலில் மூச்சடைப்பு ஏற்பட்டிருக்கவும் சந்தர்ப்பம் உண்டு. இந்த இரண்டு நிகழ்வுகளும் சாதாரணமாக நடக்கக்கூடியவையே. இதனால் குழந்தையின் எதிர்காலத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாது.

***

**கேள்வி:** எனது மனைவி வயது 26. திருமணமாகி 6 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்து, செயற்கைமுறை கருத்தரித்தல் மூலம் தற்போது கர்ப்பமாக இருக்கின்றார். பரிசோதித்துப் பார்த்த போது கர்ப்பத்தில் இரண்டு குழந்தைகள் உள்ளன (Twins). இப்பொழுது 3 மாதம் முடிந்துவிட்டது. அவருக்கு அடிவயிற்றில் இடைக்கிடையே சிறிய வலி ஏற்படுவதைத் தவிர வேறு பிரச்சினைகள் இல்லை. அவர் தனது கர்ப்பகாலத்தில் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி விளக்கம் தருக?

**பதில்:** குழந்தை கிடைக்குமா என்று ஏங்கி இருந்த உங்களுக்கு லாட்டரி பரிசு போல் இரட்டைக் குழந்தைகள். எனது வாழ்த்துக்கள். இது உங்கள் இருவரையும் பொறுத்தவரையில் பொக்கிஷமான குழந்தை (Precious baby) என்றுதான் மருத்துவத்தில் கருதப்படுகின்றது. எனவே, பிரசவ நாள்வரை மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

நிறைய ஓய்வு முதலில் தேவை. பாரங்களை தூக்கக்கூடாது. பாரம் என்று சொல்லும்போது துவைத்த துணிகளை தூக்கிச் செல்வது கூட பாரம் என்றுதான் உங்கள் மனைவியைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொள்ளவேண்டும். உடல் உறவு தவிர்க்கப்படவேண்டும். முக்கியமாக ஆறுமாதத்தின் பின்னர் உடலுறவு கொள்வது காலத்திற்கு முன்னரே பிரசவ வலியைக் கொண்டு வந்துவிடும். அவரது இரத்தச் சத்து என்கின்ற ஹீமோகுளோபின் அளவு குறையாத வண்ணம் சத்தான உணவுகள் கொடுக்கப்படவேண்டும். தேவைப்படின் இரும்புச்சத்து மாத்திரைகள் கூட உபயோகிக்கலாம். அடிவயிற்றில் வலி ஏற்படுவது பற்றி கவனம் எடுக்கவேண்டும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறுநீர்த் தொற்று இலகுவில் ஏற்படும். எனவே, சிறுநீர்ப்பரிசோதனை அவசியமாகிறது. அப்படி தொற்று இருப்பின் உங்கள் வைத்தியரிடம் அதற்குரிய சிகிச்சை பெறவேண்டும். நீண்டதூர பயணங்கள் தவிர்க்கப்படவேண்டும். மனஇறுக்கம் (Stress) இல்லாமல் மகிழ்வாக இருக்கவேண்டும். மகப்பேறு நிபுணரின் ஆலோசனையை ஒவ்வொரு மாதமும் பெறவேண்டும்.

எட்டுமாதத்தின் பின்னர் மாதத்துக்கு இருதடவைகளும் இறுதிமாதத்தில் வாரம் ஒருதடவையும் வைத்திய ஆலோசனை பெறுவது விரும்பத்தக்கது. இவ்வேளையில் 5ஆவது மாதத்திலும் 9ஆவது மாதத்திலும் ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பரிசோதனை குழந்தையின் வளர்ச்சியை கண்காணிக்க உதவும்.

***

**கேள்வி:** எனது மகள் வயது 17. வாசனைப் பொருட்கள் முகரும் 'போதை' பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கிறாள். ஆரம்பத்தில் துணிகளுக்குப் போடும் 'நெப்தலின்' கற்பூர உருண்டைகளை எந்தநேரமும் எடுத்து முகர்ந்து கொண்டிருப்பாள். பின்னர் பெற்றோல், நகப்பொலிஷ் அகற்றும் தின்னர் (Thinner), சப்பாத்து பொலிஷ் என்பவற்றை யும் முகர்ந்து கொண்டே இருக்கும் பழக் கம் உள்ளது தெரிய வந்தது. எத்தனையோ முறை அன்பாகவும் - கண்டிப்பாகவும் இந்த பழக்கத்தை கைவிடும்படி அவரிடம் கூறியும் - இப்படியான பொருள்களை புதிது புதிதாக நுகருவதில் ஆர்வம் காட்டி வருகிறாள். இதனை நிறுத்த வழிசொல்லவும்.

**பதில்:** இதனை (Habitual Sniffing) என்று மருத்துவ உலகில் கூறுவார்கள். நச்சுப்பொருளையோ அல்லது போதை தரும் பொருளையோ முகர்ந்துகொண்டு இருக்கும் பழக்கம் Behavioural Problem என்ற மனோவியல் நோய். இதற்குக் காரணம் என்ன என்று இதுவரை அறியப்படவில்லை. ஒரு சிலர் இது பிறப்போடு உடலில் பற்றிக்கொண்ட பழக்கம் - Inborn Perversion என்ற கூறுகின்றார்கள். மனோவியலில் Behaviour சிகிச்சை புரியும் நிபுணரின் ஆலோசனை இங்கு அவசியம். சிலர் விற்றமின் குறைபாடுகள், இரும்பு மற்றும் துத்தநாகம் (Zinc) கனிப்பொருள் குறைபாடுகள் இதற்கு காரணம் என்றும் நம்புகின்றார்கள்.

***

**கேள்வி:** பெண். வயது 23. எனது தொடைகள் மிகவும் பருத்து இருக்கின்றன. எனது தேகக்கட்டுக்கு இந்த பருத்த தொடைகள் அவலட்சணமாக இருக்கின்றன. எனது சிநேகிதிகள் கயிறு அடித்துத் துள்ளுவது (Skipping) தொடைகளின் பருமனை குறைக்கும் என்கிறார்கள். ஆனால், ஒரு வேறு சிலரோ இப்படியான பயிற்சி தொடைகளை விருத்தியாக்கி மேலும் பருக்கச் செய்யும், என்று கூறி தேகப்பயிற்சிக்குப் (Aerobics) போகச் சொல்கின்றார்கள். உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** Aerobics, Skipping போன்ற பயிற்சிகள் இடுப்புக்குக்கீழ் உள்ள பகுதிகளின் தசைகளை விருத்திசெய்வதற்குத்தான் உதவும். எனவே, உங்களைப் பொறுத்தவரையில் இந்தப் பயிற்சிகள் இரண்டும் உங்கள் நோக்கம் நிறைவேற உதவமாட்டா. மேலும் Skipping ஒரு முழுமையான தேகப்பயிற்சியல்ல. பாடசாலை தரத்தில் ஒரு தேகப்பயிற்சியாக - இதயம் மற்றும் இரத்தோட்டத்துக்கு உதவும் ஆரம்ப பயிற்சியாக - மாணவர் மட்டத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. நீச்சல், படகோட்டல் என்பவை உடம்பின் மேல்பகுதிக்கும் உடம்பின் பகுதிக்கும் உதவும் தேகப்பயிற்சிகள்.

பருமனைக் குறைக்க விரும்புபவர்கள் தேகப்பயிற்சி மூலம் கலோரிகளை குறைக்கும்போது உணவுக் கட்டுப்பாடு மூலமும் உள்ளே எடுக்கப்படும் கலோரிகளை குறைத்தால்தான் பலன் தெரியும்.

உடலில் ஒரு குறிப்பிட்ட பகுதியின் பருமனைக் குறைப்பதற்கென்று உடற் பயிற்சி கூடங்களில் (Gymnasium) வெவ்வேறு பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இப்படியான தரமான உடற்பயிற்சிக் கூடத்தில் பயிற்சியாளரின் கண்காணிப்பில் இந்தப் பயிற்சிகளை பெறுவதுதான் சிறந்தது.

உடற்பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படும் ஒரு கடமையாக இல்லாமல் நாளாந்த வாழ்க்கையில் உடற்பயிற்சியும் இணைந்து செயற்படக்கூடிய விதத்தில் காரியமாற்றினால் தான் உடல்பருமனை வெற்றிகரமாக குறைக்கமுடியும் என்று உடற்பயிற்சி மருத்துவத்துறை சிபார்சு செய்கின்றது. உதாரணமாக காரியாலயத்துக்கு நடந்து செல்லல், லிப்ட் வசதி இருந்தாலும் - அதனை உபயோகிக்காமல் மாடிப் படிகளை உபயோகித்தல் போன்ற விஷயங்களில் உங்களை அறியாமலே கலோரிகள் எரிக்கப்படுகின்றன. சில யோகாசன பயிற்சிகளும் உடலின் சில பகுதிகளுக்கு உதவுகின்றன. ஆனால், யோகாசனப் பயிற்சிகளால் கலோரிகள் எரிக்கப்பட்டு உடல் பருமன் குறையும் என்பதை எதிர்பார்க்கக்கூடாது.

***

**கேள்வி:** வயது 36. இரண்டு ஆண்குழந்தைகள் உண்டு. அவர்களின் வயதுகள் முறையே 12, 10 ஆகும். இரண்டாவது குழந்தை பிறந்தபோது எனது கருப்பை கீழே இறங்கியிருப்பதாக கூறினார்கள். இதனால், சத்திர சிகிச்சை செய்துகொள்ள அறிவுறுத்தினார்கள். எனக்கு மாதவிலக்கு சம்பந்தப்பட்ட - கருப்பை சம்பந்தப்பட்ட - பிரச்சினைகள் எதுவும் இல்லை. எனவே, சத்திரசிகிச்சை செய்து கொள்ளவில்லை. சமீபத்தில் இன்னொரு குழந்தை பெற எண்ணியுள்ளேன். கருப்பை கீழே இறங்கியிருப்பதனால் ஏதாவது பிரச்சினை எனக்கோ குழந்தைக்கோ ஏற்படுமா? கருப்பை இறங்குதலுக்கு வளையம் உபயோகித்தால் சரியாகிவிடுமா? இத்துடன் எனது டாக்டர் தந்த பரிசோதனைக் குறிப்புகளையும் அனுப்பிவைத்துள்ளேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** உங்கள் டாக்டரின் குறிப்புகளில் கூறியுள்ளதை நாம் அறிவுறுத்த விரும்புகின்றேன். உங்கள் வயது 36. 35 வயதிற்குப் பின்னர் பிறக்கும் குழந்தைகளுக்கு 'நிறமூர்த்தக் குறைபாடுகள்' (Chromosome Defects) ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். இதில் முக்கியமாக Downs Syndrome எனப்படும் குறைபாடுகளுடன் மங்கோலிய (Mongolian) சாயல் குழந்தைகள் பிறக்கலாம். இவர்கள் மூளைவளர்ச்சி குன்றியவர்களாக பிறப்பது மாத்திரமல்ல மேலும் இருதயம் மற்றும் கண் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுடன் பிறப்பார்கள். இந்த பிரச்சினையைத்தான் முதலில் நீங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். ஒரு வலது குறைந்த அதுவும் 'மொங்கல்' வகை குழந்தையை வளர்ப்பது - கவனம் எடுப்பது என்பதெல்லாம் ஒரு கொடுமை என்றே சொல்லவேண்டும். எனவே, நானும் உங்கள் டாக்டர் கூறுவதைப்போல் குழந்தை பெறும் எண்ணத்தை தவிர்க்கவே வேண்டுகின்றேன்.

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அடுத்தது, உங்களுக்கு ஏற்பட்டுள்ள கருப்பை இறக்கம் உங்களுக்கு உங்கள் டாக்டரின் பரிசோதனைக் குறிப்பின்படி முதலாவது வகை (First Degree) கருப்பை இறக்கம் ஆகும். வயது ஏற, இடுப்பு தசைகள் பெலவீனமாக முழு கருப்பையும் கீழே இறங்கும்படி ஆகிவிடலாம். உங்கள் கருப்பை இறக்கத்துக்கு வளையங்கள் உதவலாம். பெண்நோய் நிபுணர் (Gynaecologist) ஒருவரின் ஆலோசனை தேவை. ஆனால், வளையங்களை (Rings) உபயோகிப்பது அநேகமாக சத்திரசிகிச்சைக்கு சம்மதித்து - சத்திர சிகிச்சைக்கு உடலை தேற வைக்கும் வரைதான். எனவே, இது ஒரு தற்காலிக தீர்வே. இந்த சத்திரசிகிச்சைக்கு நீங்கள் அதிகம் பயம்கொள்ளவேண்டியதில்லை. சத்திரசிகிச்சை செய்யா விடின் சிறுநீர் மற்றும் மலக்குடல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எதிர்காலத்தில் ஏற்படலாம்.

***

**கேள்வி:** வயது 64. ஆண். கடந்த ஒருமாதமாக உணவு உட்கொண்ட பின்னர் நுனி நாக்குப் பகுதியிலும் உதட்டிலும் எரிவும் கூச்சமும் எற்படுகிறது. இந்த உணர்வு தொடர்ந்து 20-30 நிமிட நேரமளவு நிற்கின்றது. உங்கள் ஆலோசனை வேண்டுகின்றேன்.

**பதில்:** உங்கள் நுனிநாக்கு உதடு என்பவற்றின் மேற்பகுதியில் ஏற்பட்டுள்ள சில மாற்றமே இந்த உணர்வுக்குக் காரணமாகின்றது. அநேகமாக B-Complex விட்டமின் குறைபாட்டால் இது ஏற்படலாம். உங்கள் உணவில் நிறைய பச்சைக் காய்கறி, கீரை வகைகளை சேர்த்துக் கொள்ளுங்கள். பழங்கள் நிறைய சாப்பிடுங்கள். விற்றமின் B மற்றும் விற்றமின் C மாத்திரைகளையும் உபயோகிக்கலாம். ஓரிருவாரத்தில் குணம்காணுவீர்கள். அப்படி எதுவித குணம் தெரியாவிடில் மருத்துவ ஆலோசனை அவசியம்.

***

**கேள்வி:** பெண். வயது 29. சிலவேளைகளில் நான் பார்க்கும்போது பொருள்கள் எல்லாம் இரண்டாகத் தெரிகின்றன. இதனால், எரிச்சலாகவும் குழப்பமாகவும் இருக்கின்றது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு நோயல்ல. உங்களது கண்களின் அசைவுக்கு உதவுகின்ற தசைகள், பெலவீனமடைந்திருக்கும் போது கண்களால் சரியாக ஒரு பொருளை Focus பண்ணமுடியாது. அப்பொழுது தான் பார்க்கும் பொருள் இரட்டையாகத் தெரியும். உங்கள் உடல் களைப்படைந்திருக்கும்போது அல்லது பெலவீனமாக இருக்கும்போதுதான் இப்படி நேரும். B-Complex விட்டமின் மாத்திரைகளும் கண்தசைகளுக்கு சில பயிற்சிகளும் உங்கள் பிரச்சினையைத் தீர்க்கும். நீண்ட நேரம் வாசிப்பதை, தையல் வேலை செய்வதைக் கொஞ்சநாள்களுக்கு தவிருங்கள். எதற்கும் ஒரு கண் வைத்தியரின் ஆலோசனையையும் பெறுங்கள்.

***

**கேள்வி:** எனது மனைவி வயது 60. கடந்த சிலமாதங்களாக அவரது குணத்தில் நிறைய மாற்றங்களைக் காண்கின்றேன். பயந்த சுபாவம் அதிகமாக உள்ளது. படபடப்பும் பதற்றமும் காணப்படுகின்றன. சின்ன விஷயங்களுக்கெல்லாம் எரிச்சல் ஏற்படுகின்றது. சிறிய விஷயங்களையும் பெரிதாக எடுத்து சஞ்சலப்படுகின்றார். சில விஷயங்களை திருப்பித் திருப்பி சொல்கின்றார். எல்லாவற்றுக்கும் வாதப் பிரதிவாதம் (Argument) செய்கின்றார். எல்லாம் தனக்கு எதிராகவும் தனக்கு நன்மை தராததாகவும் இருப்பதாகச் சிந்திக்கின்றார். எடுத்த பொருளை எடுத்த இடத்தில் வைக்காவிட்டால் சினங்கொள்கின்றார். என்மேல் சந்தேகப்படுகின்றார். நான் இன்னொரு பெண்ணோடு - சொந்தக்காரியாக இருந்தாலும் - பேசினால் ஆத்திரம் கொள்கின்றார். அவரது குடும்பத்தில் இரண்டு சகோதரிகளுக்கு மனச்சிதைவு (Shizophrenia) மனநோய் உள்ளது. இவருக்கும் ஆரம்பத்தில் தைராய்ட் சுரப்பு குறைவு இருந்தது. இதற்கு ஏழு வருடங்கள் சிகிச்சையளிக்கப்பட்டது. எனது மனைவிக்கு இந்தப் பிரச்சினைகள் ஏன் ஏற்பட்டன? இதற்கு பரிகாரம் உண்டா?

**பதில்:** நீங்கள் கூறிய விஷயங்களை வைத்துப் பார்க்கும்போது இந்தப் பிரச்சினைக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஒரு சிலருக்கு வயது முதிர்ச்சியுற முதிர்ச்சியுற அவர்கள் தங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். பிடிவாத குணம் அதிகரிக்கும். தங்கள் விருப்பப்படிதான் - தாங்கள் நினைத்தபடிதான் மற்றவர்கள் நடக்கவேண்டும்; காரியங்கள் நடைபெறவேண்டும் என்று நினைப்பார்கள். எதற்கும் வளைந்து கொடுக்கும் சுபாவம் இருக்காது. தமது உணர்ச்சிகளை இலகுவில் கட்டுப்படுத்தமுடியாதவர்களாக இருப்பார்கள். மனஇறுக்கம் ஏற்பட்டு அதனால், மனநிலை உடல்நிலை பாதிக்கப்படுவார்கள். இந்த வயதில் அவர்களது பிள்ளைகளும் தங்களுக்கு வாழ்க்கையை அமைத்து தனியே போய் விடுவதால் எதிர்காலத்தில் நம்பிக்கையற்ற தன்மை அவர்களை வாட்டும். எல்லோரும் தன்னை தனியே விட்டுப் போகின்றார்கள் என்ற பிரமை ஏற்படும். இந்த அடிப்படையில் வைத்துத்தான் உங்கள் மனைவியின் மாற்றங்களை நாம் எடைபோட்டு முடிவெடுக்கவேண்டும். Depression என்கின்ற மன உளைச்சல் மனநோய் கூட இந்த மாதிரியாகத்தான் குணங்களைக் காட்டும். முன்னர் உங்கள் மனைவிக்கு தைராய்ட் சுரப்பு குறைபாடு இருந்ததால் அந்தப் பரிசோதனையும் இங்கு தேவைப்படுகின்றது. தைராய்ட் சுரப்புக் குறைவும் மனோநிலையை பாதிக்கும். எனவே, அவரது குணநலன்கள், பழக்கங்கள் குடும்பத்தின் நாளாந்த நடவடிக்கைகளை - சமூக நிலையை - பாதிப்பதாக நீங்கள் உணர்ந்தால் ஒரு மனோவைத்திய நிபுணரின் ஆலாசனை பெறுவது உசிதம் என்று நம்புகின்றேன். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

நெல்லியடி அருள்மிகு
தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய

## கந்தசஷ்டி 6ஆம் நாள் உற்சவம்

நாளை (03.11.2008)
திங்கட்கிழமை பிற்பகல் 12.30
மணி தொடக்கம் மாலை 4.49 வரை
ஸ்கந்த தவில்
நாதஸ்வரகானாமிர்தம்

நாதஸ்வர வித்துவான்கள்:
P.S.பாலமுருகன்
R.சிவகுமார்
J.சிவதாஸ்

தவில் வித்துவான்கள்:
P.S.செந்தில்நாதன்
N. நந்தகுமார்
M.S.தெட்சணாமூர்த்தி

(அ/555153)

பரிபாலனசபையினர், உபயகாரர்.

## E.G மின்சார உற்பத்திப் பொருள்கள்

(LAMP HOLDER, CEILING ROSE, STRAIGHT BATTON, ANGLE BATTON & PLUG TOPS)

European General Company இடமிருந்து BAKE LITE மூலப்பொருள்கள்
கொண்டும், தரமான BRASS PIN கொண்டும் இலங்கையில்
உற்பத்தி செய்யப்படும் முதற்தரமான மின்சாரப் பொருள்கள்
"தீயில் இருந்து முற்றிலும் பாதுகாப்பானது"



Marketed BY
JAFFNA ELECTRICALS
No. 94 (6), Stanley Road,, JAFFNA
Tel: 021 2222353

MANUFACTURED BY
European General Company
Colombo.


## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.2

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும் இலவச மருத்துவ முகாம் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் கண் பரிசோதனை, பல் மருத்துவம், சலரோகப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, பொதுமருத்துவம், சரும வியாதிப் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் மருத்துவ உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

வறுமைக் கோட்டிற்குட்பட்ட பொதுமக்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (202-131)


### கமுகங்கன்றுகள் விற்பனைக்கு

ஒரு வருடம் பூர்த்தியடைந்த நல்லின கமுகங் கன்றுகள் பொதிசெய்யப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: K.R., 270, கனகரத்தினம் வீதி,
நாயன்மார்கட்டு.
(79580)

### விற்பனைக்கு

மாலுசந்தி, அல்வாய் வீதியில், சந்திக்கு 50m தூரத்தில் 10 அடி பாதை, இரண்டு பக்க மதில்களுடன் கூடிய நல்ல சூழலில் அமைந்த இரண்டு பரப்புக் காணி (பாதையுடன் இரண்டு பரப்பு) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: T.பாலச்சந்திரன்,
மாலுசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்.
(79568) T.P.: 077 6701589


### தவறிவிட்டது

கந்தப்போடி விஜயராஜா என்பவரது தே.அ.அ. (542593318V) நாவலர் வீதியில் தியாகி அறக்கொடை நிறுவனத்திற்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்தில் Postஇல் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:- 34, நாயன்மார் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(79568)


### ஆசிரியர்கள் தேவை

, யாழ்.குடாநாட்டில் இயங்கிவரும் பிரபல தனியார் பாடசாலைகளுக்கு உயர்தரம் கற்ற ஆங்கிலம், தமிழில் தேர்ச்சி பெற்ற பயிற்சி ஆசிரியர்கள் தேவை. தங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பவேண்டிய முகவரி:

P.சின்னத்தம்பி,
இல.68, செட்டிதெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(அ/555158)


## கந்தஷஷ்டி சிறப்புச் சொற்பொழிவு

இந்துசமய கலாசார அலவல்கள் திணைக்களம் கந்தஷஷ்டி சிறப்புச் சொற்பொழிவை கடந்த புதன்கிழமை தொடக்கம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வருகின்றது.

தினமும் பி.ப. 4 மணிக்கு இந்தச் சொற்பொழிவு நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் எம்.பி.ஸ்ரீந்திரன் 'கந்தனே கண் கண்ட தெய்வம்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (204)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29 ★ 10 ★ 1937



மறைவு
02 ★ 11 ★ 1995

திருமதி **பரஞ்சோதி கமலாதேவி**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)
திதி: 08.11.2008

வருடங்கள் பதின்மூன்று கழிந்தாலும்
மாறவில்லை எம் துயரம்
கூடி நீங்கள் வாழ்க்கையிலே
கொண்ட அன்பு குறையவில்லை.

சந்திரவாசா,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(79593)

## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் அழகரெட்ணம்



(Sierra களஞ்சிய உதவியாளர்)

வீரமாகாளி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட மா.அழகரெட்ணம் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசகுலசிங்கம் - அசலாம்பிகை தம்பதியரின் மருமகனும் ஜெயராணியின் பாசமிகு கணவரும் அரவிந்தன் (கொனிக்கா கலர் லாப்), பகீரதா (பட்டதாரி மாணவி, புதிய உயர் கல்வி நிலையம்), லக்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாக்கியத்தின் பெறாமகனும் காலஞ்சென்ற சுலோசனா, தர்மகுலசிங்கம், விஜயராணி, மாலினி, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரனும், பத்மராணி, விஜயராணி, ஸ்ரீகாந்தா, பாமினி, அப்புத்துரை ஆகியோரின் மைத்துனரும் உமாபதி, அருளானந்தம் (வேலை மேற்பார்வையாளர், யாழ். மாநகர சபை), ரவீந்திரன், வசந்தலீலா ஆகியோரின் சகலனும் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) - கமலாம்பிகை (ஓய்வுபெற்ற அதிபர்) தம்பதியரின் மருமகனும், மகாலிங்கம் - லலிதாதேவி தம்பதியரின் பெறாமகனும் DR.பிரதீர்குமார் (கொழும்பு), பொறியியலாளர் பாலேந்திரன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் DR.ரேணுகா (கொழும்பு), பிரியா (மாநகரசபை, இரத்மலானை), ஹம்சா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சைலஜா - பிரபாகரன் (வவுனியா), சுரேஸ்குமார் - சியாமளா (நோர்வே), நித்தியா - விக்னேஸ்வரன் (மட்டக்களப்பு), சுகன்யா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: அ.அரவிந்தன் (மகன்),
கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்).
(79594)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
29 ★ 08 ★ 1950

உதிர்வு
02 ★ 11 ★ 1993

திருமதி **தருமலிங்கம் சிவமணி** (பேபி)
திதி: 15.11.2008

ஆண்டுகள் பதினைந்து சென்றாலும்
மறந்திருமோ எம் நெஞ்சம்
வாழ்கின்றோம் உன் நினைவில்
மீண்டும் வந்திருவீரா அம்மா.

என்றும் உங்கள் நினைவுடன்:

கணவர் - இ.தருமலிங்கம்
பிள்ளைகள் - த.சுதாகரன் (U.K.), சுகந்தினி (சுவிஸ்), சுஜீபா (சுவிஸ்), சுபரேகா (சுவிஸ்), சரவணபவன் (சுவிஸ்).
மருமக்கள் - குணசீலன் (சுவிஸ்), சிவனேசன் (சுவிஸ்), பகீரதன் (சுவிஸ்), சர்வலோகநாயகி (U.K.).
பேரப்பிள்ளைகள் - சி.றொஜினி, திசானி (சுவிஸ்), கு.அர்ஸ்குதா, கு.ஆருஸன் (சுவிஸ்), ப.கவிஸா, ப.இஸா (சுவிஸ்), சு.சந்தோஸ், சு.சாருஸ் (U.K.).
உற்றார், உறவினர், நண்பர்கள்.
(79596)

கரணவாய் மத்தி, கரவெட்டி.
தகவல்: [illegible]

## நடமாடும் சேவை

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலம் தாழ்த்திய பிறப்பு, இறப்பு பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்தச் சேவை எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (204)


BOC

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 28.02.2008இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 28.08.2007இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி, இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக் கிளை | யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை யாழ்ப்பாணம் 2008 நவம்பர் 29ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 9.30 மணி |
| யாழ்.2ஆம் மேற்தரக் கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற் கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் அச்சுவேலி | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (வேலணை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி வடபிராந்தியம்,
உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 3126, 021 222 2735


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்பொழுது பரவிவரும் ஆபத்துத் தரும் தொற்றுநோய் நெருப்புக் காய்ச்சல்

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவி வரும் முக்கியமான ஒரு தொற்று நோய் நெருப்புக்காய்ச்சல் (Typhoid fever). எனவே இந்நோய் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதனால் இயன்றளவு இந் நோய் தொற்றாமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

இந்த நெருப்புக் காய்ச்சலானது ஒரு வகையான பக்றிரியாவால் (பிரதானமாக Samonella typhi உம் குறைந்த அளவில் Samonella Parathyphoid A,B,C என்பன) ஏற்படுத்தப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 16 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் இந் நோயினால் பீடிக்கப்படுகின்றனர். அதில் 600,000 வரையிலானவர்கள் இறப்புக்குள்



ளாகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் கடைசி 10 வருடங்களை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு வருடமும் ஏற்படுத்தப்படும் தொற்றுக்களில் 25% நோயாளிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 2007 ஆம் ஆண்டு இலங்கையில் 1805 பேர் வரையிலானவர்கள் பாதிக்கப்பட்டனர். அதில் 439 நோயாளிகள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வருடம் (2008ஆம் ஆண்டு) இது வரை 85இற்கும் மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

| | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 06 | 04 | 14 | 04 | 03 |
| தெல்லிப்பழை | 09 | 04 | 01 | 02 | 02 |
| மானிப்பாய் | 03 | 04 | 02 | 02 | 03 |
| பருத்தித்துறை | - | 06 | 01 | 01 | 01 |
| கோப்பாய் | 01 | 08 | 06 | 02 | 03 |

5-20 வயது வரையிலானவர்களே பெரிதும் தொற்றுக்கு உள்ளாகின்றனர். ஏனெனில் அதிகமானவர்கள் தங்கள் வீடுகள் தவிர்ந்த சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்களில் தங்கள் உணவுகளை உண்ணும் பழக்கம் அதிகரித்துள்ளது.

### பரம்பலடையும் முறை

தொற்றுதல் அடைந்த உணவுகள், குடிதண்ணீர் என்பவற்றில் பிரதானமாகப் பரம்பலடைகின்றது. இப் பக்றிரியா குறைந்த வெப்பநிலையிலும் தப்பிப்பிழைத்து வாழக் கூடியது. தொற்றுக்குள் ளான நீரில் வளரும் மீன்கள், பச்சைகாய்கறி, பழங்கள் என்பனவற்றாலும் பரவலாம்.

## தொற்றுதல் அடைந்த உணவு,அசுத்தமான நீர் என்பவற்றாலேயே அது வேகமாகப் பரவும்

நோய்த் தொற்றுடைய மனிதன் அவனது மலம், சலம் மூலமாக இந் நோய்க் காரணியை வெளி யேற்றுகின்றான். இவ்வாறு வெளிவிடும் கழிவுப் பொருள்கள் ஒழுங்காக கழிவகற்றாவிடின் இவை அவ்விடத்தில் அண்டிய பகுதியில் உள்ள நீர்நிலைகளில் கலக்கின்றன. இந்நீரை உணவு தயாரிப்பதற்கு பயன்படுத்துவோமானால் அவை உணவுடனும் கலக்கின்றன.

வை. நிமலராஜ்
மருத்துவ பீட மாணவன்,யாழ்.பல்கலைக்கழகம்.

இந்த பக்றிரியா மனித உடலுக்கு வெளியில் நீர், மண் என்பவற்றில் நீண்டகாலம் சுயாதீனமாக வாழக்கூயது. நீரில் இவை பெருக்கமடைவதில்லை. உறங்குநிலையில் 2 நாள்கள் வரை உயிர்வாழும். ஈரமான இதமான வெப்பநிலையில் உள்ள மண்ணில் கிட்டத்தட்ட 70 நாள்கள் வரை உயிர்வாழும். பாலில், அதன் சுவையை மாற்றாமல் விரை வாகப் பெருக்கமடையக் கூடியது. மேலும் குளிர்களில் இது கலக்குமாயின் கிட்டத்தட்ட 30 நாள்களுக்கு வாழும். கழிவுநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் நீரில் பக்றிரியா கலந்திருக்குமாயின் பச்சை மரக்கறி வகைகளுடன் ஒட்டிக்கொள் கின்றது. இவ்வாறு அசுத்தமாக்கப்பட்ட உணவு, நீர் என்பவற்றை மனிதன் பயன்படுத்தினால் இப் பக்றிரியாக்கள் மனிதனின் உடலைச் சென்றடைகின்றன.

இதைவிட தொற்றுக்குள்ளாக்கப்பட்ட மனிதன் மலம், சலம் கழித்த பின்பு தங்களது கைகளைச் சுத்தமாகக் கழுவாமல் விட்டால் அவன் கையாளும் உணவுகள், பானங்கள் என்பவற்றை இவை சென்றடைகின்றன. இதை இன்னுமொருவர் உண்ணும் போது பரம்பலடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. உணவைப் பாதுகாப்பாக மூடி வைக்காதுவிடின் வீட்டு ஈக்கள் மலங்களில் இருந்தபின்பு மீண்டும் உணவுப் பொருள்களில் அமர்வதினால் மலத்திலுள்ள பற்றிரியாக்களை உணவுப்பொருள்களுக்குக் கடத்துகின்றன.

மிகக் குறைந்தளவில் வைத்தியசாலைகளில் முற்காப்பு நடவடிக்கைகளை இல்லாது நோயாளியை கையாளும் வைத்தியசாலை ஊழியர்கள் இந்நோய்க்கிருமியை தங்களுக்குள்ளும் வாங்குகின்றனர். 3-5% மானவர்களில் தொற்றுக்குள்ளாக்கப்பட்டு நோய் அறிகுறிகள் தோன்றி உடனடியாக மறையுமாயினும் அந்நோயாளியில் இருந்து இந் நோய்க்காரணி அழிவடைவதில்லை. தொற்றடைந்த மனிதனில் ஆரம்பத்தில் 6-8 வாரங்களுக்கு இப்பக்றிரியா கழிக்கப்படலாம். இவர்கள் தற்காலிகக் காவிகள் எனப்படுவர். இன்னும் சிலரில் 3 மாதங்களுக்கு மேலாகவும் கழிக்கப்படும். மேலும் சிலரில் ஒரு வருடத்துக்கு மேலாகவும் கழிக்கப்படலாம். இது 50 வருடங்கள் வரை நீடிக்கலாம். இவர்கள் நீண்ட கால காவிகள் என அழைக்கப்படுவர். எனவே இவர்கள் இப்பக்றிரியாவின் பரம்பலை ஊக்குவிப்பவர்களாக இருக்கின்றனர். இப்படியானவர்கள் சில பகுதிகளில் இந்நோய்க்குக் காரணகர்த்தாவாகவும் இருக்கின்றனர். மேலும் ஒரு உதாரணத்தைக் கூறலாம்.

அமெரிக்காவின் ஒரு பெண்மணி நீண்ட காலக் காவியாக இருந்தார். இவரின் பெயர் Mary Mallon. இவர் ஒரு சமயல்காரி இவர் அமெரிக்காவின் ஒரு காலப்பகுதியில் நெருப்புக்காய்ச்சலைப் பலபேருக்கு உருவாக வழி வகுத்தார்.இதனால் இவர். Typhoid Mary என அழைக்கப்பட்டார்.

இவ்வாறு நீண்டகாலக் காவிகளாகப் பெரும்பாலும் பெண்களும், வயது முதிர்ந்தவர்களும் காணப்படுகின்றனர். பொதுவாக மனிதனில் மட்டுமே தொற்றுக்குள்ளாக்கப்பட்டு நோயை ஏற்படுத்துவதினால் மனிதனே ஒரு அடிப்படைக் காவியாக செயற்படுகின்றான்.

தொற்றுக்குள்ளாக்கப்பட்ட நீர், உணவு என்பவற்றால் இந்நோய்க்காரணி மனிதனைச் சென்றடையுமாயின் அது எவ்வாறு உடலினுள் பெருக்கமடைந்து நோயை ஏற்படுத்துகின்றது எனில்,

* உணவுடன் உள்ளெடுக்கப்பட்ட பற்றிரியா எமது சமிபாட்டுத் தொகுதியினுள் சென்றடைகின்றது.
* இது இரப்பையில் உள்ள அமிலத்தில் தப்பிப்பிழைத்து சிறுகுடலைச் சென்றடைகின்றது.
* அதைத் தொடர்ந்து சிறுகுடலின் சுவரைத் துளைத்துக்கொண்டு அதைச் சூழ்ந்துள்ள நிணநீர்க்கலங்களுக்குள் சென்றடைகின்றது. அங்கு பெருக்கமடைந்து குருதியுடன் கலக்கின்றது.
* குருதியினூடாக பல அங்கங்களுக்கு பரவுகின்றது. குறிப்பாக ஈரல், மண்ணீரல், என்புமச்சையில் அதிகமாகப் பெருக்கமடைகின்றன.
* இவற்றிலிருந்து மீண்டும்அதிகளவான பக்றிரியாக்கள் குருதியுடன் மீண்டும் மீண்டும் கலக்கின்றன. குறிப்பாக ஈரலில் பித்தப்பையினுள் இருந்து அதிகளவான பக்றிரியாக்கள் விடுவிக்கப்படுகின்றன. இவை மீண்டும் உணவு சமிபாட்டுத் தொகுதியினுள் சென்றடைகின்றது.

(வளரும்)

# மனிதப் பேரவலங்களைத் தடுக்கும் முனைப்புகள்

.வன்னிப் பிராந்தியத்தினுள் மக்கள் இடம்பெயரும் சூழ்நிலை இரண்டாவது மாதத்தை எட்டியுள்ளது. 147 ஆவது IASC அறிக்கையின்படி 220, 000 பேர் வன்னியில் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவை நோக்கிய அண்மித்த பிரதேசங்களையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் நோக்கி மக்கள் இடம் பெயர்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தினுள் அதிகரித்துவரும் மக்களின் தேவைகளை அம்மாவட்டத்தின் அரசாங்க அதிபர் இமில்டா சுகுமார் தலைமையிலான அரசாங்க அதிகாரிகள் குழு சமாளித்து வரும் வேளையில், அவசரமாகத் தற்போது 5000 குடும்பங்களுக்குத் தேவையான தற்காலிகக் கூடாரங்கள் தேவைப்படுவதாகஅரசஅதிபர்குறிப்பிட்டார்.

அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் நிறுவனமும் உணவுப் பொருள்களை வழங்கி வரும் வேளையில் அதிகரித்து வரும் மழை காரணமாக அவதியுறும் மக்களுக்குத் தேவையான கூடாரங்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகள் நிறுவனம் மேற்கொள்ளவிருப்பதாக அந்நிறுவனத்தின் பேசவல்ல அதிகாரியான கோர்டன் வெய்ஸ் தெரிவித்தார். மூன்றாவது முறையாக செல்லவுள்ள உணவு வாகனத் தொடரணியில் பெரும்பாலும் உணவுப்பொருள்களும் கணிசமான அளவு கூடாரங்களும் அனுப்பப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். வழக்கம்போல இம் முறையும் 50 லொறிகளில் 750 மெட்ரிக் தொன் நிறையுடைய பொருள்கள் அனுப்பப்படும் எனவும் கோர்டன் வெய்ஸ் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் உணவுப் பொருள்களுக்கான தேவை அதிகரித்துக் காணப்பட்டது. தற்போது மழைகாலம் ஏற்பட்டதால் கூடாரங்களுக்கான தேவை அதிக முக்கியத்துவம் பெறுகிறது எனவும் அவர் கூறினார். வன்னி மக்களுக்கு அனுப்பப்படும் உணவுப்பொருள்களை விநியோகிப்பதற்கு ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமில்டா சுகுமார் தெரிவித்தார். 'உணவுப்பொருள்களைக் கொடுப்பதற்கு முன்னதாக பட்டியல்களைப் பரிசீலித்து அதை நாங்கள்

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பமொன்று கிடுகுகளால் நாற்புறமும் அடைத்துக் கொண்டு தங்கியுள்ள காட்சி.



அமைச்சின் அனுமதிக்காக அனுப்புகின்றோம். அதே வேளை எமது அலுவலர்கள் பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள் மூலமாகச் சென்று அந்தப் பட்டியல்கள் எல்லாம் சரியானதா என்று சரிபார்க்கின்றார்கள். அதன் பிற்பாடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, அவர்களால் வழங்கப்பட்டதையும் எங்களுடைய உதவி அரசாங்க அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள்' என்றார்.

இவ்வறான மதிப்பீடு வாராந்தம் தமது அலுவலகத்தில் நடைபெறுவதாகவும் மக்களுக்கு குறைவின்றி உணவு கிடைப்பதை உறுதிசெய்வதற்கு மேலதிக அரசாங்க அதிபர்களும் கிராம சேவையாளர்களும் அதிக கவனம் எடுத்து வருவதால் மக்களின் உணவுக் கஷ்டம் நீக்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்தார். உணவு, தற்காலிகக் கூடாரங்கள் என்பனவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவரும் வேளையில் வன்னிப் பிராந்தியத்தில் விஷேட வைத்தியர்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் வடக்குக் கிழக்கிற்கான ஆலோசகர் வைத்திய கலாநிதி ஜெகநாதன் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் கிளிநொச்சி வைத்திய சாலையில் ஜேர்மன் நாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் எவரும் வன்னியில் கடமை புரிவதில்லை. அதே வேளை இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் வன்னியில் கடமை புரியத்தயங்குவதால் சுகாதாரஅமைச்சுசர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் கடந்தவாரம் கலந்துரையாடியதன் பிரகாரம் செஞ்சிலுவைச் சங்கம் வைத்திய நிபுணர்களைத் தருவிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் இந்த நிபுணத்துவ வைத்தியர்கள் அங்கு விரைவாகக் கடமையில் ஈடுபடுவர் எனவும் ஜெகநாதன் தெரிவித்தார். வன்னியைப் பொறுத்தவரையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மாத்திரமே அங்கு கடமைபுரியும் சர்வதேச அமைப்பாகும். ஐக்கிய நாடுகள் நிறுவனம் தனது உணவு விநியோகத்தை நிறைவேற்றிய பின்பு மீண்டும் வவுனியாவிற்குத் திரும்ப வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குக் காலாண்டுக்குத் தேவையான மருந்துகள் அனுப்பப்பட்டு வருவதாகவும், இம்மாவட்டத்திற்குத் தேவையானவற்றை வவுனியாவில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜெகநாதன் தெரிவித்தார். எனினும் மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் வவுனியா இராணுவ இணைப்பதிகாரியிடம் அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்தார்.

அதேவேளை உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு ஏ-9 பாதை உபயோகிக்க முடியாத காரணத்தினால் மாற்றுவழியாக புளியங்குளம், நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் பாதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மழைகாலம் காரணமாக பாதையின் தன்மைகடினமாக இருப்பதால் பாதையைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 20 கி.மீ. தூரமுள்ள இப்பாதையை செப்பனிட ஒரு மாத காலம்தேவை எனவும் தற்போது 3கி.மீபாதை செப்பனிடப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பாதைகளைச் செப்பனிடுதல், வெளிநாட்டு விஷேட வைத்தியர்களை வன்னிக்கு அனுப்புதல், மருத்துவப் பொருள்கள், உணவுப் பொருள்கள், கூடாரங்கள் என்பவற்றை அனுப்புதல் என்பன எதிர்வரும் காலங்களில் முக்கிய செயற்பாடாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி: மீண்டும் வாழ்வோம்.
(INTER NEWS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் புலிகள் செய்த...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதில்தான் சில சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன.

செவ்வாய் இரவு தாக்குதலுக்கு புலிகளின் விமானங்கள் புறப்பட்டமை பற்றிய விடயத்தை வவுனியாவில் செயற்பட்டுக் கொண்டிருந்த - இந்தியா வழங்கிய - 'இந்திரா' ரக ராடர் உடனடி யாகவே கண்டுபிடித்துஎச்சரிக்கைசெய்யத்தொடங்கிவிட்டது.

கடந்த செப்டெம்பர் மாதம் வவுனியா கூட்டுப்படைத்தளம் மீது புலிகளின் கொமாண்டோ அணி நடத்திய அதிரடித் தாக்குதலில் அழிந்து போன அந்த 'இந்திரா' ரகராடருக்குப் பதிலாக அடுத்த 24 மணி நேரத்துக்குள் இந்தியா வழங்கி உதவிய மற்றொரு 'இந்திரா' ரக ராடர் இப்போது அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதுவே செவ்வாயன்று இரவு புலிகளின் விமானத்தை முதலில் கண்டுபிடித்து எச்சரித் திருக்கின்றது.

ஆனால், மீரிகமையில் இயங்கிக் கொண்டிருந்த சீனத் தயாரிப்பு 'ஜே.வை - 11' ரக ராடர் புலிகளின் விமானத்தை பெரும்பாலும் கோட்டை விட்டு விட்டது என்றே கூறவேண்டும்.

சுமார் நூற்றியெண்பது கிலோமீற்றர் சுற்றாடல் தொலைவில் மிக தாழப் பறந்து வரும் விமானங்களையோ, வான் கலங்களையோ உடன் கண்டு பிடிக் கும் திறனும், துல்லியமும் கொண்ட இந்த ராடர் புலிகளின் விமானத்தை செவ்வாய் இரவு கோட்டை விட்டது எங்ஙனம் என்ற கேள்வியே இப்போது பலத்த சர்ச்சைகளை உருவாக்கி யிருக் கின்றது.

புலிகளின் விமானம் அன்று தலைநகர் வரை வந்து ஊடுருவித் திரும்பிச் சென்ற சமயம் அது தொடர்பாக மிகப் பலவீனமான சில சமிக்ஞைகளை மட்டுமே அந்த ராடரால் பெற முடிந்திருந்ததாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு உணர்த்திறன் வாய்ந்த படைத்தரப்பு' ராடர்' ஒன்றுக்குப் புலிகள் கயிறு கொடுத்தமை எங்ஙனம் என்ற கேள்விக்கு நிபுணத்துவ வட்டா ரங்கள் சில காரணங்களை கூறுகின்றன.

ஒன்று - சம்பந்தப்பட்ட ராடரின் உணர்த்திறனை முறியடிக்கக்கூடிய பொறி முறை ஒன்றைப் புலிகள் பயன்படுத்தி யிருக்கலாம். அல்லது - சம்பந்தப்பட்ட ராடரின் சமிக்ஞைப் பொறி முறையை 'ஜாம்' பண்ணிக் குழப்பியிருக்கலாம்.

'ராடர்களின்' கண்களுக்கு அல்லது உணர்த்திறனுக்கு மண்ணைத் தூவி மறைக்க கூடிய ஒரு பொறிமுறை என்று கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட ராடரின் உணர்த்திறன் அலைவீச்சை கணக்கிட்டு அதற்கேற்ற பிளாஸ்மா கலவை கொண்ட ஒரு பூச்சை சம்பந்தப்பட்ட விமானத்தின் வெளிப்புறத்தில் பூசி விட்டால், அந்த ராடரின் உணர்த்திறன் கண்ணுக்கு இந்த விமானம் தோற்றாமல் மாயமாகி விடும் எனக் கூறப்படுகிறது.

வழக்கமாக 'ராடர்கள்' தமக்கென ஒரு குறிப்பிட்ட அலைவீச்சுக் கதிர்களைப் பயன்படுத்தியே நோட்டமிடுகின்றன. ராடரில் இருந்து புறப்படும் அந்த அலை விமானம் போன்ற ஒரு வான் கலத்தில் பட்டுத் தெறித்துத் திரும்பும் போது அதனை உள்வாங்கி, உணர்ந்து அந்த வான்கலப் பறப்பை அடையாளம் காண்கிறது ராடர்.

ஆனால் மேற்படி Stealth Technology பயன்படுத்தி, விசேட பூச்சைக் கொண்டிருக்கும் விமானம் சம்பந்தப்பட்ட ராடரில் இருந்துவரும் அலை வீச்சை அப்படியே உள்வாங்கிக் கொள்ளும். பட்டுத் தெறிக்க விடுவதில்லை. அப்படி அலைவீச்சு, சம்பந்தப்பட்ட விமானத்தில் பட்டுத் தெறித்து ராடரின் உணர்த்திறன் பகுதிக்கு மீளாவிட்டால் அங்கு ஒரு விமானம் பறந்து கொண் டிருப்பதை அந்த ராடரினால் உணரவோ அல்லது அடையாளம் காணவோ முடியாமல் போகும். அத்தகைய நிலையில் அந்த ராடரைப் பொறுத்தவரை அந்த விமானம் அருவுருவத்தில் - உருவமற்றதாக (Invisible) -மாயமானதாக இருக்கும்

மீரிகமவில் பொருத்தப்பட்டிருக்கும் - அதியுயர் உணர்த்திறன் மிக்க - தாழப் பறக்கும் விமானங்களையும் துல்லியமாகக் கண்டு பிடிக்கும் வலுவுடைய - சுமார் 180 கிலோ மீற்றர் தொலைவு வரை செயலாற்றல் வீச்சு உடைய - சீனத் தயாரிப்பு 'ராடர்' கருவி புலிகளின் விமானத்தை கோட்டை விட்டமைக்கு இந்தப் பொறிமுறையைப் புலிகள் பயன் படுத்தியமைதான் காரணமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தாக்குதல் நடத்திய புலிகளின் விமானத்தைத் தேடிக் கலைத்துச் சென்ற 'F7' ரக ஜெற் விமானங்களும் சீனத் தயாரிப்பே.

அவை புலிகளின் விமானத்தை அடையாளம் கண்ட போதும் -

வானிலிருந்து வானுக்கும் தாக்குதல் நடத்தக்கூடிய உச்சத்திறன் கொண்ட இந்த விமானங்களால் புலிகளின் விமானத்தை இலக்கு வைத்து வீழ்த்த முடியாமல் போயிற்று என்று கூறப்படு கின்றது.

அடையாளம் கண்ட எதிரியின் விமானத்தை இலக்கு வைத்து ஏவுகணையை 'லொக்' (Lock) செய்து, அழுத்தி விட்டால் அது எதிரியின் விமானத்தைக் கலைத் துச் சென்று தாக்கி அழிக்கும். அத்த கைய பொறிமுறை வழியை 'F7' விமானம் கொண்டுள்ளது.

அன்றைய தினம் புலிகளின் விமானத்தை விமானப்படையினரின் இந்த 'F7' ரக யுத்த விமானங்கள் அடையாளம் கண்டன. இலக்கு வைத்தன. ஆனால், ஏவுகணையை, புலிகளின் விமானத்தைக் குறி வைத்து 'லொக்' செய்ய முடியாமல் போயிற்று என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன.

இத்தகைய ஏவுகணையால் எதிரி விமானத்தை இலக்கு வைப்பதற்கும் அதே 'ராடர்' பொறிமுறையே பயன் படுத்தப்படுகின்றது. ஏவுகணையை இயக்கும் கருவி எதிரி விமானத்தில் பட்டுத் தெறித்து வரும் அலை வீச்சை உணர்ந்து, அதன் அடிப்படையில் எதிரி விமானத்தின் பறப்பு நிலையைக் கணக்கிட்டுத்தான் தன் கைவரிசையைக் காட்டும்.

ஆனால், அன்று புலிகளின் விமானத்துடன் தமது ஏவுகணைச் செலுத்தியை 'லொக்' செய்ய விமானப்படையின் 'எவ் -7' ரக விமானத்தால் இயலாமல் போனமைக்கு அதே Stealth பொறி முறையைப் புலிகள் பயன்படுத்தி, சீனத் தரப்பு ஏவுகணைக் கருவிகளைக் குழப்பியமையே காரணமாக இருக்கக்கூடும் என சில நிபுணர்கள் கருதுகின்றனர்.

அன்றைய தினம் இந்தியத் தயாரிப்பு 'ராடர்' களினால் புலிகளின் விமானங்களை அடையாளம் காண முடிந்தமையும் - சீனத் தயாரிப்பு ராடர்கள், விமானக் கருவிகளுக்கு புலிகளின் விமானங்கள் 'உச்சக்காட்டித்' தப்பிச் சென்றமைக்கும் -இதுவே காரணம் என்று சில தரப்புகள் நம்புகின்றன.

ஆனால், வன்னி போன்ற காட்டுக்குள் இருந்து செயற்படும் புலிகளால் இத்தகைய - மிக உயர் தரத்தினாலான Stealth பொறி முறையைக் கையாள்வது குறித்து நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்று வேறு சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதைவிடவும், ராடர் செயற்பாட்டை ஒச்ட் செய்து குழப்பும் உயர் தொழில்நுட்ப வசதியும் புலிகளுக்கு சாத்தியமற்றதே என்றும் அவை கூறுகின்றன.

எது எப்படியோ - சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேல் மீண்டும் ஒரு தடவை இலங்கை வான் பரப்பில் தன்னிஷ்டத்துக்குப் பறந்து, தனது கைவரிசையைக் கனகச்சிதமாகக் காட்டிச் சென்ற வான் புலிகளின் விமா னத்தை -

உயர் தரத்தினாலான வான் பாதுகாப்புப் பொறிமுறை, வானிலிருந்து வானுக்குத் தாக்கும் விசேட வசதிகளையும் கொண்ட மிகையொலி யுத்த விமானங்கள் போன்ற வற்றைகொண்டிருந்தும் - அரச பாதுகாப்புப் படைகளினால் அழிக்க முடியாமல் போயிற்று என்பதே நிதர்சனம்.

வான் பாதுகாப்புப் பொறிமுறைக்கு என்ற பெயரில் 'ராஜபக்ஷ அன் பிறதர்ஸ் கம்பனி' கொட்டிச் செலவு செய்திருக்கும் - நாட்டு மக்களின் - பல் லாயிரம் கோடி ரூபா நிதியும் வெறும் வீணா என்ற கேள்வியையும் இத் தாக்குதல் ஏற்படுத்தி நிற்பது கவனத்துக்கு உரியதாகும். ✱

## 'மழலை அமுது' இறுவட்டு வெளியீட்டு விழா

ஆனைக்கோட்டை, மானிப்பாய் கிராம பொது நூலக வளர்ச்சி நிதிக்காக 'மழலை அமுது' இறுவட்டு வெளியிடப் படவுள்ளது.

முன்பள்ளிச் சிறார்களுக்கான கற்றல், களிப்பூட்டலான இந்த இறுவட்டுவெளியீட்டு விழா நாளை திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத் தில்நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் இந்த விழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும், ஓய்வு பெற்ற நீதிவான் மு.திருநாவுக்கரசு சிறப்பு விருந் தினராகவும் கலந்து கொள்வர்.

(204)

## கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

கோப்பாய், நவ.2

கோப்பாய் பிரதேச செயலக விவசாயக் குழுக்கூட்டமும் ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத் திவைக் கப்பட் டுள்ளன.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த இக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(203-78)

## நாயைக் காணவில்லை

Dash Hund , கட்டை இன, வால் இல்லாத, காதுகள் நீளமான, கறுப்பு, பிறவுண் நிறமுடைய நாயை 31.10.2008 முதல் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் 162/3, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 222 6491
222 2084 (சி/555176)

## மரண அறிவித்தல்

### சின்னையா மகேஸ்வரன்



நவாலி வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாவும், கூழாவடி கிழக்கு, ஆனைக் கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா-மகேஸ்வரன் 31.10.2008 வெள் ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகர் - பூரணம் தம்பதியினரின் மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், காலஞ் சென் றவர்களான கந்தையா, சுப்பிரமணியம், அப்புத்துரை மற்றும் நாகேஸ்வரி, பரமேஸ்வரி(பிரான்ஸ்), இரத்தினேஸ்வரி, தங்கராணி ஆகியோரின் சகோதரரும், சுவாமிநாதனின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.10.2008 வெள்ளிக்கிழமை அன்று நவாலி வீதி, ஆனைக்கோட்டையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## ZOA REFUGEE CARE NETHERLANDS நிறுவன அனுசரணையுடன்

**யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் "மாவட்ட ரீதியிலான மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி"க்கான விண்ணப்பம் கோரல்**

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள், பதிவு செய்யப்படாத கழகங்கள் இப் போட்டிக்கு 09.11.2008 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும். பதிவு செய்யப்படாத கழகங்கள் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பின் அவர்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வை.ஆனந்தஜெஸ்கரன் (பொருளாளர்)
யா.மா.தா.வி.சங்கம்,
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

## விற்பனைக்கு

50 நாள்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட நல்லின பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கா.சுகுமார்,
சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு,
மானிப்பாய். (79610)

## தவறிவிட்டது

புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய பாலகிருஷ்ணன் பிரதீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (771881041V) மற்றும் பாதுகாப்பு சேவை சீருடை அடங்கிய பொதி ஒன்று ஆனைப்பந்திச் சந்திக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பா.பிரதீபன், இல.30, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு என்னும் முகவரிக்கு தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரம் என்னும் முகவரியுடைய நாவிது சத்தியசீலன் என்பவரது தேசிய அ.அட்டை (582423229V), விசேட அ.அட்டை, மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய கறுத்தப் 'பேர்ஸ்' நாவாந்துறையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் மேலுள்ள முகவரியில் தந்துதவவும்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

2 மாதம் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட கொக் சோபானி நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

இல. 82, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 111 530 (79597)

## ஒத்துமாறல்

வடக்கு மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சு, திருகோணமலையில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்.மாவட்டத்தில் உள்ள மாகாண சபை அலுவலகங்களில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். அவ்வாறு ஒத்துமாற விரும்புபவர்கள் இத்தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (79612)

060 221 6127, 077 8064940, 0715459555

## TITA
### Rural IT Training Centre

140 Navalar Road, Jaffna
114 Duch Road, Chavakachcheri

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

சேவை நோக்குடன் மிகக் குறைந்த கட்டணத்தில் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவரும் பயிற்சி நிலையங்களில், புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

I. Basic Computer Application (Introduction to Computer, Ms Word Ms Excel Ms Powerpoint)
II. Desktop Publishing (Adobe Photoshop, Adobe Pagemaker CorelDRAW)
III. Inter net & e-mail (10 Hrs)

Online Classes

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

மேலதிக விபரங்களுக்கு நேரில்

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைப் பிரிவு ஆண்டுப் பொதுக் கூட்டமும் தேர்தலும் - 2008

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாப்புக்கமைய இவை கிளையினால் நடைபெறவுள்ளன.

| | |
|---|---|
| முன்னறிவித்தல் | : 06.10.2008 (45 நாள்களுக்கு முன்) - அனுப்பியாகிவிட்டன |
| இறுதியறிவித்தல் | : 02.11.2008 (14 நாள்களுக்கு முன்) - அனுப்பப்படுகின்றன |
| நியமனப் பத்திரம் விநியோகம் | :03.11.2008- 07.11.2008 (பிரிவுக் காரியாலயம்,மல்லாகம்) |
| நியமனப் பத்திரம் தாக்கல் | : 08.11.2008 (பிரிவுக் காரியாலயம், மல்லாகம்) |
| ஆண்டுப் பொதுக் கூட்டமும் தேர்தலும் | : 16.11.2008 (பிரிவுக் காரியாலயம், மல்லாகம்) |

**இதில் கலந்து கொள்ளவுள்ள அலகினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்கான அறிவித்தல் கடிதங்கள் கிடைக்காவிடின் கிளை/பிரிவுக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்க. ஆண்டுப் பொதுக் கூட்டமும் தேர்தலும் 16.11.2008 மு.ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளன. தவறாது சமுகம் தரவும்.**

கு.பாலகிருஷ்ணன், கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை, 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஐக்கியப்பட்ட நடவடிக்கையே தமிழகத்திலிருந்து எதிர்பார்ப்பு

வீரியத்தை விட, காரியம்தான் முக்கியமானது.

வேகத்தை விடவும் விவேகம்தான் முக்கியமானது.

எண்ணிக்கையில் அதிகமானவர்களான பெரும்பான்மையினரால் ஈவு, இரக்கமற்ற அடக்கு முறைக்கு ஆளாகியிருக்கின்ற சொற்ப எண்ணிக் கையினரான- சிறுபான்மையினரான-ஈழத் தமிழர்களுக்கும் அவர்களது தலைமைத்துவங்களுக்கும் ஆதரவு சக்திகளுக்கும் இதுதான் பிரதான விடயமாகும்.

வேகம் காரணமாக விவேகத்தையோ, வீரியம் காரணமாக காரியத்தையோ கோட்டை விட்டுவிடலாகாது.

ஈழத் தமிழ் மண்ணில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பேரவலத்திலிருந்து அவர்களை விடுவிக்கும் முயற்சியில் இந்த விவேகச் செயற்பாடும் காரியத்தில் கண்ணும் அவசியமானவை என்பதை தமிழகத்தில் இருந்து வெளியாகும் பிரபல வார சஞ்சிகையான 'ஆனந்த விகடன்' தனது ஆசிரிய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

''இலங்கை அரசுக்கு ஆயுதமும் இராணுவ நுட்பமும் கொடுக்காதீர்கள்! என்ற குரலுக்கு இந்திய அரசு நிம்மதியான ஒரு பதிலும் தராமல் போனதில் ஈழத் தமிழனுக்கு மிகப் பெரிய ஏமாற்றம்! அதைக் கூடத் தாங்கிக் கொள்ள முடிந்த அவனால் 'தமிழர்கள் மீதான கொடூரத் தாக்குதலை உடனே நிறுத்துங்கள்!' என்று உரக்கச் சொல்வதற்குக் கூட இந்தியா தயங்குவதைத்தான் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை''-

என்று ஈழத் தமிழர்களின் மனநிலையைத் தெட்டத் தெளிவாக-அப்பட்டமாக-படம் பிடித்துக் காட்டியிருக்கின்றது ஆனந்த விகடன்.

இதே சமயம், இந்தியா மற்றும் தமிழகம் தொடர்பாக இன்றைய நிலையில் ஈழத் தமிழர்கள் மனதில் ஓடும் எண்ணங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது அந்த ஆசிரிய தலையங்கம்.

''அவனுடைய ஈழத் தமிழனுடைய ஒரே ஆறுதல், தமிழகத்திலிருந்து சகோதர பாசத்தோடு எழும் ஆதரவுக் குரல்கள் மட்டுமே. அதே சமயம் 'ஆதரவுக் குரல்கள் குயுத்தி குரல்களாக மாறி, தமிழக அரசியல் கட்சிகள் பரஸ்பரம் தங்களை வீழ்த்திக் கொள்ளும் ஆயுதமாவதை அவன் அதிர்ச்சியோடு கவனிக்கின்றான். தமிழகத்தில் அரங்கேறும் கைதுகள் ஒரு போதும் தன் பிரச்சினைக்குத் தீர்வாகா என்பதை அவன் அறிவான்.

'சகோதர சொந்தங்களே.....இந்த நேரத்தில் எங்களுக்கு முக்கிய தேவை உங்கள் ஒற்றுமைதான்! அதை விடுத்து கவனம் திரும்பி, உங்களுக்குள் நடக்கும் யுத்தத்தை நோக்கி எல்லார் கவனத்தையும் திசை திருப்பி விடாதீர்கள்!'-என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சுகிறான் இந்த ஈழத் தமிழன்''

இப்படி ஆனந்த விகடன் மேலும் சுட்டிக் காட்டி இருக்கின்றது.

இதே பத்தியில், கடந்த வாரம் நாம் சுட்டிக் காட்டிய விடயங்களை உள்வாங்கி, இவ்வாறு அப்படியே பிரதிபலித்திருக்கின்றது அந்தச் சஞ்சிகை.

ஈழத் தமிழர் விடயத்திலாவது தமிழக அரசியல் சக்திகள் ஒன்றுபட வேண்டும். அத்தகைய ஒற்றுமை- ஐக்கியம்-மட்டுமே இந்த நெருக்கடியான, இக்கட்டான கட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு மீட்சியைப் பெற்றுத்தரும்.

ஈழத் தமிழர் விவகாரத்தைத் தமது அரசியல் கோபதாபங்களுக்கும்,குரோதங்களுக்கும் சித்து விளை யாட்டுக்கும் வசமாகக் பயன்படுத்தத் தமிழக அரசியல் சக்திகள் முனையுமானால் அது ஈழத் தமிழர்களை 'கொதிக்கும் சட்டிக்குள் இருந்து, அடுப்புக்குள் விழுத்தும் நிலையையே' ஏற்படுத்தும்.

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் தமிழகத்தில் ஒற்றுமைப்பட்ட செயன்முறைத் திட்டத்தை முன்னெடுப்பதாயின், அதை வழி நடத்திச் செய்ய வேண்டியவர் இன்று தமிழகத்தில் அதிகாரத்தில் இருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிதான்.

ஈழத் தமிழர் விடயத்தில் ஒற்றுமைப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்காக தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அழைத்து, அதனடிப்படையில் தீர்மானங்களை மேற்கொண்ட தமிழக முதல்வர், அந்தத் தீர்மானத் திட்டத்தைக் கைவிடும்- அல்லது ஒத்திவைக்கும்-முடிவை மட்டும் தம்பாட்டில் எடுக்கின்றார். இப்போக்கு ஒற்றுமைப்பட்ட செயற்பாட்டுக்கு வாய்ப்பளிக்க மாட்டாது.

தமிழக முதல்வர், தமது அரசு, தனது கட்சியின் அரசியல் நிலைமை, தனது வாரிசுகளின் அரசியல் எதிர்காலம் என்று குறுகிய வட்டத்துக்குள் நின்று சிந்திப்பதை விடுத்து, இலங்கைத் தமிழர் விடயத்தில் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துச் செயற்பட முன்வர வேண்டும்.

செய்வாரா அவர்.........?

# சிறப்பாகச் செயற்பட்ட வானோடிகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்

கிளிநொச்சி, நவ.2

வான்தாக்குதலில் சிறப்பாகச் செயற்பட்ட வான் புலிகளின் வானோடிகளுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் விருதுகள் வழங்கிக் கௌரவித்தார்.



பிரத்தியேக இடம் ஒன்றில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வான் புலிகளுக்கு 'நீலப்புலி', 'மறவர்' விருகளை பிரபாகரன் வழங்கினார்.

நிகழ்வில் ஆரம்பத்தில் வவுனியா கூட்டுப்படைத் தளம் மீதான தாக்குதலில் வீரகாவியமான கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு தலைவர் சுடரேற்றி மாலை சூட்டி வணக்கம் செலுத்தினார்.

விடுதலைப்புலிகளின் வான் புலிகளில் சிறப்பாகச் செயற்பட்ட குறிப்பாக சிறிலங்காவிலுள்ள களனி திஸ்ஸ அனல் மின் நிலையம்மீதான தாக்குதல் உட்பட சிறிலங்காப் படைய, பொருண்மிய இலக்குகள் மீதான தாக்குதல்களை ஐந்து தடவைகளுக்கு மேல் வெற்றி கர மாக நடத்திய வானோடிகளுக்கு ''நீலப் புலி'' என்னும் சிறப்பு விருதை தமிழீழ தேசியத் தலைவர் வழங்கினார்.

மூன்று தடவைகளுக்கு மேல் வெற்றிகர மாக தாக்குதல் நடத்தி துணை வானோடிகளுக்கு 'மறவர்' விருதையும் தலைவர் வழங்கினார்.

அத்துடன் 09.09.2008 அன்று வவுனியா சிறிலங்கா கூட்டுப்படைத் தளம் மீதான தாக்குதலை நடத்திய வான் புலிகளின் வானோடிகளுக்கும் கேணல் கிட்டு பீரங்கிப் படையணிப் போராளிகளுக்கும் தமிழீழ தேசியத் தலைவர் சிறப்புப் பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், கட்டளைத்தளபதிகள், போராளிகள் உட்பட பெருமளவிலானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். (1)

# பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் முதலாவது நினைவுநாள் இன்று

யாழ்ப்பாணம், நவ.2

தமீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசாங்கத்தின் விமானக் குண்டு வீச்சில் உயிர்நீத்த முதலாவது நினைவு நாள் இன்றாகும். 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி அவர் கொல்லப்பட்டார். தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளராக பதின்நான்கு வருடங்கள் பணிபுரிந்த அவர், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையில் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுக்களில் பங்குபற்றினார்.

தாய்லாந்து, சுவிர்ஸர்லாந்து, நோர்வே, டென்மார்க், ஜேர்மனி உட்பட பல நாடுகளுக்குச் சென்று தமிழர் தரப்பின் நியாயத்தை எடுத்துரைத்தவர்.

ஜெனிவா பேச்சு வார்த்தைக்கு அவரே தலைமை வகித்தார்.

ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில் அழிக்கமுடியாத நட்சத்திர பெருமையைப் பெற்றவர். அரசியல் விஞ்ஞானம், இராஜதந்திரப் போக்கு, துணிச்சலான முடிவு என்ற பல திறமைகளைக் கொண்டிருந்தவர் அவர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் போராளியாகச் சேர்ந்து கோட்டப்பொறுப்பாளர், யாழ். மாவட்ட சிறப் புத் தளபதியாகசெயற்பட்டவர். 1993 ஆம் ஆண்டில் அரசியல் துறைப் பொறுப் பாளராக பதவியேற்றவர்.



1994-1995 இல் சந்திரிக்கா அரசுடனான அமைதிப்பேச்சில் விடுதலைப்புலிகளின் அணிக்குத்தலைமை வகித்தார்.

தமது அரசியல் பணி மூலம் தமிழ் மக்கள் மனங்களில் நிறைந்தவராக பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் விளங்குகிறார்.

எப்போதும் புன்னகை தவழும் அவரது முகம் ஈழத்தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிழலாடும்.

# பயணிகள் கப்பல் சேவை இன்று இல்லை; நாளையே

யாழ்ப்பாணம்,நவ.2

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறமாட்டாது.

நாளை திங்கட்கிழமை வழமை போல் கப்பல் சேவை இடம்பெறும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டவர்கள் தமது அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு மறுநாள் தமது பயணத்தை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (202)

# குருநகரில் நேற்றுத் தேடுதல்

நேற்று சனிக்கிழமை யாழ்.திருநகர் மற்றும் குருநகர்தொடர்மாடிப் பகுதிகளைஅதிகாலை முதல்படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

முற்பகல் 9 மணியுடன் படையினர் தேடுதல் நடவடிக்கையை நிறுத்திக் கொண்டதன்பின்பாகவே அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பக்கூடியதாக இருந்தது. (1-160)

# இளைஞர் சேவை மன்றத்தின் சுற்றுநிருபங்கள் தனிச் சிங்களத்தில்

## யாழ். மாவட்ட அலுவலர்கள் பெரும் சிரமம்

வலி.வடக்கு, நவ.2

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைப் பீடத்தில் இருந்து அனுப்பப்படும் சுற்று நிருபங்கள் தனிச்சிங்கள மொழியில் மட்டுமே அனுப்பி வைக்கப்படுவதால் யாழ். மாவட்ட அலுவலர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக உரிய செயற்றிட்டங்களை உடனடியாக மேற்கொள்ள முடியவில்லை என்றும் அவை காலம் தாழ்த்தியே மேற்கொள்ளப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலங்களில் அனுப்பப்படும் சுற்று நிருபங்களையாவது தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-86)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.2

மாகாண மட்ட விஞ்ஞானபாட வினாடி வினாப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு இருநாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயிற்சிப்பட்டறை நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,நவ.2

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி நகர சபையினர் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கொத்தணியைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்கும் தரம் 11 மாணவர்களுக்கான விஞ்ஞானபாட பயிற்சிப் பட்டறையினை நடத்தவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறையில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம், கைதடி- நுணாவில் அ.த.க.பாடசாலை, மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாண வர்கள் கலந்துகொள்ளவிருப்பதாக நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (202-207)

* * *

யாழ்ப்பாணம், நவ.2

நலிவுற்ற மக்களின் மேம்பாட்டு நிதிக்காக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் பங்களிப்புடன் கரம் கொடுக்கும் கலை விழா நடைபெறவுள்ளது.

இந்த விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது. (204)

* * *

வலி.வடக்கு,நவ.2

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் யாழ்.மாவட்ட தடகள வீரர், வீராங்கனைகளுக்கு இடையே நடத்திய விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர், வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டி இணைப்பாளரும் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளருமான எஸ்.மரியதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை எ.யேசுதாசன், எக்ஸ்போ விமான சேவை நிறுவன யாழ்ப்பாண முகாமையாளர் கே.வசீகரன், யாழ்ப்பாணம் இலங்கை வங்கி அதி சிறப்புத்தர கிளை முகாமையாளர் ஆர்.ஜெயந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (202-86)

* * *

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பும், சிறுவர் தின விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள சனசமூக நிலையக் கலையரங்கில் நடைபெறவுள்ளன.

நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தி யோ கத்தர் தா.தியாகமூர்த்தி பிரதம விருந்தினராகவும், கிராம அபிவி ருத்தி உத்தியோகத்தர் திருமதி பா.மாலினி சிறப்பு விருந்தினராகவும், கிராம அலுவலர் கி.மகாலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (204)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 18 | 03.11.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.ப.01.53 வரை |
| நட்சத்திரம் : | மூலம் |
| | காலை.06.31 வரை |
| சுபநேரம் : | 12.04-01.34 |
| ராகுகாலம் : | 07.34-09.04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆண்டுகளாக போர் முடியாததன் தன்மையை இலங்கைக்கு பெரிய நாடுகள் புரியவைக்கவேண்டும்

## நடிகர் சங்க உண்ணாவிரதத்தில் ரஜினி



சென்னை, நவ. 2

இலங்கையில் 30வருடங்கள் கடந்தும் போர் ஓயாத தன்மையை இலங்கை அரசு புரிந்து கொள்ளவேண்டும். அதற்குப் புரிய வில்லை என்றால் உலகில் உள்ள பெரிய நாடுகள் இந்த உண்மையை இலங்கை அரசுக்குப் புரியவைக்க வேண்டும்.

சென்னை தென்னிந்திய நடிகர் சங்கத்தில் இலங்கைப் பிரச்சினைக்காக நேற்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த உணர்வுபூர்வமான உண்ணா விரதப் போராட்டத்தை ஏற்பாடு செய்த நடிகர் சங்கத்திற்கு முதலில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது இலங்கைத் தமிழர்களுக்காக சினிமாத்துறையினர் நடத்தும் மூன்றாம் கட்டப் போராட்டம். இங்கு பல கட்டுப்பாடுகள் இருப்பதால்தான் இந்தப் போராட்டம் பெரி யளவில் வெற்றி பெற்றிருக்கிறது. கட்டுப் பாட்டு இல்லாத மனிதனாலும் கட்டுப்பாட்டு இல்லாத மனதாலும் எதையும் சாதிக்க முடியாது.

நான் பல இலங்கைத் தமிழர்களுடன் பழகியிருக்கிறேன். அவர்களுடைய மொழி மிகவும் இனிமையானது. அவர்கள் நம்மைத் திட்டினால் கூட அது இனிமையாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட மக்கள் தங்களுடைய சொந்த மண்ணில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

**30 வருடங்களாக வெல்லமுடியாத நீங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள்**

சம உரிமை கேட்டுப் போராடிவரும் இலங்கைத் தமிழர்களுக்காக நடத்தப்படும் இந்த உண்ணாவிரதப் போராட்டத் தில் நாம் என்ன பேசுகின்றோம் என்பது இலங்கை அதிபர் ராஜபக்ஷ அரசுக்கு தெரியும். அந்த நம்பிக்கையில் நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன்.

உங்களிடம் முப்படைகளும் பல வசதிகளும் இருக்கின்றன. சம உரிமை கேட்டுப் போராடுபவர்களோடு யுத்தம் செய்கிறீர் கள். கடந்த 30 ஆண் டுகளாக அவர்களை அழிக்க முடியா விட்டால் நீங்கள் வீரர்கள்தானா? பிறகு எதற்கு அரசு? தோல்வியை ஒப்புக் கொள்ளுங்கள்.

இலங்கை மட்டுமல்ல எந்த நாடாக இருந்தாலும் அங்கு சாமானிய மக்கள், பாமரர்கள், ஏழைகள், பெண்கள், குழந்தைகள் பாதிக்கப்படக் கூடாது. அவர்கள் வேதனையில் சுவாசக்காற்று விட்டால் அந்த நாடு உருப்படாது. உதிரம் கொட்டும் ஈழ மண்ணில் தமிழர்கள் பிணங்களாகப் புதைக்கப்படுகின்றார்களா? இல்லை அங்கு பிணங்களை விதைக்கிறார்கள். நீங்கள் யுத்தத்தில் வென்றால் கூட அந்த விதைகள் உங்களை நிம்மதியாக வாழ விடாது.

**பெரிய நாடுகள் புரியவைக்க வேண்டும்**

எனவே இலங்கை அரசு நான், எனது என்ற அகங்காரத்தை விட்டுவிட்டு உட னடியாக சமரசத்துக்கு வரவேண்டும். இந்தப் பிரச்சினை 30 ஆண்டுகளாக முடியாத போது அதன் தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் புரியவில்லை என்றால் உலகில் உள்ள பெரிய நாடுகள் இந்த உண்மையை இலங்கை அரசுக்குப் புரிய வைக்க வேண்டும் -என்றார் ரஜினிகாந்த். (அ-02)

## முன்னிலையில் இந்தியா!

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் இந்தியா 2விக்கெட்டுக்கள் இழப்புக்கு 43 ஓடங்களை எடுத்துள்ளது. கௌதம் கம்பீர் 21ஓட்டங்களுடனும் ராகுல் ட்ராவிட் 5ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

நான்கு விக்கெட்டுக்கள் இழப்புக்கு 338 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்றைய நான் காம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த ஆஸ்தி ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 577ஓட்டங்களை மட்டும் பெற்றது.முதல் இன்னிங்ஸில் 7விக்கெட் இழப்புக்கு 613 ஓட்டங்களைப் பெற்ற இந்திய அணி இப்போது 79 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

## மஹிந்தா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் (BIMSTEC - Bengal Initiative for Multi - Sectoral Technical and Economic Cooperation) கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி இந்தியா செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியா செல்லும் ஜனாதிபதி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து இருதரப்பு உறவு குறித்தும் பேச விருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்மாதம் 12 ஆம் திகதியளவில் இந்தியா செல்லவிருக்கிறார் என்று கூறப்பட்டது.

## அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது ஒருவர் 'சயனைட்' அருந்தி அந்த இடத்திலேயே மரணமானார்.

மற்றைய மூவரும் தப்பி ஓடினார்கள். படையினர் அவர்களைக் கலைத்துச் சென்றனர் அவர்களில் ஒருவர் படையினரை நோக்கி வேட்டுக்களை தீர்த்துக் கொண்டு ஓடினர். படையினர் அவர் மீது பதில் தாக்குதலை நடத்தினர். அப்போது அவர் கொல்லப் பட்டார்.

'சயனைட்' அருந்திய இளைஞனிடம் இருந்து யாழ்.பல்கலைக்கழக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பன மீட்கப்பட்டன.

அந்த அடையாள அட்டைகளின் மூலம் அவர் யாழ்.பல்கலைக்கழக பீடத்தின் மூன்றாவது ஆண்டு மாணவன் செல்லத்துரை புருஷோத்தமன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது- இவ்வாறு நீதிவான் விசாரணையின் போது பொலிஸார் தெரிவித் தனர்.

சடலங்களை பிரேத பரிசோதனைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு.நீதிவான் உத்தரவிட்டார். (அ-01)

## மேஜர் ஜெனரல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியாக பணி யாற்றிவரும் லோரன்ஸ் இளைப்பாறிக் கொள்வதை அடுத்தே மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இந்தப் பதவியை ஏற்கவிருக்கிறார்.

யாழ்.மாவட்ட தளபதியாக புதிதாக யார் நியமிக்கப்படுவார் என்பது இன்னும் இரண்டொரு நாளில் தெரியவரும் என்று என்று சொல்லப்படுகின்றது

## உரிமைகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் சொன்னதாவது:-

உணர்வுகளை மட்டுமே வெளிப்படுத்த வேண்டும்; உணர்ச்சிவசப்பட்டு பேசிவிடக்கூடாது என்ற கட்டுப்பாட்டுடன் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. உள்ளதைச் சொன்னாலே கோபித்துக் கொள்ளும் இந்த உலகில் உள்ளத்தில் இருப்பதைச் சொல்லியதால் நம்முடைய சகோதரர்கள் சீமான், அமீர் ஆகியோருக்கு ஏற்பட்ட நிலையை அறிவோம்.

முள்கிரீடத்தோடு சிறை சென்ற அந்தச் சகோதரர்கள் மலர்க்கிரீடத்தோடு வெளியே வந்துள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழன் என்ற குறுகிய வட்டத்துக்குள் இருந்து பேசுவது எனக்குச் சிரமம்.

இங்கே பேசிய திருமாவளவன், இலங்கைத் தமிழரின் வரலாற்றை பல சான்றுகளுடன் சிறப்பாக எடுத்துரைத்தார். இலங்கையில் பாதிக்கப்பட்டு இங்கு அகதிகளாக வரும் தமிழர்களுக்கு உதவ நாம் தயாராக இருந்தாலும் தமிழர்களுக்கேயுரிய தன்மானம் காரணமாக அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதும் சிரமம் என நினைக்கிறேன்.

ஒரு சமூகத்தில் உரிமைகளுக்கு உத்தரவாதம் இல்லாதபோது அங்கு தீவிரவாதம் பிறந்தே தீரும். நாளை சுதந்திரம் அமையும் போது தீவிரவாதிகள் தியாகிகள் ஆவர். வாஞ்சிநாதன் உட்பட பலரும் அந்த வரிசையில் சேர்ந்தவர்கள்தான். அதனால் போராடுபவர்கள் யார் என்பதை காலம்தான் முடிவு செய்யும்.

அங்கு சுமுகத் தீர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏற்படாத காரணத்தால் ஆயுதம் ஏந்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்குள்ள தமிழர்களுக்காக உலகம் ஒட்டுமொத்தமாக குரல் எழுப்பியுள்ளது. இதை உள்ளூரில் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்கள் உணர வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் தீர்வுகாண உடனடியாக போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும். அது உலக நாடுகளின் கடமை- என்றார் கமலஹாசன். (அ-02)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் 'சயனைட்' அருந்தி மரணமான சம்பவத் தைத் தொடர்ந்தே இத்தேடுதல் நடத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலசிங்கம் விடுதிப் பகுதிக்கு ஊடாகச் சென்றவர்களும் சோதனைக்கு உள் ளாக்கப்பட்டனர். எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் கிடைக்க வில்லை.

## ஈழத்தமிழர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர், நடிகைகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தை காலை 8.00 மணியளவில் நடிகர் சங்கத் தலைவர் ஆர்.சரத்குமார் மெழுகுவர்த்தியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையின் வடக்கில், வன்னியில் போரில் சிக்குண்டு உயிர் நீத்த தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நடிகர்கள் அனைவரும் மெழுகுவர்த்தியைக் கொளுத்திய பின்னர்உண்ணா நோன்பை ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட நடிகர்கள், ஈழத் தமிழர்களை காப்பாற்றுவதற்காக இலங்கைப் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு தலையிடவேண்டும் என்று வலியுறுத்திப் பேசினர்.

பிற்பகல் 4.15 மணியளவில் மூத்த நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். உண்ணாவிரதத்தின் போது கலைஞர் மு.கருணாநிதி ஆரம்பித்துள்ள இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கென சுமார் 46 லட்சம் ரூபாவை நடிகர் சங்கம் வழங்கியுள்ளது. இந் நிதியத்துக்கென ரஜினி ரூபா10 லட்சமும், கமலஹாசன் ,ரூபா5 லட்சமும், சரத்குமார் ரூபா2 லட்சமும் வழங்கினர்.

உண்ணாவிரதப் போராட்டத்தின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

''இலங்கைப் பிரச்சினையில் உடனடியாகத் தீர்வு ஏற்பட போர் நிறுத்தம் ஒன்றே வழி. போா நிறுத்தத்தை ஏற்படுத்த மாநில அரசும் மத்திய அரசும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான முடிவுகளுக்கு கலையுல கம் என்றும் துணைநிற்கும்''.

நேற்றைய உண்ணாவிரதப் போராட்டத்தில் தென்னிந்தியாவின் முன்னணி நடிகர்களான ரஜினி, கமல், விஜய், அஜித், ராதாரவி,நெப்போலியன், விஜயகுமார், பிரகாஷ்ராஜ், சிவகுமார், சந்திரசேகர், எஸ்.வி.சேகர், சத்தியராஜ், அர்ஜூன், சூர்யா, கார்த்தி, விக்ரம், கார்த்திக் மற்றும் நடிகைகள் மனோரமா,ராதிகா, மும்தாஜ், மீனா, திரிஷா, நயன்தாரா உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கான நடிகர், நடிகைகள் பங்குபற்றினர்.

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டன.தொடர்ச்சியாக சுமார் ஒரு மணி நேரத்துக்கும் கூடுதலாக நடைபெற்ற மோதல்களால் வடமராட்சியே அதிர்ந்து கொண்டி ருந்தது.இந்தச் சம்பவத்தை அடுத்து வடமராட்சிக் கடலில் தொழிலுக்குச் செல்ல மீனவர்கள் நேற்று அனுமதிக்கப்படவில்லை. (அ-1-203-70-236)

## இராணுவ..(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இப்படிக் கூறியுள்ளார்.

இந்தியாவின் அழுத்தம் காரணமாக இராணுவ நடவடிக்கையில் தளர்வு ஏற்பட்டுள்ளதாக சில அரசியல் கட்சிகள் கூறுவதில் எந்தவித உண்மையும் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

வன்னியை முழுமையாக மீட்கும் வரை இராணுவநடிவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் கோத்தபாய தெரிவித்தார்.

புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஓர் அங்குலம் தானும் எமது படையினர் பின்வாங்க மாட்டார்கள்- என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சொன்னார். (அ-1)

## நாகர் கோவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரையிறக்க கொமாண்டோத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் ஏ530.தொடர் இலக்கத்தினைக்கொண்ட ஹூவர்கிராப்ட் கனரக கலம் ஒன்றும் விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. நீரூந்து விசைப் படகு ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

பெரும் இழப்புக்களை அடுத்து சிறிலங்கா படையின் கலங்கள் காங்கேசன் துறையை நோக்கிச் சென்றன.

இம்மோதலில் கடற்புலிகள் தரப்பில் 7கடற்கரும்புலிகள் மரணமடைந்தனர். இந்தக் கடற்சண்டையில் சிறிலங்கா தரைப் படையினர் செறிவான எறிகணைத் தாக்குதல் நடத்திய அதேவேளை, சிறிலங்கா வான் படையின் சுப்பர் சொனிக் தாக்குதல் விமானங்களும் தாக்குதல் நடத்தியுள்ளன.

இவற்றுக்கு மத்தியில் சிறிலங்கா கடற்படையினருக்கு கடற்புலிகள் அழிவுகளையும் சேதங்களையும் ஏற்படுத்தி யுள்ளனர்.

**அரச தரப்பு**

தாக்குதல் குறித்துப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்திருப்பதாவது:-

நாகர்கோயில் கடற்பகுதியில் கடற்படையினரின் விசேட படகு (SBS) ரோந்துப் படகுகளை (RABS) விடுதலைப் புலிகளின் படகுகள் வழிமறித்தன. 15 படகுகளைக் கொண்டதாக விடுதலைப்புலிகளின் அணி இருந்தது.

கடற்படைப்படகுகள் தமது தந்திரோபாய நுட்பத்தை பயன்படுத்தி, விடுதலைப் புலிகளின் நான்கு படகுகளை அழித்து விட்டனர். மற்றொரு படகுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது.

இத்தாக்குதலில் 7 தற்கொலை தாரிகள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது புலிகளின் உரையாடலை ஒற்றுக் கேட்டதில் அறியமுடிந்தது.

இந்த மோதலில் ஐந்து கடற் படையினர் காயம் அடைந்துள்ளனர் -

விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜானக நாணயக்காரா தெரிவித்ததாவது:-

செம்பியன்பற்றுக் கடற்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கடல் சமரையடுத்து காலை 8.30 மணியளவில் விமானங்கள் விடுதலைப்புலிகளின் படகு கள் மீது தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் இரு படகுகள் முற்றாக அழிக்கப்பட்டன. மூன்று புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் - என்றார். (அ-1)


விற்பனையாகிறது

தரம் -09
மாகாண மட்ட பொதுப் பரீட்சை
கடந்தகால வினாக்கள்
விடையுடன்
(2002-2007)
வியாபாரிகளுக்கு
விசேட விலைக்கழிவு

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:6693

மானிப்பாயில்...........!!!

Certificate in Internet & e - mail
(Online Class!! ஆரம்பம்!!)

உங்களுக்குத் தேவையான E - Mail Account உருவாக்குதல்.
E - Mail அனுப்புதல், உங்கள் படங்களை அனுப்புதல்.
Yahoo Chatting செய்தல் போன்ற பல பயிற்சிகள் (10 hrs only !!)

Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

05 /11/2008 & 08/11/2008 அன்று வகுப்புக்கள் ஆரம்பம்.

மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )

விற்பனையாகிறது

தரம்-9 மாகாண மட்ட
வினா - விடைத் தாள்கள்.
(கடந்த கால வினா - விடை 2007 வரை)
முற்பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

அன்னை புத்தகசாலை,
நவீன சந்தை (பஸ் நிலையம் அருகில்),
யாழ்ப்பாணம் T.P. 9881

தரம்:4 வெற்றித்தேர்வ -12,13 வந்துவிட்டது!!
2009 தரம்:5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கானது
இன்று மாவட்டரீதியிலான பரீட்சை: காலை:6முதல் மாலை:6வரை
நல்லூர்சயன்ஸ்அக்கடமி. மீசாலைமற்ஸ்அக்கடமி. ஆனைக்கோட்டைஅஸ்ரவ்
021 222 9016 021 222 6706 021 222 4031
புத்தகசாலைகளில் பதிவுசெய்தவர்கள் நூளை பெறலாம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org